
# திருக்கோயில்

நவம்பர் & டிசம்ப[redacted]
விலை [redacted]-00






மாண்புமிகு தமிழக முதல்வர்

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தெரிவித்த

# தீபாவளி வாழ்த்து

உலகில் அதர்மம் அழிக்கப்பட்டு, தர்மமும், அறமும் காக்கப்பட்டு, அவையே என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதை உணர்த்தும் நாள் தீபாவளித் திருநாள் ஆகும்.

நாடெங்கும் எவ்வித வேறுபாடின்றி, உவகையோடு இந்த இனிய திருநாளைக் கொண்டாடும் அனைத்து தரப்பு மக்களும் எல்லா வளமும், நலமும் பெற வேண்டும் என்ற எனது விருப்பத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் மனதில் புதிய சிந்தனையையும், மகிழ்ச்சியையும் கொண்டு வந்து சேர்க்கும் தீபாவளித் திருநாளில், அனைவரது இல்லங்களில் ஒளிவெள்ளம் பாய்ந்து குதூகலம் நிறைந்திட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முகப்பு:
பழநி அருள்மிகு
தண்டாயுதபாணி சுவாமி

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை: 35 | திருவள்ளுவர் ஆண்டு 2024 ஸ்ரீமுக ஆண்டு கார்த்திகை, மார்கழி
நவம்பர், டிசம்பர் 1993 விலை ரூ. 6-00 | மணி: 11 & 12

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

கந்தர்சஷ்டிப் பெரு விழா
—ஜி. இராமகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்.
அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர்

ஆடல்காணீரோ, திருவிளையாடல் காணீரோ
—கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

வாரியார் என்றும் வாழ்கிறார்.

அமெரிக்காவில் இந்து சமயக் கோயில்கள்
—அருள்முருக சௌந்தரராச அடிகள்.

கீதைக் குறள்கள்
—அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

திருவரங்கமும் திருநந்தவனத் திருப்பணியும்
—கி. ஸ்ரீதரன்

வினையிருள் அகல
—வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ்.

திருநீலகண்டரும் துளசிதாசரும்
—கவிஞர் காசி

பன்னிரு ஆழ்வார்கள்
—டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்


தீபம்
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

இந்து சமயம்
—டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன்

கண்ணப்பநாயனார்
—பேராசிரியை சுமதி குமாரசாமி

கரூர் ஆநிலையப்பர் ஆலயம்
—ஈரோடு த. விசுவநாதன்

# கந்தர் சஷ்டி விழா



## ஜி. இராமகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்.,

**ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-34**

ஐப்பசித் திங்கள் வளர்பிறை பிரதமையிலிருந்து சஷ்டி முடிய கொண்டாடப்படும் விழா கந்தர் சஷ்டி விழா ஆகும்.

சஷ்டியில் விரதம் இருந்தால் அகமாகிய கருப்பையில் அரிதான மக்கட்செல்வம் வாய்க்கும் என்று இந்தச்சஷ்டிப்பெருவிழாவின் போது விரதம் இருந்து வழிபடுவதை நம் ஆன்றோர்கள் வற்புறுத்துவர்.

கந்தவேளுக்குரிய விரதங்கள் இன்னின்னவென்று வசிட்டமாமுனிவர் கூறியுள்ளதாகக் கந்தபுராணத்தில் காணப்படும் செய்திகள் பின்வருமாறு:

முருகனுக்கு உரிய வார விரதங்களில் வெள்ளிக்கிழமை விரதம் சிறந்தது. பகீரதன் எனும் சக்கரவர்த்தி, வெள்ளிக்கிழமையன்று ஊண் உறக்கமின்றி மூன்றாண்டுகள் விரதமிருந்து முருகப் பெருமானை வழிபட்டு, கோரன் என்றும் அரக்கனால் கவரப்பட்ட தன் அரசை மீண்டும் பெற்று மகிழ்ந்தான்.

முருகனுக்குரிய மாத விரதங்களில் கிருத்திகை விரதம் மிகச் சிறந்தது. கார்த்திகை விடியற்காலை எழுந்து, தூய ஆடைகளை உடுத்தி, கந்தபுராணம் படித்து, நீர் மட்டுமே அருந்தி, இரவு முழுதும் உறங்காமல் தியானம் இருந்து கார்த்திகை விரதம் இருக்க வேண்டும். கார்த்திகை விரதம் இருந்து முருகனை வழிபட மேலான பதவிகள் பெறலாம் என்று ஆன்றோர்கள் கூறுவர். கார்த்திகை விரத மகிமையை சிவபெருமானே கந்தபுராணத்தில் இவ்வாறு சிறப்பித்துக் கூறியுள்ளார்.

''கார்த்திகை மாதர்களே! முருகனை நீங்கள் வளர்த்தபடியால் இவன் உங்கள் மகன் என்னும் பொருளில் கார்த்திகேயன் எனப் பேர் பெறுவான். உங்கள் நாளாகிய கார்த்திகையில் முருகனை வழிபடுவோர்க்கு நாம் இகபர நலன்களை அருள்வோம்' என்று சிவபெருமான் திருவருள் புரிந்ததைக் கந்தபுராணம்.

''கந்தன்தனை நீர்போற்றிய கடனால் இவன் உங்கள்<br>
மைந்தன் எனும் பெயராகுக; மகிழ்வால் எவரேனும்<br>
நுந்தம் பகலிடை இன்னவன் நோன்றாள் வழிபடுவோர்<br>
தந்தம் குறை முடித்தே பரந்தனை நல்குவம் என்றான்''

என்று கூறுகிறது. நாரதர் கிருத்திகை விரதம் பன்னிரண்டு ஆண்டுகள் இருந்து சப்தரிசிகளில் சிறந்தவராகும் பேறு பெற்றார்.

முருகருக்குரிய ஆண்டு விரதங்களில் சிறந்தது கந்தர் சஷ்டி விரதமே ஆகும். ஐப்பசி மாதம் வளர்பிறையில் பிரதமை முதல் ஆறு நாட்களும் காலையில் நீராடி விதிப்படி பூஜை



செய்து, கந்த புராணத்தையும் படிக்க வேண்டும். தினமும் நீர்மட்டுமே அருந்தி வந்து, ஏழாம் நாள் சிறப்பாக வழிபாடு இயற்றிப் பாரணம் செய்வதே கந்தர் சஷ்டி விரத வழி முறையாகும். இதுவே ஒப்பில்லாத விரதம் ஆகும். இவ்வாறு தேவர்களும் முனிவர்களும் விரதமிருந்து மேன்மை பெற்றனர் என்று கந்த புராணம் கூறும் பாடல் இது:—

'வெற்பொடு அவுணன் தன்னை
வீட்டிய தனிவேற் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி
அமரரும் முனிவர் யாரும்
சொற்படு துலையின் திங்கள்
சுக்கில பக்கம் தன்னில்
முற்பகல் ஆதி யாக
மூவிரு வைகல் நோற்றார்.'

மாயை என்னும் அரக்கி ஈன்ற சூரபன்மன், சிங்கமுகன், தாருகாசூரன் ஆகியஅசுரர்கள்சிவ பெருமானை நோக்கி மிகக்கடுமையான விரதம் இருந்து வழிபட்டு ஆயிரத்தெட்டு அண்டங்களை, நூற்றெட்டு யுகங்களாகிய காலம்ஆட்சி செய்யும் வரம்பெற்று அதனால் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் அளவிலாத கொடுமைகள் செய்தனர். தக்கன், சிவபெருமானை அவமதித்துச் செய்த வேள்வியில் கலந்து கொண்ட காரணத்தால் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் இத்தகு துன்பம் நேர்ந்தது.

அரக்கர்களால் அமராவதி கவரப்பட்டு, இருக்க இடம் இன்றி இந்திரனும் அவனைச் சார்ந்த தேவர்களும் முனிவர்களும் பன்னெடுங் காலம் அல்லற்பட்டனர். கருணையால் பிழை பொறுத்துக் காக்கும் வள்ளலாகிய சிவபெருமானிடம் அரக்கர்களை வென்று தம்மைக் காத்தருளும்படி வேண்ட, அரக்கர்களை வெல்லும் வண்ணம் குமாரக் கடவுளைத் தோற்றுவித்து அருளினார் சிவபெருமான்.

''அருவமும் உருவும் ஆகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதி
பிழம்பதோர் மேனி ஆகக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய''.

என்று முருகவேள் அவதாரப் பெருமையைப் போற்றுகின்றது கந்தபுராணம்.

சிவபெருமானுக்கு ஸத்யோஜாதம், வாமதேவம், தற்புருஷம், ஈசானம், அகோரம் என்று வெளிப்படத் தெரியும் ஐந்துமுகங்கள் உண்டு. பரமஞானியரின் உள்நோக்கத்திற்கு மட்டும் புலப்படும் உள்முகமும் ஒன்றுண்டு; சிவனாரின் அம்முகம் அதோமுகம் எனப் பெயர் பெறும். சூரபதுமன் முதலான அரக்கருக்கு வரம் தந்தருளியபோது சிவபெருமான் தம்முடைய சக்தியால் மட்டுமே அவ்வரக்கர்களை வெல்ல முடியும் என்று திருவாய் மலர்ந்தருளியிருந்தார். ஆகவே தேவர்களின் வேண்டுகோளை ஏற்று, சூரபதுமன் ஆதி அரக்கர்களை வெல்லுவதற்காகதாமே ஆறுமுகப் பரம்பொருளாகவும் தோற்றம் கொண்டு அருளினார் என்று விளக்குகிறது கந்தபுராணம்.

சிவம்வேறு ஆறுமுகம் வேறு அன்று; சிவமும் ஆறுமுகமும் ஒன்றே; ஒரு சக்தியே என்பதைச் சிவபெருமானே உமாதேவியாரிடம் விளக்கியருளுகின்றார்.

''உமையே நமக்குஆறு திருமுகங்கள்உண்டு. அவையே முருகனுடைய ஆறுதிருமுகங்கள், ஓம் என்ற குடிலையுடன் நமது மந்திரம் ஆறெழுத்தும் உன்மகனுடைய சடக்கர மந்திரம் ஆகியது; கந்தக் கடவுள் நமது சக்தியே. அவனுக்கும் நமக்கும் வேற்றுமையில்லை. அவன் நம்மைப்போல் யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கின்றான். அவன் குழந்தைபோல தோன்றினாலும் எல்லாவற்றையும் உணர்ந்த பரம்பொருளே. தன்னைப் பக்தியோடு வழிபடுவோர்க்குச் செல்வம். ஞானம் முக்தி, ஆகிய அனைத்தையும் கொடுக்கவல்லவனே கந்தன்; என்று சிவபெருமான் உமையன்னையிடம் ''முருகரும் தாமே'' என்பதை இனிதேஎடுத்து மொழிவதை விளக்கும் பாடல்கள் பின்வருமாறு:—

''நண்முகம் இருமூன் றுண்டால்
நமக்கவை தாமே கந்தன்
தன்முக மாகி யுற்ற;
தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்தம்
மூவிரண் டெழுத்தும் ஒன்றாம்
உன்மகன் நாமத் தோரா
றெழுத்தென உற்ற அன்றே''
''ஆதலின் நமது சக்தி
அறுமுகம், அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போற்
பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமிற் குழவி போல்வான்
யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும்
போற்றினர்க்கு அருள வல்லான்''

இவ்வாறு முருகன் பெருமையை எடுத்து மொழியும் சிவபெருமானார் நூறுகோடி வருடங்களானாலும் முருகன் பெருமையை முற்றிலுமாக எடுத்துக் கூற முடியாது என்றும் கூறுவதால் அளப்பரும் கருணை வள்ளலே கந்தவேள் என்பதை நாம் தெளிந்து கொள்ளலாம்.

''முருகு'' என்ற ஒரு சொல்லிற்கு அழகு, இளமை, மணம் என்பதாகப் பல பொருள் கூறுவர் ஆன்றோர். முருகப் பெருமான், என்றும் இளமை மாறாப் பேரழில் பெருங் கருணை கொண்ட கடவுள் ஆவார். 'மெய் கண்ட தெய்வம் இத்தெய்வமல்லாற் மேதினியில் பிறிதோர் தெய்வம் இல்லை'' என்று போற்றுகின்றார் குமர குருபரர். 'பத்தித் திருமுகம் ஆறுடன், பன்னிருதோள்களுமாய்த் தித்தித்திருக்கும் அமுதம்' என்று போற்றுகின்றார் அருணகிரிநாதர்.

முருகப்பெருமானின் அழகிற்கு வேறு எத்தெய்வமும் ஈடாகாது என்பதை யாவரும் ஒப்புவர். ஓராயிரம் கோடி அழகை ஒரு சேரக் கொண்டு வந்து ஓரிடத்தில் நிறுத்தினாலும் அத்தனை அழகும் முருகனின் கால் தூசி பெறாது என்கிறார் கச்சியப்ப சிவாச்சாரியார்.

''ஆயிரம் கோடி காமர் அழகெலாம் திரண்டொன் றாகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணம் தன்னில்
தூயநல் எழிலுக் காற்றா தென்றிடில் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் பகர வல்லார்!''

என்பது கந்த புராணம்.

முருகரைக் காணக் கண்கள் நாலாயிரமாவது வேண்டும் என்கிறார் அருணகிரிநாதர்.

''மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழில் செங்கோடனைச் சென்று கண்டு தொழ
நாலாயிரம் கண்படைத்திலனே அந்த நான்முகனே''

என்பது கந்தர் அலங்காரம்.

முருகப் பெருமான் தாம் கொண்ட தோற்றத்தால் மட்டுமன்றி, தாம் அருள் புரியும் ஏற்றத்தாலும் மிக்கோனே. மற்ற கடவுளர்கள் குற்றம் புரிந்தாரைத் தண்டித்து மறக் கருணை புரிவர். முருகப் பெருமானோ தீயவரையும் தண்டிக்காமல் திருத்தி ஆட்கொண்டு அறக்கருணை புரிவார். அளவிலாத கொடுமைகள் புரிந்த தீயவனான சூரபதுமனையும் புதுமையான முறையில் சூரசம்காரம் புரிந்தவர் பன்னிருகை பரம்பொருளான முருகப் பெருமான். கடல் நடுவே மாமரமாய் நின்ற சூரனைத் தம் ஞானவேலால் இருகூறாகப் பிளந்தார் முருகப்பெருமான். அவ்விரு கூறும் மயிலும், சேவலுமாகி முருகவேளை எதிர்த்து வந்தன. அறுமுகப் பெருமான் அருள்நோக்கம் புரிந்து மயிலைத் தம் வாகனமாகவும், சேவலைத் தம் கொடியாகவும் கொண்டு அறக் கருணை புரிந்த அருள் புதுமையானது என்று போற்றுகிறார் கச்சியப்ப சிவாச்சாரியார்.

''தீயவை புரிந்தா ரேனும் குமரவேள்
திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி
அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர்
இந்நாள் செய்த
மாயையின் மகனும் அன்றோ
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்''

சூரபதுமனின் ஒரு பாதி 'நான்' என்ற அகங்காரம். மற்றொரு பாதி' 'எனது' என்ற மமகாரம்; ஆணவமலச் சேறு உடைய சூரபதுமன், முருகவேளின் அருட்கருணையாகிய தடாகத்தில் நீராடி தூய்மை பெற்று தொண்டர் வணங்கும் நல்கதி பெற்றான் என்று போற்றுகிறது கந்தபுராணம்.

(தொடர்ச்சி 48-ஆம் பக்கம்)

# ஆடல் காணீரோ...!



கம்பன் கவிநயமணி

**வே. தியாகராஜன்**

**(32)**

திடீரெனத் தான் ஒரு அரசன் என்ற நினைவு வர, 'ஒரு குதிரைச் சேவகனைக்கண்டு எழுந்தது மட்டுமில்லாமல், கும்பிட்டேனே! ஏன்!' என எண்ணி மறுபடியும் ஆசனத்தில் அமரவெட்கமடைந்து நின்றான். அவ்வாறு நிற்கின்ற அரசனைக்கண்டு, வேகமான குதிரை யேறி வந்த இறைவன், 'பாண்டிய! உனது பொருளை எல்லாம் உனது மந்திரியான வாத வூரர் நமக்கும் நம்மைச் சேர்ந்தவர்க்கும் வழங்கிவிட்டான். ஆகவே நல்ல குதிரை களைக் கொண்டு வந்துள்ளோம். தேவர்களுக்கு மாத்திரம் பொருத்தமானவைகளாகவும் (தேவர்களான எம்மிடமிருக்கும்போது மாத்தி ரம் குதிரைகளாகவும் பிறரிடம் வந்தால் நரி களாகவும் மாறுமென்பதைச் சூசனையாக கூறி னார்) மனிதருக்குத் தகாதவைகளாகவும் அறி ஞர்கள் கூறிய விலை வரம்பில்லாதவைகளாக வும் (நரிக்கு ஏது விலை? எவர் பணம்கொடுத்து வாங்குவார்!) இக்குதிரைகள் விளங்கும். குதிரை வியாபாரத்திற்கான நிபந்தனைகளைக் கேள். இந்தக் குதிரைகளை எல்லாம் கயிறு மாறி உன்னுடையவைகளாகக் கொள்ளவேண்டியது. இன்று இரவு வரை இவைகளுக்கு நான் பொறுப்பு. நாளை என்னவாய் இருந்தாலும் எனக்கும் உனக்கும் பேச்சே கிடையாது' என் றார்.

'இன்னவாம் பரிகளெல்லாம் இன்று நீ
கயிறு மாறி
நின்னவாக் கொள்ளும் நீரால் நின்னவாம்
பரியே நாளை
என்னவாய் இருந்தவேனும் எனக்கும்
உன்தனக்கும் கொண்டு
மன்னவா கருமமில்லை பரிவிலை வழக்கீது
என்றார்''.

இது கேட்டு மகிழ்ந்த மன்னன், 'எமது மந்திரி நேர்மையான வியாபாரியாக உம்மைப் பழக்கம் செய்து கொண்டதால் நல்ல அனுபவங் களைப் பெற்றிருப்பார்' எனக் கூறினான். வந்த வணிகர் குதிரைகளின் விவரங்களைக் கூறினார். ஓர் இக்கடும்பரி இது வேகமாகச் செல்லும் குதிரை (ஓரி-நரி-கடும்பரி-கொடுமை யான மிருகம்) சமயம் வந்தால் மதிலைத் தாண்டும். சன்னல்கள் வழியாக நுழைந்துவிடும் பசி வந்தால் தின்னாதவற்றைத் தின்னும் என குறிப்பு).

'காயும் வேல் மன்ன! ஓரிக்கடும்பரி அமையம்
வந்தால்
ஞாயிலும் தாண்டிச் செல்லும்; நாட்டமும்
நுழையாச்சால
வாயிலும் நுழையும் கண்டவெளியெலாம்
வழியாச் செல்லும்
தீயவெம்பசி வந்துற்றால் தின்னாத எனினும்
தின்னும்''

கதையில் இந்த இடத்தில் குதிரைகளைப் பற்றிய விவரங்களடங்கிய அசுவசாத்திரம் இறைவனின் வாக்கு மூலமாகப்பேசப்படுகிறது. (திருவிளையாடற் புராணத்தில் அசுவசாஸ் திரம் தவிர, மாணிக்கம் விற்றபடலத்தில் நவ ரத்தின சாத்திரமும், வேதத்திற்குப் பொருள் அருளிச் செய்த படலத்தில் வேதப்பொருளும் கால்மாறியாடிய படலத்தில் பரதநாட்டிய சாஸ்திரமும் பேசப்படுகின்றது. இது இப்புரா ணத்தின் தனிச் சிறப்பு).

தான் ஏறிவந்த குதிரை தவிர, மற்ற எல்லாக் குதிரைகளையும் பாண்டியனுக்கு அளித்தார் வந்த வியாபாரி. குதிரை கொண்டு வந்த பெருமகனாருக்குப் பாண்டியன் ஒரு வெண்பட்டுத் துணியைச் சன்மானமாக அளித் தான். தனது தலையில் அதை இரண்டாம் கங்கை மாதிரி சூடிக் கொண்டார் அப்பெரு மான்.

இறைவனும் கூடவந்த சிவகணங்களும் பாண்டியனுக்குக் குதிரைகளைக் கொடுத்தபின் மறைந்தனர். பாண்டியன் குதிரை வியாபாரி யின் தோற்றத்தையும், அவரது நேர்மையான பேச்சையும் எண்ணி எண்ணி களிப்புற்றுத் தூங்காதிருந்தான். மாணிக்கவாசகரும் இறை வன் ஆயிரக்கணக்கான குதிரைகளைக்கொண்டு வந்து தன்னைக் காத்த கருணையை எண்ணி விம்மிதமுற்று விழி மூடாதிருந்தார். குதிரை லாயத்தில் கட்டப்பட்ட குதிரைகளும் தூங்க வில்லை.



இறைவன் கைபட்டு நரிகள் குதிரைகளாகி விட்டன. லாயத்தை யடைந்து கட்டப்பட்டதும் நள்ளிரவிலே அவை மீண்டும் நரிகளாகி விட்டன. நரிகள், சுடுகாட்டில் நாம் வசித்த போது சங்குகளின் ஓசையும், பிணத்தை எடுத்து வருவோருடைய கொட்டு முழக்கும், கணவனை இழந்த பெண்கள் அழும் ஓசையும் கேட்டுக் களிப்படைந்தோம். இன்று குதிரைகளாகிப் பகல் பூராவும் மனிதரைச் சுமந்து சவுக்கடிப்பட்டோம். நல்ல வேளையாக நம் உருவம் நமக்கு வந்துவிட்டது. தின்பதற்காகவாவது ஒரு நத்தை, நண்டு ஏதாவது போட்டார்களா? கொள்ளு, பயறு, புல் இதெல்லாம் யாருக்குப் பிடிக்கிறது!

''உள்ளாமார நாம் தின்பதற்குஊன்
சொரிந்தொழுகும்
நொள்ளை நாகில நந்திலை நுழைந்தளை
யொதுங்கும்
கள்ளநீள் சுவைக் காண்ஞெண்டுமில:
இனிக்கடலை
கொள்ளினோடு மைம்பயறு புற்கொள்கை
உளதால்''

என்று பேசிக்கொண்டன. திடீரென்று புறப்பட்ட அவை பக்கத்திலிருந்த மற்ற குதிரைகளை கடித்துக் குடல்களை எடுத்துக்கொண்டு ஓடின. யானை ஓசையும், வாத்யங்களின் ஓசையும் குதிரையின் ஓசையும், பாணர்களின் பாட்டு ஓசையும் நிறைந்த நகரம் எல்லா ஓசைகளையும் அடக்கிக்கொண்டு, நரிகள் ஊளையிட அனைவரும் விழித்துக் கொண்டனர்.

''நரியின் ஓசையும் பல்லிய ஓசையும்
கடுந்தேர்ப்
பரியின் ஓசையும் இன்றமிழ் ஓசையும்

வரியுன் ஓசையும் நிரம்பிய மணிநகரெங்கும்

நரியினோசையாய்க் கிடந்தது விழித்தது
நகரம்''

பாண்டியன் நடந்த செய்திகளை அறிந்து 'மந்திரிகளே! வாதவூரான் செய்த வஞ்சனையைக் கண்டீர்களா! நமது பொருளை எடுத்துக் கொண்டு, காட்டிலுள்ள நரிகளையெல்லாம் குதிரைகளாக மாற்றி மாயம் செய்து நம்மை ஏமாற்றிவிட்டார். இதற்கு என்ன செய்யலாம்!'' எனக் கேட்க மற்ற மந்திரிகள் பதில் சொல்ல முடியாது குனிந்திருந்தபோது, தற்செயலாக மாணிக்க வாசகர் அங்குவர, 'நம் பொருளைக் கொடுத்து நல்ல குதிரைகளாக வாங்கி வந்தீரே? அரச காரியம் உம்மைப்போல் எவராலும் முடிக்க முடியாது' என்று கோபத்துடன் கூற, நடந்ததை அறியாத அந்த நல்லவர் 'நான் வாங்கி வந்த குதிரைகளுக்கு என்ன குற்றம்? என்றார். கோபமடைந்த பாண்டியன் 'குற்றம் ஒன்றுமில்லை ஐயா! குதிரைகள் குதிரைகளாக இல்லாததுதான் குற்றம். அவ்வளவும் நரிகளாக மாறி, மற்ற நல்ல குதிரைகளையும் கொன்றுவிட்டு காட்டிற்குள் ஓடிவிட்டன. சமயம் பார்த்து மோசம் செய்து என் பொருளைக் கவருவதற்காகவா இந்தச் சதி செய்தீர்? வேதம் ஓதும் வேதியர் குலத்தில் பிறந்தீர்? நீர் செய்த காரியத்தை எவராவது செய்திருந்தால் என்ன தண்டனை தெரியுமா!

'புண்ணிய வேதியர் மரபிற்பிறந்தனம் என்ற
ஒரு பெருமை பூண்டாயே நீ
பண்ணிய காரியம் பழுதன்றோ பிறராகில்
தண்டிக்கப்படுவார் என்றார்''

'தண்டல்காரர்களே! வாதவூரானைத் துன்புறுத்தித் தண்டித்து எப்படியாவது நம் பொருளை வாங்குங்கள்' என்றான். ஏவலாளர் அவரைக் கொண்டு போய் வெயிலில் நிறுத்தி கைகளிலும் நெற்றியிலும் கற்களை ஏற்றித் துன்புறுத்தினர். வாதவூரர்

''நாதவோ நாதமுடிவிறந்த நாடகஞ் செய்
பாதவோ பாதகனாம் எனைப் பணிக் கொண்ட
வேதவோ வேதமுடிவின் விளைந்த தனிப்
போதவோ போத நெறி கடந்த பூரணவோ''

என அலறினார். இறைவன் தன் முடியில் இருந்த கங்கையை நோக்கி 'கடல் பொங்கி மதுரையை அழிக்க வருகின்றதோ என உலகமே அஞ்சும்படி வைகையில் வெள்ளமாக வா எனக் கட்டளையிட்டார். மதுரையில் வெள்ளம் வர, சிலர் குழந்தைகளை எடுத்துக் கொண்டு ஓடுகின்றனர். சிலர் தத்தம் மனைவியரை அழைத்துக்கொண்டு ஓடுகின்றனர். சிலர் குழந்தைகளைக் காணாது அலறுகின்றனர். 'எங்கே தங்க இடம்!' எனச் சிலர் தடுமாறினர். 'நம் அரசன் தருமம் தவறினானோ' என்றும் 'சிவபெருமான் திருவிளையாட்டோ!'' என்றும் 'யாரால் இதை அடக்க முடியும். சிவபெருமான் தான் துணை' என்றும் 'நேற்றுக் குதிரைகள் நரிகளாக மாறின. நரிகள் ஊருக்குள் ஊளையிடக்கூடாது. அதனால் ஏற்பட்ட ஆபத்தோ!'' என்றெல்லாம் மக்கள் பேசிக் கொண்டனர்.

மதுரை நகரத்தை வெள்ளம் அழித்து விடுமோ என்று அச்சம் ஏற்பட்டது கண்ட அரசன் வீட்டுக்கொருவராகச் சென்று ஆளுக்கொரு பங்காகக் கரையை அடைக்குமாறு கட்டளையிட்டான். நேரில் செல்ல முடியாதவர் தமக்குப் பதிலாக ஒரு கூலியாளையாவது அனுப்ப வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டது.

இது இவ்வாறாக அந்த நகரில் தென் கிழக்குத் திசையில் உள்ள ஓரிடத்தில் வசித்த வந்தி என்னும் கிழவிக்கும் அக்கட்டளை தெரிவிக்கப்பட்டது. அவள் தினமும் பிட்டுச் சமைத்து, அதைச் சிவபெருமானுக்கு நிவேதித்து, பின்னர் அதனை விற்று வாழ்க்கை நடத்தினாள். அரசனின் கட்டளையைக் கேட்டு 'பிட்டு விற்று உயிர் வாழும் அனாதையான எனக்கு இந்தத் துன்பம் வரலாமா?'' எனக் கண்ணீர் விடலானாள். கூலியாள் எவராகிலும் கிடைப்பாரோ' என அழைத்தாள். பிரதி தினமும் வந்தி தனக்கு நிவேதனம் செய்யும் பிட்டை, நேரில் வாங்கிச் சாப்பிட ஆசை கொண்டான் இறைவன். குண்டோதரனுக்குத் தண்ணீர் கொடுப்பதற்காகத் தனைப் பிரிந்து வைகையாக ஓடும் மனைவியான கங்கையைக் காண வேண்டுமென்று, தன் மனைவியான மீனாட்சியம்மையை வஞ்சித்து உருவத்தை மாற்றிக் கொண்டார் இறைவன்.

'குறட்கு நீரருத்தி வைகைக் குடிஞையாய்
ஒழுகும் கங்கை
அறற்குழல் பிரிவின் ஆற்றாது அன்பினால்
அவளைக் காண்பான்
மறக்கயல் நெடுங்கணாளை வஞ்சித்து
வடிவமாற்றிப்
புறப்படுவாரைப் போலப் போதுவார்
போதமூர்த்தி''

அழுக்கடைந்த கந்தைத் துணியை அணிந்து கொண்டு, தலையிலே கூடையைக் கவிழ்த்துக் கொண்டு, தோளில் மண் வெட்டியைச் சுமந்து கொண்டு புறப்பட்டார். ஞானிகள் வேள்வி செய்த காலத்தில் தந்த ஆகுதியை ஆகாரமாகக் கொண்டும், தனது இடபாகத்திலேயுள்ள அம்மை தந்த அமுதமும் உண்டு அடங்காத பசியினர் போல் புறப்பட்டார். 'கூலியாள் வருவதுண்டோ!' என அழைக்கும் வந்தியின் தெருவில் 'கூலி கொடுத்து எனை வேலைக்குக் கொள்வாருண்டோ!' எனக் கேட்டுக் கொண்டே வந்தார். வந்தி தன் எதிரிலே வந்து நிற்கும் கூலியாளைக் கண்டு 'எனக்களந்த பங்கை அடைத்துத் தருவாயோ!' எனக் கேட்க, வந்தவர் 'என்ன கூலி' என்றார். 'உமக்குப் பிட்டுக் கொடுக்கிறேன்' என வந்தி கூற, 'பசியால் வருந்திக் கொண்டிருக்கிறேன். உதிர்ந்த பிட்டையெல்லாம் எனக்குக் கொடு. முன் பசி நீங்கி பின்னர் வேலை செய்கிறேன்' என்றார். (பிட்டு என்பது பலகாரம். ஒரு வியாஜம் பிட்டு என்பது உலகத்தை விட்டு பிட்டுப் போவது என்று பொருள். உதிர்ந்ததெல்லாம் சிவபெருமானுக்கு என்பது. உலகத்தை விட்டு உதிர்ந்ததெல்லாம் சிவபெருமானுக்கு என்பது; ருத்ர பூமிக்குத்தானே கொண்டு போகிறோம் என்பது சூசனை)

கருணைக் கடலான கூலியாளாக வந்த பெருமான் பிட்டு கேட்க, வந்தி தனது கந்தைத் துணியில் முடிந்து வைத்த பொதியிலிருந்து 'இந்தா சாப்பிடு அப்பா' எனக் கூறிக் கொண்டே அள்ளித் தந்ததை, தனது கந்தையில் பெற்றுக் கொண்ட பெருமான் 'தாய்ப் பாலைக் காட்டிலும் இனிப்பானது. இது ஆலவாய்ப் பெருமானுக்கே அர்ப்பணம்' என வாயில் இட்டுக் கொண்டு தலையை அசைத்து உண்ணலானார்.

'அன்னைமுலைத் தீம்பாலின் அரிய சுவைத்
திஃது அந்தத்
தென்னவனாய்உலகாண்ட திருவாலவாயுடைய
மன்னர்பிரான் தனக்கேயாம் என்றென்று
வாய்ப்பெய்து
சென்னியசைத்து அமுது செய்தார் தீவாய்
நஞ்சமுது செய்தார்''

உலகத்தையே அழிக்கக் கூடிய ஆலகால நஞ்சையே அமுது போன்று சாப்பிட்ட இப்பெருமான் சுவையாகப் பிட்டுக் கிடைத்தால் விடுவாரா? தலையை அசைத்து ரசித்துச் சாப்பிட்டார்.

வந்தி கொடுத்த பிட்டை ரசித்துச் சாப்பிட்ட கூலியாள் 'தாய் இல்லாது அனாதையாக வந்த எனக்குப் பிட்டளித்துக் களைப்புத்

(தொடர்ச்சி 44-ஆம் பக்கம்)



# வாரியார் என்றும் வாழ்கிறார்

**(வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து. வானுறையும் தெய்வமானார் நம் வாரியார் சுவாமிகள் ''எந்த வேளையும் கந்தவேளை நினை'' என்று நமக்கு அறிவுறுத்தி, 'வேலை வணங்குவதே வேலை'' என வாழ்ந்த சுவாமிகள், ஒவ்வொரு சஷ்டிப் பெருவிழாவின் போதும் ஒவ்வொரு முருகர் ஆலயத்தில் இருந்து, முருகரின் அளப்பிலாத பெருமையை எடுத்து மொழிவார். இக்கந்தர் சஷ்டிக்குக் கந்தப் பெருமான் நம் வாரியார் சுவாமிகளைத் தம் கந்தபுரிக்கே சொற்பொழிவுக்காக அழைத்துக் கொண்டார் என்பதே உண்மை. முருகர் திருவடியில் கலந்து முருகன் அடியார்களில் பேரடியாராக என்றும் சிறப்புற்று விளங்கும் வாரியார் சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து சில நயமான பகுதிகள் இக்கட்டுரையாக வழங்கப்படுகிறது.)**

## வள்ளலார் வான் கருணை

வடலூர் திருப்பணி நடந்துவரும் பொழுது ஒருமாதம் ஆள்களுக்குச் சம்பளம் கொடுக்கப் பணமின்றி நான் அணிந்திருந்த அணிகலன்களை அடகு வைத்து 3500 ரூபாய் கடன் வாங்கிக் கொடுத்தேன். கடவுள் நம்மை அணிகலனை அடகுவைக்குமாறு செய்துவிட்டாரே என்று எண்ணி உள்ளம் உலைந்தேன். ஒரு நாள் வடலூரில் வழிபாடு செய்து கொண்டிருந்தேன். அங்கு ஒரு கணவனும், மனைவியும் வந்து வழிபாட்டில் கலந்து கொண்டார்கள். அருகிலிருந்தவர்கள் ''இவர் தெம்மூர் ராஜமாணிக்கம் பிள்ளை. தனமும், மனமும்படைத்தவர்'' என்று கூறினார்கள். நான் அவர்களைப் பார்த்து ''தெம்மூரில் ஒரு விரிவுரைக்கு ஏற்பாடு செய்யுங்கள். ஞானசபைத் திருப்பணிக்கு முடிந்த வரை உதவி செய்யுங்கள்'' என்று கூறினேன். அவர்கள் அன்புடன் அதற்கு இசைந்தார்கள். அதுபடியே ஒருநாள் தெம்மூருக்கு விரிவுரை செய்யப் போயிருந்தேன். அன்று பெருமழை கொட்டிற்று. எங்கும் வெள்ளக்காடாக ஆயிற்று. நிகழ்ச்சி நன்றாக நடைபெறுவதற்கு மழை தடைசெய்கிறதே என்று எண்ணி நான் வருந்தினேன். இரவு 8-மணி மழை நின்றது. வைக்கோற்புல்லைப் பரப்பி அதன் மீது தென்னங்கீற்றுகளையிட்டு சனங்கள் இருந்து கேட்க வசதி செய்தார்கள்.


அன்று இரவு வள்ளலாரைப் பற்றிப் விரிவுரை செய்தேன். விரிவுரை முடிந்தது. பிள்ளை அவர்கள் 500 தருவார்கள். நாம் ஆயிரமாவது கேட்கவேண்டும் என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன். பிள்ளையவர்களும் அவரது மனைவியாரும் ஒரு பெரிய வெள்ளித்தட்டில் 5 சாத்துக்குடி, ஆரஞ்சுப்பழங்கள், ஏழெட்டு வாழைப்பழச்சீப்புகள், நிறைய வெற்றிலை பாக்குகள் வைத்துக் கொண்டுவந்தார்கள்.

நான் இதைப் பார்த்தவுடன் சிறிது அஞ்சினேன். சில சங்கங்களில் பெரிய பூமாலையாகச் சூட்டி, நிறைய பழங்களைத் தட்டில் வைத்துத் தருவார்கள். பழத்துக்கு அடியில் ரயில் செலவிற்காக ரூ.25 மட்டுமே இருக்கும். செட்டிநாட்டில் இரண்டு வாழைப்பழம், ஒரு சாத்துக்குடி, ஆரஞ்சு வெற்றிலை பாக்கு மட்டுமே இருக்கும், ரூ. 1000- வைத்திருப்பார்கள். இப்பொழுது இவர்கள் நிறைய பழங்களை வைத்துக்கொண்டு வந்திருக்கிறார்களே! பணம் குறைத்துக் தருவார்களோ! என்று எண்ணினேன்.

தெம்மூர் ராஜமாணிக்கம் பிள்ளையும், அவர் மனைவியாரும் பழங்களுக்கு மேல் 100 ரூபாய் நோட்டுகள் கற்றையாக வைத்திருந்தார்கள். அதைக்கண்டு நான் அதிர்ச்சியடைந்தேன். ரசீது போடும்பொருட்டுப் பணத்தை எண்ணிப்பார்த்தேன். நூறு ரூபாய் நோட்டுகள் 35 இருந்தன. நான் நகைகளை அடகுவைத்துக் கடன் வாங்கியிருந்த தொகை ரூ.3500. தெம்மூர் பிள்ளை நன்கொடை கொடுத்ததும் 3500-. அதே தொகையை அன்பர் வழங்கியிருக்கின்றார். மூவாயிரமாகவோ, நாலாயிரமாகவே கொடுக்காமல் மூவாயிரத்தைந்நூறே கொடுக்குமாறு செய்த திருவருளின் திறத்தை நினைத்து வியந்தேன்.

## மைசூர் மகாராஜாவின் சந்திப்பு

ஒரு நாள் சென்னையில் தங்கியிருந்த பொழுது ராஜபவனத்திலிருந்து கவர்னர் ஆக இருந்த மைசூர் மகாராஜாவின் பி.ஏ. என்னுடன் பேசினார்.



மகாராஜா தங்களிடம் கேட்குமாறு கூறினார்;- விநாயகப் பெருமானுடைய திருத்தலங்களில் சிறந்தது எது? என்று என்னை வினவினார்.

நான் விநாயகருடைய திருத்தலங்களில் சிறந்தவை மூன்று. 1. பூனாவுக்கருகில் இந்திராணி நதிக்கரையில் தானாகவே முளைத்த விநாயகருடைய கோவில்.

2. கும்பகோணத் தருகிலுள்ள திருவலஞ்சுழி வெள்ளைப்பிள்ளையார் கோயில்.

3. காரைக்குடிக்கருகிலுள்ள மலையிலேயே பெரிய அளவில் செதுக்கியுள்ள பிள்ளையார்பட்டி என்ற கோவில்.

மகாராஜாவின் காரியதரிசி, ராஜா உங்களை சந்திக்க விரும்புகிறார் என்று கூறினார். தேதியும், நேரமும் குறிப்பிட்டு, அதன்படி ராஜ்பவனம் சென்றேன். மகாராஜா அன்புடன் வரவேற்றார். சிறந்த நாற்காலியில் அமரச் செய்து என் அருகில் அமர்ந்தார். பெரிய வெள்ளி டம்ளரில் நல்ல சுவையுள்ள காபியை தம் கையினால் கொடுத்து உபசரித்தார்.

''நீங்கள் முருகனுக்கு அதாரிடி என்று கேள்விப்பட்டேன், முருகனை வணங்கினால் என்ன வரும்!'' என்று கேட்டார்.

நான் 'என்ன வரும் என்பதைப் பிறகு சொல்வேன். என்ன என்ன வராது என்பதை முதலில் சொல்வேன்' என்றேன். அவர்களுக்கென்று சிரித்துக் கொண்டார். நான் ஒன்று கேட்டால் இவர் ஒன்று சொல்லுகிறாரே என்று எண்ணினார் போலும்.

முருகனை வணங்கினால் வறுமை வராது. காலபாசம் வராது. இந்த இரண்டிற்குப் பதிலாக செல்வம் வரும். ஞானம் வரும். நோயும், துன்பமும் முருகனடியார்க்கு நெருங்கமாட்டா.

'முருகா எனவுனை ஓதுந் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவர் வியாதி அடைந்துநையார்
ஒருகால முந்துன்பமெய்தார் பரகதி உற்றிடுவார்
பொருகாலன் நாடு புகார் சமராபுரிப் புண்ணியனே.'

என்பது திருப்போரூர்ச் சந்நிதி முறையின் திருவாக்கு. இவ்வாறு சிறிது நேரம் பேசிவிட்டு அவரிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்பினேன்.

## திருநீற்றின் பெருமை

ஒருமுறை இரயில் பயணம் செய்யும் பொழுது நடந்த நிகழ்ச்சி இது.

ரயிலில் பிரயாணம் செய்கின்ற ஒரு மாணவர் என்னைப் பார்த்துச் சிரித்தார்.

நான் மனதிற்குள் சடக்கர மந்திரம் ஜெபித்துக் கொண்டிருந்தேன். அந்த மாணவர் என்னைப் பார்த்து 'ஐயா! ஏன் நெற்றிக்கு வெள்ளையடித்துக் கொள்கிறீர்'' என்று கேட்டுச் சிரித்தார்.

அவருக்கு வேதத்திலிருந்தோ, தேவாரம் திருவாசகம், திருமந்திரத்திலிருந்தோ பாடல்களைக் கூறி நியாயம் சொன்னால் அவர் ஏற்றுகொள்ளமாட்டார்.

உடனே நான் 'தம்பி! குடியிருக்கின்ற வீட்டிற்கு வெள்ளையடிப்பார்கள். காலியான வீட்டிற்கு வெள்ளையடிக்க மாட்டார்கள்.

நெற்றியில் பகுத்தறிவு குடியிருக்கின்றது என்று நான் வெள்ளையடித்துக் கொண்டேன்' என்று ஓங்கி உரைத்தேன்.

அவருக்கு அந்தப் பதில் ஆணி அறைந்தது போல் இருந்தது. தன் நெற்றியில் அறிவு குடியிருக்கவில்லை. காலி வீடு அதனால் வெள்ளையடிக்காமல் இருக்கின்றோம் என்பது அவருக்குப் புலனாயிற்று. அவர் பேயறைந்தாற் போல் வாயடைத்துச் சும்மா இருந்தார்.

ரயிலை விட்டு இறங்கும்பொழுது 'சுவாமீ சிறிது திருநீறு கொடுங்கள்' என்று கேட்டு வாங்கி திருநீறு பூசிக்கொண்டார். திருந்தினார். திருநீற்றுடன் பொருந்தினார்.

### தல யாத்திரையின் சிறப்பு

துன்பத்துக்குக் காரணம் அறியாமை. இன்பத்துக்குக் காரணம் அறிவு. ஆதலால் ஞானிகள் துன்புறுவதில்லை. 'ஞானிக்கில்லை இன்பமுந் துன்பமும்' என்று நறுந்தொகை நவில்கின்றது.

எனவே நாம் துன்பத்தைத் துடைக்க வேண்டுமானால் ஞானத்தைப் பெறவேண்டும். ஞானத்தைப் பெறுவதற்கு மூன்று வழிகள் உண்டு.

1. ஞானிகளோடு தொடர்பு கொள்ளுதல்.
2. ஞான நூல்களை ஓதுதல்.
3. புண்ணிய நதிகளில் ஆடி, புண்ணியத் திருத்தலங்களைத் தரிசித்தல்.

இந்த முறையில் தல யாத்திரை நமக்கு ஞானத்தைத் தருகின்றன. தல யாத்திரை புரியும்போது பல்வேறு மனிதர்களுடன் பழகும் வாய்ப்பு கிட்டுவதால் உலக அநுபவமும் கிடைக்கின்றது. பசி தாகங்களைப் பொறுத்துக் கொள்ளுகின்ற சகிப்புத் தன்மையும் எய்துகின்றது. பெருந் தனவந்தர்கள் வீட்டில் இருந்தால் மணி தவறாமல் உண்டு உறங்குவர். அவர்கட்குப் பசி தாகம் என்னவென்றே தெரிய வழியில்லை. யாத்திரையில் கையில் பணமிருக்கும். பையில் பண்டமிருக்கும். பசியாற்றிக் கொள்ள முடியாத நிலை ஏற்படும். அப்போது பசியின் அருமையைஅறிய முடிகின்றது. பசியின் துயரை அறிந்தால் வறியவரின் பசியை அகற்றுங் கருணை பிறக்கின்றது. இனி யாத்திரையால் பல மொழிகளை உணரும் இன்றியமையாத ஒரு நிலைமையுங் கிடைக்கின்றது. பல வகையான புதிய புதிய காட்சிகளும் காணக் கிடைக்கின்றன.

### சிரோன்மணி

நான் நேபாளத்தில் தங்கியிருந்தபொழுது என்னுடைய ஆப்த நண்பர் திரு வி.ஏ. ஐயர் ''ஒரு மகானைப் பார்க்கலாம் வாருங்கள்' என்று கூறி என்னை அழைத்துக் கொண்டு சென்றார். அந்த வழி கார் போக முடியாத கொடிய இடம். ஆதலினால் ஜீப்பில் அழைத்துக் கொண்டு சென்றார். 40 மைல்களுக்கப்பால் மலைச்சாரல். ஒரு சிறு நதி ஓடிக்கொண்டிருந்தது. சிறிய சிறிய, பத்து, பதினைந்து கோயில்கள் இருந்தன. அங்கு ஒரு மடத்தில் ஒரு மகான் இருந்தார். அவரை வணங்கினேன். நீண்டநேரம் வேதாந்த விஷயமாக உரையாடினேன். பொழுது போய்விட்டது. நான் அவரைப் பார்த்து 'சுவாமீ! கண்டகி நதியில் சாளக்கிராமங்கள் கிடைக்கின்றன என்று கேள்விப்பட்டிருக்கின்றேன். எனக்கு சாளக்கிராமம் வேண்டும், கண்டகி நதிக்குப் போக வழி யாது!' என்று கேட்டேன்.

அவர் 'கண்டகிநதி 300 மைல் தொலைவில் இருக்கின்றது. வழி கடினமானது. உங்களால் போக முடியாது. உங்களுக்கு சாளக்கிராமம் தானே வேண்டும்! நான் தருகிறேன்' என்று ஐந்து சாளக்கிராமங்களை அளித்தார்.

'இன்னும் என்ன வேண்டும்' என்று கேட்டார்.

## மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இரங்கல் செய்தி

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் லண்டனிலிருந்து சென்னை திரும்பும்போது விமானத்திலேயே திடீர் மரணம் அடைந்து இறைவன் திருவடியைச் சேர்ந்தார் என்ற செய்தியை கேள்விப்பட்டதும் நான் மிகுந்த அதிர்ச்சியும், துயரமும் அடைந்தேன். திருமுருக கிருபானந்தவாரியார் லண்டனில் நோய்வாய்ப் பட்டு, சிகிச்சை பெற்று வந்தபோது அவர் பூரண குணம் அடைய தமிழக அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டது.

முருகப் பெருமானின் பெருமைகளைப் பரப்புவதையே தனது வாழ்நாளில் லட்சியமாகக் கொண்டு நம்மிடையே வாழ்ந்து வந்த வாரியார் சுவாமிகள் அவர்களின் மறைவு ஆன்மீகத்துறைக்கு மட்டுமின்றி தமிழ் மொழிக்கும், தமிழ் இசைக்கும் ஏற்பட்டுள்ள ஈடு செய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்களின் மறைவினால் வாடும் அவரது குடும்பத்தார் மற்றும் அவர்மீது அன்பு கொண்ட பக்தர்கள் அனைவருக்கும், எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

''உருத்ராக்க மணிகள் வேண்டும்' என்று கேட்டேன். அவர் தன் சீடனைப் பார்த்து 'உருத்ராக்க மணிகளைக் கொண்டு வந்து கொடு' என்று கட்டளையிட்டார். அவன் ஒரு சிறு கூடையில் உருத்ராக்க மணிகளைக் கொண்டு வந்து கொடுத்தான்.

சுவாமிகள் அவனைப் பார்த்து 'உனக்குப் பாத்திரமறிந்து கொடுக்கத் தெரியவில்லையே? நிறையகொடு' என்று கூறினார். அவன் ஒரு குட்டிச்சாக்கு நிறைய கொண்டு வந்து கொடுத்தான்.

சுவாமிகளுடைய கழுத்தில் வெள்ளிக் குமிழ் அணிந்து கொண்டிருந்தார். அவர் வீர சைவரோ என்று நினைத்தேன்.

'சுவாமி! தங்கள் மார்பில் அணிந்திருப்பது சிவலிங்கமா? என்று கேட்டேன். அவர் புன்னகை செய்து அந்த வெள்ளிக் குமிழைத் திறந்தார். அதற்குள் தங்கக் குமிழ் இருந்தது. அதைத் திறந்து சுண்டைக்காய் அளவு வெண்மையான தந்த மணியைப் போன்ற ஒரு மணியை எடுத்து என் கையில் கொடுத்தார். 'இது என்ன தெரியுமா?' என்று கேட்டார். சுவாமி சொன்னால் தெரியும் என்று சொன்னேன். அவர் உரக்கச் சிரித்தார். நீ சமர்த்தன். தெரியாது என்பதற்குப் பதிலாக சொன்னால் தெரியும் என்றனையே! உயர்ந்த ஜாதி நாகம் ஒருவரையும் கடிக்காமல் நீண்ட காலம் வாழ்ந்தால் அதனுடைய நஞ்சு திரண்டு நாகமாணிக்கமாக மாறும். அதுபோல் சிவயோகிகளுக்கு யோக சக்தியினால் விந்து நழுவாமல் ஊர்த்துவதேஸாக மேலே சென்று நின்று விளங்கினால், அந்த விந்து சிரோன்மணியாக மாறிவிடுகிறது. இந்த இடத்தில் ஒரு மகான் தவம் செய்து கொண்டிருந்தார். முடிவில் அவருடைய சிரஸ் வெடித்து இந்த மணி வெளிப்பட்டு வந்தது. அப்படி வந்த மணிதான் இது. இதற்குச் 'சிரோன்மணி' என்று பெயர்.

இதற்கு ஒரு பரிட்சை உண்டு. கால் மாட்டிலே வைத்துப் படுத்துக் கொண்டால் அதுவே தலை மாட்டுக்கு வந்து விடும். நேபாள ராஜா இதனை ஒரு வாரம் வைத்துப் பரிட்சை செய்தார். இது மிகவும் அபூர்வமானது' என்று கூறினார். மறுபடியும் அந்த மணியைத் தங்கக் குமிழியில் வைத்து அணிந்து கொண்டார். இதைக் கேட்டு நான் வியந்து நின்றேன். அதனைப் பார்க்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்ததே என்று மகிழ்ச்சியடைந்தேன்.

## முருகனடியார்களுக்கு துன்பம் கிடையாது

இத்தனை ஆண்டுகளாக நான் குளிக்காத நாளோ, வழிபாடு செய்யாத நாளோ கிடையாது. வழிபாட்டின் மகிமையை உணர்த்த இது ஒன்றே போதிய சான்றாகும்.

•

முருகப் பெருமானுடைய அருகில் இச்சா சக்தியாகிய வள்ளியம்மையார் வலப்புறத்தும் தெய்வயானை அம்மையார் இடப்புறத்தும் விளங்குவர். வள்ளியம்மையார் திருக்கரத்தில் தாமரை மலரும், தெய்வயானை அம்மையார் திருக்கரத்தில் நீலோத்பல மலரும் இருக்கும். இதற்கு என்ன காரணம்? தாமரை மலர் சூரியனைக் கண்டு மலரும். நீலோத்பலம் சந்திரனைக் கண்டு மலரும். முருகப் பெருமானுடைய திருமுகத்தில் நெற்றிக்கண் அக்கினி. வலக்கண் சூரியன். இடக்கண் சந்திரன். வலப் பக்கம் உள்ள வள்ளியம்மையார் திருக்கரத்தில் விளங்கும் தாமரை முருகப் பெருமானுடைய இமையா நாட்டம் ஆகிய வலக் கண்ணாகிய சூரிய ஒளிபட்டு 24 மணிநேரமும் மலர்ந்த வண்ணமாக இருக்கும். அதேபோல் இடக் கண்ணாகிய சந்திர ஒளிபட்டு தெய்வயானை அம்மையாரின் திருக்கரத்தில் இருக்கும் நீலோத்பலம் 24 மணி நேரமும் குவியாமல் மலர்ந்த வண்ணமாகவே இருக்கும். இப்பொழுது ஓவியம் வரைபவர்கள் வள்ளியம்மை, தெய்வயானை அம்மை என்ற இருவர் கரங்களிலும் தாமரை மலரையே எழுதி விடுகிறார்கள். தெய்வயானை அம்மையார் திருக்கரத்தில் தாமரை மலர் இருக்குமானால் அது சந்திர ஒளிபட்டு 24 மணிநேரமும் குவிந்த வண்ணமாகவே இருக்கும். ஆகவே ஓவியம் எழுதுகின்றவர்கள் தெய்வயானை அம்மையார் திருக்கரத்தில் நீலோத்பலம் வைத்து எழுத வேண்டும்.

## ஆரோக்கியத்தின் இரகசியம்

எனக்கு அஜீரணம் என்பது என்னது என்று இன்று வரை தெரியாது. காரணம் அரசர் வீட்டு விருந்தானாலும் அளவோடு உண்பவன். ஒரு முஸ்லீம் அன்பர் என்னை பார்த்து 'பசியெடுத்தபின் கையை வாய்க்குள் வைப்பவனும், பசியடங்குவதற்கு முன் கையை வாயை விட்டு எடுத்துக் கொள்பவனும் நோய்வாய்ப்பட மாட்டான்' என்று கூறினார். இதை நான் எப்பொழுதும் நினைவில் வைத்திருக்கின்றேன்.

'அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு'

என்ற திருக்குறளைக் கடைப்பிடிப்பவன். நான் விரிவுரையில் உணவு வகைகளைப் பற்றிச் சுவையாகச் சொல்லும்பொழுது பலர் இத்தனையும் இவர் உண்பாரோ? என்று எண்ணிக் கொள்ளுவார்கள். ஆனால் நான் எப்பொழுதும் எளிமையாக உண்பவன்,

**டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்**

இதன் நுண்பொருள் முருகப் பெருமானைப் பயன் கருதாமல் பக்தியுடன் வழிபாடு புரிபவர்களின் வாழ்வு எப்பொழுதும் மலர்ந்திருக்கும் என்பதாகும். அடியேனுடைய வாழ்வு ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை ஒன்று போலவே அமைந்திருக்கின்றது. எனவே கந்தவேளை எந்தவேளையும் பயன் கருதாமல் பக்தி பரவசத்துடன் வழிபாடு செய்யவேண்டும்.

எனக்கு ஒரு சமயம் ஏழரை நாட்டுச் சனி வந்தது. அதனால் எனக்கு ஏதும் இடர் விளையவில்லை.என் தமையனாரிடத்தில் என் ஜாதகத்தைக் காட்டி 'இப்பொழுதுஎனக்கு ஏழரை நாட்டுச் சனியாயிற்றே! துன்பத்தின் நிழல்கூட எனக்குத் தெரியவில்லையே' என்று கேட்டேன். அவர் நீ முருகனை உபாசிப்பதால் சனி முதலிய கிரகங்களால் உனக்குத் தீங்கு விளையாது' என்று கூறினார்.

சிந்தாதிரிப்பேட்டையில் வசிக்கும் பிரபலமான ஜோதிடர் திரு எம். கங்காதரன் நாயரிடம் என்னுடைய ஜாதகத்தைக் காட்டினேன். அவர் 'முருக உபாசகராகிய தங்களுக்குக் கிரகங்கள் ஒன்றும் செய்யமாட்டா. ஜோதிடம் சொன்னால் பலிக்காது' என்று கூறிவிட்டார்.

**எனக்கினி பிறவி வேண்டாம்**

எனக்கு இளமையிலிருந்தே பிறவித் துயரத்தைக் களைய வேண்டும் என்ற ஆர்வம் வேரூன்றி நின்றது. பற்றுதான் பிறவிக்குக் காரணம்.

'அற்றது பற்றெனில் உற்றது வீடு''

என்பது நம்மாழ்வார் திருவாக்கு. ஆதலால் எந்தப் பொருள்மேலும் பற்று இருக்கக்கூடாது என்று எண்ணி வாழ்பவன். என்னை பகைக்கின்றவனும் வாழ்க என்று எண்ணுவேன்.

''வைததனை இன்சொல்லாக் கொள்வானும்' என்ற திரிகடுகப் பாடலை அடிக்கடி நினைந்து கொள்வேன்.

காந்தியடிகளின் சந்தியசோதனை என்ற நூலை அடிக்கடி படித்து அதன்படி ஒழுக வேண்டுமென்று சிந்திப்பேன்.

பிறரிடத்தில் ஒரு பொருளை இனாமாகப் பெற்றால் அது பிறவியைத் தரும் என்று எண்ணுபவன், உழைத்துத்தான் ஒருவன் வாழ வேண்டும்; 'போனகம் என்பதுதான் உழந்துண்டல்' என்பது ஔவையார் வாக்கு.

ஒவ்வொரு உயிர்களும் துன்பம் இன்றி இருக்க வேண்டும் என்றுதான் எண்ணுகின்றன. துன்பங்கள் பல, 'பல துன்பம் உழன்று கலங்கிய சிறியன்' என்பார் அருணகிரிநாதர்.

துன்பங்கள் அனைத்துக்கும் தலையாயது பிறவித் துன்பந்தான். பத்துத் திங்கள் நெருக்கமான கருப்பையில் கிடந்து அடையுந் துன்பத்தை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் உள்ளம் உலைகின்றது. உண்மையில் அறிவு படைத்த ஒருவன் பிறவித் துன்பத்துக்குத்தான் அஞ்ச வேண்டும்.

நாம் செய்யும் வினைகளால்தான் பிறவிகள் எய்துகின்றன. ஆதலால் பாவஞ் செய்ய அஞ்ச வேண்டும். பிறவித் துயருக்கு அஞ்சும் இயல்பு எனக்கு இளமையிலிருந்தே திருவருளால் எய்தியது. ஆதலால் நெஞ்சாரப் பாவஞ் செய்யக் கூடாது என்ற எண்ணமும் அவனருளால் எய்தியது.

நான் தனிமையில் இருக்கும்பொழுது 'கந்தவேளே! மற்றும் ஒரு தாயின் வயிற்றில் நான் புகாதவண்ணம் காத்தருள வேண்டும்' என்று முறையிட்டுக் கண்ணீர்வடிப்பது உண்டு. நான் அறிவு தோன்றிய நாள்தொட்டு முருகப் பெருமானை உபாசித்து வருபவன். ஆனால் எந்த மூர்த்திகளிடத்திலும் வெறுப்பு இல்லாதவன்.

# வயலூர் முருகனருள்

**சீர்கிரு பானந்த வாரியார் சீமுக
நேர்துலாம் ஆயில்யம் நாண்மீனில்
-நீர்பெருகு
நல்வயலூர் வள்ளல் மலரடி
மன்னினார்
தோல்தமிழும் ஏங்கச் சுடர்.**

7-11-93 அன்று அருள்மொழியரசு டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் வயலூர் வள்ளி மணவாளப் பெருமான் திருவடி அடைந்தார்கள்.

++

## சிவாத்துவப் பெருவிழா

18-11-93 வியாழன் காலை 9.00 மணிக்கு அவர் பிறந்த காங்கேயநல்லூரில் அவர் கட்டிய சரவணப் பொய்கையில் நிகழ்ந்தது.

# அமெரிக்காவில் இந்து சமயக் கோயில்கள்



கல்பாக்கம் அருள்முருக செளந்தரராஜ அடிகள்

அமெரிக்காவில் இந்துக் கோயில்கள் உண்டா என்ற கேள்விகள் பலருக்கு எழுவதுண்டு. வட அமெரிக்காவிலும் கனடாவிலும் நூற்றுக்கணக்கான இந்துக் கோயில்கள் உண்டு. இங்குள்ள இந்து கோயில்களுக்கு 'இந்து டெம்பிள் சொசைட்டி' என்று பெயர். இங்கே சைவம், வைணவம் என்று தனியாகப் பிரிப்பதில்லை. விநாயகர், முருகன், சிவன், பார்வதி லட்சுமி துர்க்கை. வெங்கடேசப் பெருமாள் ஸ்ரீராமர், சீதை, லட்சுமணர், ஆஞ்சநேயர் கிருஷ்ணன், ஐயப்பன் என்று எல்லா சுவாமிகளையும் ஒருங்கே ஒரே கோயிலுக்குள் பார்க்கலாம். ஏதோ ஒரு சில இடங்களில் மட்டுமே தனி முருகன் கோயில் பெருமாள் கோயில் என்று காணலாம். அவற்றுள் இதோ சில ஆலய தரிசனம் வேண்டி வடமெரிக்காவில் நுழைகிறோம்.

நியூயார்க்கில் பிளசிங் என்ற இடத்தில் பிரபலமான விநாயகர் கோயில், பென்சில்வேனியா மாநிலத்தில் பிட்ஸ்பர்க் என்னுமிடத்தில் வில்லியம்பென் ஹில்ஸ் என்ற மலை மீது ஸ்ரீவெங்கடேசப் பெருமாள் கோயில், வாசிங்டன்னில் ஓர் சிவா விஷ்ணு கோயில், மெர்ரிலாண்டு லான்கம் என்னுமிடத்தில் வட அமெரிக்கா முருகன் கோயில், டெக்ஸாஸ் மாநிலத்தில் ஊஸ்டன் நகரில் பியர்லேண்டு என்னுமிடத்தில் ஸ்ரீ மீனாட்சி அம்மன்கோயில், வெஸ்ட் வர்ஜீனியாவில் நியூ பிருந்தாவன் என்று ஓர் கிருஷ்ணர்கோயில், கலிபோர்னியாவில் கான்கார்டு என்னுமிடத்தில் ஓர் பழனியாண்டி சிவன் கோயில், ஒகாயா மாநிலத்தில் க்ளீவ் லேண்டு என்னுமிடத்தில் ஓர் சிவா விஷ்ணு கோயில், பர்கிளே என்னுமிடத்தில் ஹரேராம, ஹரே கிருஷ்ணா கோயில், நியூயார்க் மாநிலத்தில் ரோசெஸ்டர் என்னுமிடத்தில் ஸ்ரீராஜராஜேஸ்வரி கோயில், கொலம்பஸ் என்னுமிடத்தில் 'பார்திய இந்து டெம்பிள் சொசைட்டி'' ஒகாயா மாநிலத்தில் லிபர்ட்டி என்னுமிடத்தில் ஸ்ரீ லஷ்மி நாராயணன் கோயில், மெர்ரிலேண்டு மாநிலத்தில் சில்வர் ஸ்பிர்ங் என்னுமிடத்தில் மங்கலாதேவிஆலயம், கலிபோர்னியா மாநிலத்தில் கலாபாசஸ்என்ற இடத்தில் ஓர் பாலாஜி கோயில், தௌசண்டு ஓர்க்ஸ் என்னுமிடத்தில் 'சாஸ்தா பூஜா' என்னும் அய்யப்பன் கோயில், நியூ ஜெர்சியில் மேட்டுசன் என்ற இடத்தில் ஓர் இராமர் கோயில், நியு இங்கிலாந்து என்ற இடத்தில் ஓர் லட்சுமி கோயில், சான்லிண்டரோ என்னும் இடத்தில் ஓர் இராதாகிருஷ்ணன் கோயில் பாரமௌண்ட் என்னுமிடத்தில் ஸ்ரீநாராயணன் கோயில், லிவர்மோர் என்னுமிடத்தில் சிவன்முருகன்அம்பாள்பெருமாள் எனப் பலரை காணலாம். லாஸ்ஏஞ்சலில் ருக்மணி துவாரகாதேஷ் கோயில்,அரிசனா மாநிலத்தில் உமா என்னுமிடத்தில் பாபாஜி லிங்கன் கோயில், நியு கம்பர் லேண்டில் ஸ்ரீஹரி கோயில், மன்றோ வில்லியில் இந்துஜைனர்கோயில், பிட்ஸ்பர்க்கில் ஸ்ரீசிருடி சாயிபாபா கோயில்,ஜீயார்ஜியா மாநிலத்தில் 'இந்து டெம்பிள் ஆப் அட்லாண்டா,என்ற பாலாஜி கோயில், கலிபோர்னியாவில் சந்தான விஸ்வகர்மா கோயில், ஒக்லேண்டு என்னுமிடத்தில் நியு ஜெர்சியில் வீகாவ்கன் என்ற இடத்தில் சுவாமிநாராயணன் கோயில், மியாமி என்ற இடத்தில் 'இந்து டெம்பிள் ஆப் செளத் புளோரிடா' டென்னீசி மாநிலத்தில் நாஷ்வில்லி என்னுமிடத்தில் ஸ்ரீகணேஷ் கோயில், குவாய் என்னுமிடத்தில் இறைவன் இந்து கோயில் என்று பற்பல கோயில்கள் உள்ளன.

கனடா நாட்டிற்குச் செல்கிறோம்:—

''இந்து டெம்பிள் சொசைட்டி ஆப் கனடா'' என்று ரிச்மாண்டு ஹில் என்னுமிடத்தில் 8 அடி உயர முருகன், 8 அடிஉயர வெங்கடேஸ்வரையும் காணலாம். ஸ்கார்பரோ என்னுமிடத்தில் கனடா கந்தசாமி கோயில் உள்ளது. ஸ்கார்பரோ என்னுமிடத்தில் ஜெய்துர்கா ஆலயத்தைப் பார்க்கலாம்.

டோரன்டோவில் வரசித்தி விநாயகர் ஆலயத்தைக்காணலாம். அட்டாவா என்னும்இடத்தில் ஓர் இந்து கோயில் உள்ளது. கியுபெக் மாநிலத்தில் மாண்டிரீயல் என்னும் இடத்தில் ஓர் திருமுருகன் ஆலயம் என இவ்வாறு எண்ணிக்கொண்டே போகலாம். என்றாலும் இக்கோயில்களில் எல்லாம் இந்து சமயக் கலாச்சாரப்படிதான் அபிஷேக ஆராதனைகளும், விசேஷ விழாக்களும் நடைபெறுகின்றன. இந்தியாவிலிருந்து சென்ற சிவாச்சாரியர்கள் தான் எல்லாவகையான பூஜைகளையும் செய்கிறார்கள்.

மெர்ரிலெண்ட், லாங்கம், வடஅமெரிக்க முருகன் கோயிலுக்குநான் சென்றிருந்த சமயம் அன்று பங்குனி உத்திர விழாவும், ஸ்ரீமுருகன் வள்ளி தெய்வயானைக்கு அபசேக ஆராதனையும் திருக்கல்யாண உற்சவமும் நடந்தது.

ஊஸ்டன் டெக்சாசில் உள்ள ஸ்ரீ மீனாட்சி கோயிலுக்கு சென்ற அன்று நால்வர் விழா நடந்தது. அன்று சுமார் நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியர்கள், சிவலிங்கத்திற்கு பாலாபிஷேகம் செய்து ஆரத்தி காட்டியது வெகு அற்புதமாக இருந்தது. தமிழ்நாட்டில்கூட இதுபோல நடப்பது கிடையாது.

கலிபோர்னியா, கான்கார்டு, பழனியாண்டி சிவன்கோயிலில், பழனி தண்டாயுதபாணிக்குப் பல குடங்கள் பால் கொட்டி அபிஷேகம் செய்த காட்சியை கண்ணார கண்டு களித்தோம். இங்கே 108 சங்காபிஷேகம் நடப்பதுண்டு.

கனடா நாட்டில் டோரண்டோவில் உள்ள ஸ்கார்பரோ என்னுமிடத்திலுள்ள துர்க்கை கோவிலில் நூற்றுக்கணக்கான பெண்கள் அணிவகுத்து அமர்ந்து நடத்திய திருவிளக்குப்பூஜை கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது.

டோரண்டோ, ரிச்மாண்டு ஹில்லிலுள்ள 8 அடி உயரமுள்ள ஸ்ரீமுருகனுக்கு அபிஷேக ஆராதனையும் அதற்குப்பின் உற்சவரை முருகனடியார்கள் தூக்கிக் கொண்டு கோவிலை வலம் வந்தது நாம் கனடாவில் இருக்கிறோமா, தமிழகத்தில் இருக்கிறோமா என்று சிந்திக்க வைத்துவிட்டது. தமிழர்கள் நிறைந்த ஊர் டோரண்டோ என்றாலும் இங்கு 1.5 இலட்சம் இலங்கைத் தமிழர்களும் வாழ்கிறார்கள் என்பதாகும். இங்கே மே மாதம் 22 தேதி முதல், ஜூன் 5-ந் தேதி வரை 15 நாட்கள் விநாயகருக்கு விழாவும், ஜூன் மாதம் 13-ந் தேதி முதல் 27-ஆம் தேதி முடிய ஸ்ரீமுருகனுக்கு விழாவும், செப்டம்பர் 1-ந்தேதி முதல் 10-ந் தேதிவரை ஸ்ரீபெருமாளுக்கு விழாவும் நடத்துகிறார்கள். நான் ஜூன் 19, 20 ஆகிய தேதிகளில் கலந்து கொண்டு அருள் முருகனின் அற்புதங்களைப் பற்றி பேசினேன்.

இங்கே தினமும் பூஜைக்கும், விழாவுக்கும் நிரந்தரமாக நாதஸ்வர தவில் வித்துவான்கள் இருக்கிறார்கள் என்பதைக் காணும்போது, நம்மைவிட ஒருபடி மேலாக பூஜை செய்கிறார்கள் என்பதாகும்.

அமெரிக்க கனடா ஆகிய இரு நாடுகளிலும், பெரும்பாலும் எல்லா கோவில்களிலும் ஏகாதசி, பிரதோஷம், கிருத்திகை, பௌர்ணமி மாதப் பிறப்பு, வருடப்பிறப்பு மற்றும் தமிழகத்தில் கொண்டாடப்படும் ஒவ்வொரு விசேஷ நாட்களிலும் இங்கும் விசேஷ பூஜைகள் உண்டு கந்தர் சஷ்டி, வைகுண்ட ஏகாதசி என்று.

அர்ச்சனைக்கு 5 டாலர், 10 டாலர், அபிஷேகத்திற்கு 51 டாலர், குழந்தைக்கு அன்னப்பிரசாதம் வழங்குதல் 21 டாலர், மொட்டையடித்தலுக்கு 21 டாலர், உபநயனத்திற்கு 151டாலர், திருமணத்திற்கு 351 டாலர் என்று வசூலிக்கிறார்கள். சில கோவில்களில் அதிகமாக வசூல் செய்வதும் உண்டு. தேங்காய் பழப் பிரசாதம் உண்டு. சிலகோயில்களில்தான் வெற்றிலை பாக்கு வைக்கிறார்கள், கற்பூரம் ஏற்றி தீபாரதனை உண்டு.

முக்கிய விசேஷங்களினையும், நிகழ்ச்சிகளையும், சனி, ஞாயிறு நாட்களில் மட்டுமே வைத்துக் கொள்கிறார்கள்.

## சைவமும், வைணவமும் ஒன்று



**அடியேன் 16 மாகாணங்கள் சுற்றியிருக்கின்றேன். கடல் கடந்தும் பல நாடுகள் சென்றிருக்கிறேன். இதுவரை நான் ஒரே பக்கமுள்ள காகிதத்தைக் கண்டேனில்லை. ஒரு பக்கமுள்ள கடிதம் எங்காவது இருக்க முடியுமா? எத்துணை மெல்லிய கடிதமாயிருப்பினும் அதற்கும் இரு பக்கம் இருந்தே தீரும். அதுபோல ஒரே கடவுளுக்கு இரு பக்கங்கள். ஒன்று சிவம், ஒன்று விஷ்ணு.**

# கீதைக் குறள்கள்



**அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்**

முன் தொடர்ச்சி

மயக்கத்தால் வந்திடும் தீமையறி யாது
துயருறும் தாமத குணம் (18[25)

ஊக்கம் உறுதியுடன் பற்றும் அகந்தையும்
நீக்கிவெற்றி தோல்விகரு தாது . (18[26)

கருமங்கள் ஆற்றிடும் கர்த்தாசாத் வீகக்
கருத்தா எனக்கொள்வ ராம் ( ,, )

ஆசையுடன் கருமப் பயனை அடையப்பே
ராசை மிக்கவ னாய்த் (18[27)

தீயவனாய்த் தூய்மையின்றி இன்பமும் துன்பமும்
மேயவனாய் இவ்வுல கில் ( ,, )

எத்தொழிலும் செய்வோன் இராசத கர்தாவெ
னத்தக்கோர் கூறிடு வர் ( ,, )

வளரா, அறிவுடன் வஞ்ச மனமும் (18[28)
தளராத் துயருமுடை யோன்

முரட்டுத் தனமும் முழுச்சோம் பலுடன்
உரங்கிச்செய் வோன்தாம தன் ( ,, )

அறிவு மனவுறுதி ஆகியகு ணத்தால்
செறிந்த நிலைமூன்று கேள்; (18[29)

செய்யத் தகாதது தக்கது சிந்தித்துச்
செய்வன செய்தும் மற்று (18[30)

தகாதனசெய் யாது தவிர்த்தும் அஞ்சியே
எக்காலும் பந்தம் விடுத்து ( ,, )

உய்யும் வகையை உணர்ந்த அறிவே
ஐயமில்சாத் வீகஅறி வாம் ( ,, )

தருமம் அதருமம் தக்கதகா தென்று (18[31)
கருதா இராசதம் ஆய்ந்து.

அதருமத்தை ஆன்ற தருமமெனக் கொள்ளும்
குதர்க்கஅறி வேதாம த்ம் (18[32)

என்றும் பிராணன் மனம்இந் திரியங்கள்
ஒன்றி நிறுத்தும் உயர் (18[33)

யோக உறுதியே சாத்விகம் ஓங்கிய
யோக நிலையாம் மற்று (18]33)

அறம்பொருள் இன்பமெனும் மூன்றைமட்டும் ஆய்ந்து
திறமை யுடன்கருமத் தின் (18[34)

பயனையே பார்க்கும் மனவு றுதியே ( ,, )
வியக்கும் இராசத மாம்

தூக்கம் துயரம் கலக்கம்அச் சத்துடன்
ஏக்கம் இவற்றுடன் மற்று (18[35)

செருக்கும் மிகுந்த உறுதியும் தீமை
தருந்தா மதவுறுதி யாம் ( ,, )

துய்த்திடும் இன்பங்கள் துன்பமாய் மூவகையில்
உய்ப்பதைக் கூறுகிறேன் கேள் (18[36)

தொடக்கத்தில் நஞ்சாகத் தோன்றி இறுதியில்
குடங்கை அமிழ்தமே யாம் (18[37)

ஆன்ம அநுபவம் தூயமனம் உள்ளோர்க்குத்
தோன்றுவதே சாத்விகஇன் பம் ( ,, )

இன்பமாய்த் தோன்றி இறுதியில் துன்பமாய்
ஒன்றும் இராசதஇன் பம் (18[38)

துவக்கத்தும் பின்முடிவி லும்மயக்கம் தூக்கம்
அவமாம் தடுமாற்றத் தோடு (18[39)

சோம்பல்தொடர்ந்துகொடுத்திடும்இன்பத்தை
ஓம்புதலே தாமதஇன் பம் ( ,, )

மண்ணிலும் விண்ணிலும் வாழுயிரை முக்குணம்
திண்ணமாய்ப் பற்றிநிற் கும். (18[40)

இயல்பாம் குணத்திற் கியைந்தே வருணம்
இயல்பாக நான்குவகுத் தேன் (18[41)

அகம்புறம் இந்திரி யங்கள் அடக்கம்
மிகநேர்மை பக்திதவம் பல் (18[42)

மறையறிவு தூய்மை பொறுமை வளமாய்
நிறைந்தோரே அந்தண ராம் ( ,, )

வன்மை திறமை மனவுறுதி போர்க்களத்தில்
பின்வாங்கா மை, நல் அறிவு (18[43)

வள்ளல்தன் மையுடன் ஆண்மை வளமாக
உள்ளவனே காவல னாம் ( ,, )

வணிகம் பசுக்கள் வளர்த்தல் உழவு
வணிகரின் உற்ற குணம் (18[14)

பிறர் ஏவல் செய்தே பிழைத்திடுவேன் என்போன்
உறவால் அடிமையா வான் ( ,, )

அவ்வவர் கர்மத்தால் அவ்வவர் எவ்விதம்
செவ்விய ராம்வகை கேள் (18[45)

எங்குமுள ஈசனுக்கு நல்லதோர் பூசனை
இங்கொருவன் செய்தொழி லாம் (18[46)

நன்கர்ம மே பிறர் தம்கர்மத் தின்மேலாம்
என்றுசெய் தல்மிக்க நன்று (18[47)

இயல்பான கர்மம் இழிவென்று எண்ணல்
இயைபுடைய தாகாஎன் றும் (18[48)

தீயினைச் சேர்ந்த புகையினைப் போன்றதாம்
வாய்ந்தகர் மத்தின் குறை. ( ,, )

சித்தத்தை நன்றடக்கி ஆசை சிறிதுமிலான்
சித்திபெறும் நற்துறவி யாம் (18[49)

சித்திபெற்றோன் பிர்மத்தின் ஞானம்
திளைத்திடச்
சுத்தநெறி கூறுகிறேன் கேள்: (18[50?

அடக்கமும் ஆன்றறிவின் தூய்மையும்பெற்றுத்
திடமாய்ப் புறப்பொரு ளில், (18[51)

நப்பாசை விட்டுத் தனிமையை நாடியே
ஒப்பில் தியானம்செய் தும் (18]52)

உணவைச் சுருக்கி மனம்மொழிமெய்
உள்ளடக்கிச்
நுணங்கா உறுதி யுடன் (18[53)

அகங்காரம் வன்மை அசட்டுச் செருக்கும்
அகற்றி உடை மைக்கர்வம் விட்டு ( ,, )

காமம் குரோதம் கடிந்தநல் சாந்தநிலை
ஏமநெறியாம் பிர்மமா தற்கு ( ,, )

பிருமமாய் இன்பதுன்பம் நேரெனப்பெற்றோன்
பொருந்தும் மனமுடை யோன் (18[54)

எவ்வுயிரும் ஒப்பெனும் எண்ணம்
உடையோர்கள்
இவ்வுலகில் எம்பக்த னாம் ( ,, )

அப்பக்தி உண்மையாய் என்னை அறிவித்துத்
தப்பாது சேர்வர் எனை (18[55)

எதுசெயினும் என்னைச் சரணமெனக்
கொள்வோர்
கதுமென நற்பதம்சேர் வர் (18[56)

புத்தியோ கத்தால் பொறுப்பை விட்டபின்
சித்தத்தை என்பால் நிறுத்து (18[57)

சித்தத்தை என்பால்வைப் போற்குச் சிறிதளவு
தொத்தாது கேடுஎன் றும் (18[58)

இத்தை அறியார் இறுமாப்பால் எய்திடுவர்
நித்தம்துன் பங்கள் பல ( ,, )

இறுமாப்பால் இங்குநீ போர்புரி யமறுத்தால்
உறுத்திடும் உன்இயற்கு ணம் (18[59)

மயக்கத்தால் இங்கு மறுப்பதோ பார்த்தா?
இயல்பாய்நீ யேசெய்வாய் பின் (18[60)

உயிரினை மாயையால் நானே உடலில்
இயைத்து, வுள் நிற்பேன்நா னும் (18]61)

பரமனையே தஞ்சமடை பார்த்திபா? வீடாம்
பரகதியை நீயடை வாய் (18[62)

மறைபொருளைச் சற்றும் மறைக்கா
துரைத்தேன்
திறனாய்ந்து செய்விருப்பம் போல் (18[63)

நண்பனென நானுனக்கிப் பேரிகசி
யம்நவின்றேன்
உண்மையாய் உன்நலத்திற் காம்.. (18[64)

மனமொன்றி பக்தியுடன் என்னை வணங்கின்
எனக்கினியோய் என்னையடை வாய் (18[65)

தருமம் துறந்து சரணடைக உன்னை
வருத்திடும் பாவங்கள் போம். (18[66)

பணிபுரியான் பக்திதவம் இல்லான் செவி
சாயான்
துணிந்து எனைப்பழிப் போன் (18[67)

பாவிக ளென்றே இதனைப் பகராது
மேவிநன்று வாழ்ந்தி டுக. (18[68)

என்பக்தர் கண்டே இதனைப் பகர்ந்திடுவோர்
என்னை அடைவர் இனிது

எனக்கு நயந்து பணிபுரி வோனே ( ,, )
எனக்கு மிகஇனிய னாம்.

நம்ஞான வேள்வி உரையினை நன்குகற்போ
ரும் சிறந்த எம்பக்த ராம் (18[70)

நம்பி இதனைமுற்றும் நன்குகேட் போர்புண்ணி
யம்செய் தவர்களா வர் (18[71)

அருச்சுனா! நன்று அனைத்தும் கேட்டாயா!
இருள்மயக்கம் தீர்ந்தனவோ! கூர் (18[72)

(குறிப்பு : கண்ணபிரானின் இக்கேள்விக்கு அருச்சுனன் கூறிய பதில் :—

''உம் அருளால் என்மயக்கம் தெளிந்தது. நல்ல அறிவைப் பெற்றேன். என் ஐயம் யாவும் அறவே ஒழிந்தன. இனி உம் கட்டளைப்படியேநான்நடப்பேன்'' (18[73)

திருதராட்டிரனிடம் சஞ்சயன் கூறுகிறான்

''கண்ணனுக்கும் அருச்சுனனுக்கும் இடையே நடந்த மகத்தான உரையாடலைச் செவிமடுத்தேன். என் உடல் சிலிர்த்தது. வியாச பகவான் அருளால் இதனைக் கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. புனிதமாம் இவ் அற்புதமான உரையாடலை நினைந்து நினைந்து மகிழ்கிறேன். அரசே! (திருதராட்டினன்) எங்கு யோகேசுவரனான கண்ணபிரானும் வில்வீரன் பார்த்திபனும் இருக்கின்றனரோ அங்கு வளமும் வெற்றியும் மகிழ்ச்சியும் நீதியும் நிலைத்திருக்கு மென்று உறுதியாக நான் நம்புகிறேன்.''

**முற்றும்.** (18[74-78)

# திருவரங்கம் திருக்கோயிலும் திருநந்தவனமும்

**கி. ஸ்ரீதரன்,** எம்.ஏ.

பதிவு அலுவலர், தொல்பொருள் ஆய்வுத் துறை, திருச்சி.

தமிழகத்துக் கோயில்களில் சிறந்ததொரு கோயில் திருவரங்கம். வைணவர்களுக்குக் கோயில் என்றால் திருவரங்கமே யாகும். 108 வைணவத் தலங்களில் முதன்மையானது. பூலோக வைகுண்டம், பெரியகோயில், போக மண்டபம் என்றெல்லாம் போற்றப்படுகிறது. ஆழ்வார்கள் அனைவராலும் மங்களாசாசனம் செய்யப்பெற்றது. நாதமுனிகள், உய்யக் கொண்டார், மணக்கால்நம்பி, ஆளவந்தார், இராமாநுஜர், எம்பார், மணவாள மாமுனிகள் வேதாந்த தேசிகர் போன்ற வைணவ ஆசாரி யர்கள் ஸ்ரீரங்கத்திலே தங்கி வைணவத்தை வளர்த்த பெருமை உடையது இத்திருத்தலம்.

திருவரங்கம் திருக்கோயில் வரலாற்று சிறப்பும் உடையது. சுமார் 700-க்கு மேற் பட்ட கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன. இக்கோயில் எவ்வாறு போற்றிப்பராமரிக்கப் பட்டது என்பதைக் கல்வெட்டுச் செய்திகள் விரிவாகக் கூறுகின்றன. சோழ மன்னர்கள், பாண்டிய மன்னர்கள், போசள மன்னர்கள், விஜயநகர நாயக்க மன்னர்கள் காலந்தோறும் இக்கோயிலில் சிறப்பான வழிபாடுகளுக்குத் தானமளித்துள்ளனர். கோயிலில் கோபுரங்கள், சிற்ப அழகு மிக்க மண்டபங்கள், பல்வேறு சன்னதிகள் பல்வேறு காலங்களில் கட்டியதால் கோயில் விரிவடைந்து கொண்டே வந்துள்ளது. சோழர், பாண்டியர், போசளர், விஜயநகர மற்றும் நாயக்கர் கால கட்டடக்கலை, சிற்பம் மற்றும் ஓவியக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட் டாக விளங்குகிறது. தலவரலாற்றுப் பெருமை சமயம், இலக்கியம், கலை, பண்பாடு ஆகிய வற்றின் இருப்பிடமாய் திருவரங்கம் திருக் கோயில் திகழ்கிறது என்றால் மிகையில்லை.

திருவரங்கம் திருக்கோயில் வழிபாட்டு முறையே தனிச்சிறப்பு வாய்ந்தது. இங்கு பெருமாளுக்கு கோயில் நந்தவனத்திலிருந்து கொண்டு வரப்படும் பூக்களையேதான் சாத்து வார்கள். வெளியிலிருந்து வரும் மலர் பயன் படுத்துவதில்லை. எனவே திருநந்தவனங்களை அமைத்து கோயிலுக்கு மலர் அளிப்பதை புனித மாகக் கருதியதால் இக்கோயிலுக்கென்று பல நந்தவனங்கள் இருந்ததாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. திருவரங்கம் கோயி லில் காணப்படும் சுமார் 80-க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் கோயில் நந்தவனம் பற்றிய செய்திகளைத் தருகின்றன.

நம்பெருமாளுக்குப் பூத்தொடுத்து அணிந்து மகிழ்ந்தும், நந்தவனங்களைப் பராமரித்தும் வந்தவர்கள் பலர். தொண்டரடிப் பொடி யாழ்வார் திருவரங்கத்தில் நந்தவனப்பணி செய்து பூக்குடலை ஏந்திபூக்களைப் பறித்துத் தொடுத்து இறைவனுக்கு அணிவித்து மகிழ்ந் தார். திருமாலை என்ற பிரபந்தமே இயற்றி னார். தொண்டரடிப் பொடியாழ்வார் பரா மரித்த நந்தவனத்தை தாம் கட்டத் தொடங்கி கிய மதில் சுவர் பாதித்துவிட கூடாது என்பதற் காக திருமங்கையாழ்வார், நந்தவனப்பகுதியை இருந்தவாறேவிட்டுவிட்டு திருச்சுற்று மதிலைக் கட்டி முடித்தார் எனக் கூறப்படுகிறது. தொண்டரடிப்பொடி ஆழ்வார் பராமரித்த நந்தவனத்திற்கு அளித்த முக்கியத்துவத்தைப் பார்த்தோம். தற்பொழுது இக்கோயிலின் ஐந் தாம் பிரகாரத்தில் வசந்த மண்டபம் இருக்கு மிடத்தில் அதனைச் சுற்றி நந்தவனமும் தோப்பும் உள்ளது. இதுவே தொண்டரடிப் பொடி ஆழ்வார் பராமரித்த நந்தவனமாக இருந்திருக்க வேண்டும். இப்பகுதியை மேலும் சீர்படுத்தி புதிய செடிகளை வைத்து நந்த வனத்தை சிறப்பாக அமைக்கும் பணியில் திருவரங்கம் கோயில் துணை ஆணையர் திரு. ப. தனபால் அவர்கள் மேற்கொள்ளும் முயற்சி யைப் போற்றாமல் இருக்க முடியாது.

நந்தவனங்கள் பற்றி கூறும் கல்வெட்டுச் செய்திகளை இனிக் காண்போம். கல்வெட்டுக் களில் பல்வேறு நந்தவனங்களின் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. கிடாரங்கொண்ட திரு நந்தவனம், வீர ராசேந்திர அதிகமான் நந்த வனம், மதுராந்தக நந்தவனம், மல்லி திரு நந்தவனம், நெறியான் மாதவியார் திருநந்த வனம், கங்கை கொண்ட சோழ முனையதரர் திருநந்தவனம், திருவரங்கத்தாழ்வார் திரு நந்தவனம், கரிமாணிக்க நந்தவனம், வீர சோழ திருநந்தவனம், ஸ்ரீசடகோபன் திரு நந்தவனம், கோதை ஆண்டாள் திருநந்தவனம் ஆனைவிடங்கியார் திருநந்தவனம், செயங் கொண்ட சோழன் திருநந்தவனம், இராஜாதி ராஜன் திருநந்தவனம், ஆளப் பிறந்தான் திருநந்தவனம், வில்லிதாசன் திருநந்தவனம், சக்கரபாணி திருநந்தவனம், பெருந்தேவி திரு நந்தவனம், திருவரங்கதாசன் திருநந்தவனம், சூடிகொடுத்தாள் திருநந்தவனம், ஸ்ரீமதுராந்த கன் பெரிய திருநந்தவனம், பெரும்புலியூர் ஸ்ரீபாதபிச்சன் நந்தவனம், ஸ்ரீரங்கநாச்சியார்



திருநந்தவனம், நாராயணன் அமுதனார் திருநந்தவனம் போன்று பல நந்தவனங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இவை பல்வேறு காலத்தில் அமைக்கப்பட்டவை. இவை எங்கிருந்தது என்பதையும் அறிய இயலவில்லை எனினும் திருஅரங்கப்பெருமாளுக்கும் கோயிலுக்கும் பூ மாலை சாத்துவதற்காக அக்காலத்தில் நந்தவனங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அமைத்திருக்கின்றனர் என்பதை அறியும் பொழுது நம்மனம் மகிழ்ச்சி அடைகிறது.

நந்தவனத்திலிருந்து பெருமாளுக்கு அளிக்கப்படும் மாலை 'திருப்பள்ளித்தாமம்' 'திருத்தோள்மாலை' எனப் பெயரிட்டு அழைக்கப்படுகிறது. கோயில் நந்தவனங்களைப் பராமரிப்பதற்கென்று நிலம் தந்துள்ளனர். இவ்வாறு அளிக்கப்பட்ட நிலம் 'திருநந்தவனப் புறம்' என்றும் 'திருமாலைப்புறம்' எனவும் குறிக்கப்படுகிறது. நந்தவனத்தில் பணி செய்தவர்கள் 'ஸ்ரீவைணவர்கள்' ஆவர். இவர்கள் அரங்கத்துப் பெருமானை என்றென்றும் வழிபடும் பாகவதர்கள்' எனப்படுவார்கள், நந்தவனத்தில் பணியாற்றிய ஸ்ரீவைணவர்களின் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. திருவரங்கப் பிச்சர், திருமோகூர்பிச்சர், திருவாய்ப்பாடி நம்பி, திருப்பாற்கடல் தாசர் என்று சில பெயர்கள் காணப்படுகின்றன. 'திருநந்தவனம் செய்து திருப்பள்ளித்தாமம் பறித்து திருமாலை எடுத்துப் பணிமாறக் கடவதாகவும்' என்று கல்வெட்டு கூறுகிறது. நந்தவனத்தில் செங்கழுநீர், செந்தாமரை, செண்பகம், சதபத்தி, கருமுகை, கூவளை, நந்திவாத்தம் ஆகிய மலர்கள் பயிரிடப்பட்டதாக அறிய முடிகிறது. இது மட்டுமல்ல, நந்தவனத்தில் பயன் தரும் மரங்களான வாழை, தென்னை, மா, பலா, நெல்லி, நாவல் ஆகிய மரங்கள் பயிரிடப்பட்டு கோயிலுக்குக் காய்களை வழங்கியது. மன்னர்கள் பலர் தாமும், தம் குடும்பத்தாரும் நலமடைய மலர் மாலைகளை சாத்துவதாக வேண்டி தானம் அளித்த செய்தியைப் பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

ஆகவே நந்தவனங்கள் கோயிலில் முக்கியத்துவம் பெற்று விளங்கியதை காண்கிறோம்.

திருஅரங்கப்பெருமானுக்கு அணிவிக்கப்படும் மாலை மனத்தை கவரும் வண்ணம் உள்ளது. இன்று கோயிலுக்கு மாலைகளை அளிக்கும் கைங்கரியத்தை 'மதுரகவி சுவாமிகள் நந்தவனம்' செய்து வருகிறது. காவிரிக்கரையில் இது உள்ளது. இந்நந்தவனத்தை சுமார் 120 ஆண்டுகளுக்கு முன்னர் திருவரங்கத்தில் வாழ்ந்த மதுரகவி சுவாமிகள் என்பவர். ஸ்ரீ ஸ்ரீரங்கம் கோயிலுக்கு மாலை கைங்கர்யம் செய்வதற்காக இதனை நிறுவினார். இதனை பாகவதர்கள் எனப்படும் ஸ்ரீவைணவர்கள் பராமரிக்கின்றனர். இவர்கள் ஊதியம் ஏதும் பெறுவதில்லை. அரங்கனுக்கு செய்யும் தொண்டாகவே கருதுகின்றனர். இவர்கள் வெவ்வேறு ஊரைச் சேர்ந்தவர்கள். இங்கு பணி செய்ய வேண்டும் என்ற நோக்கம்பிறந்து இங்கு வந்தவர்கள். இந்நந்தவனத்தில் செண்பகம், பாதிரிப்பூ, மகிழம்பூ, மனோரஞ்சிதம், வெள்ளை-மஞ்சள்-சிகப்பு விருட்சி பூ, மல்லிகை நந்தியாவட்டை, செங்கழுநீர், தாழம்பூ, அரளி, குருக்கத்தி, சம்பங்கி, துளசி, கதிர்பச்சைப் போன்ற பூக்கள் பயிரிடப்படுகின்றன.

அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து குளித்த பின்னர் பூக்களைப் பறிக்க தொடங்கி விடுகின்றனர். காலை 6 மணிக்குள் பறித்த

(தொடர்ச்சி 20-ஆம் பக்கம்)

# வினையிருள் அகல

வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ்

ஆனால் குரு தன் பக்தனைக் கட்டாயப்படுத்தமாட்டார். பக்தன் செய்யும் கர்மாக்களுக்கு தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் மாட்டார். பொதுவான மனிதப் பிறவியில் ஒவ்வொருவருக்கும் தனித்து இயங்கக்கூடிய அறிவு சக்தி கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவனுடைய ஆன்மீக வளர்ச்சியும் தாழ்வும் இந்த தனித்து இயக்கக்கூடிய அறிவு சக்தியைப் பயன்படுத்தும்-உபயோகப்படுத்தும் பாங்கினைப் பொருத்தே உள்ளது. குருவானவன் சாதாரண நிலையில் சொல்பவைகளையும், கனவு நிலையில் உணர்த்துபவைகளையும், அவர் குறிப்பிடும் சாந்தி சம்பிரதாயங்களையும் துருவித் துருவி புரட்டிப் புரட்டிப் பார்க்க வேண்டும். எனக்கு அதிக வேலை உள்ளது. குடும்பம் இதனை விரும்பவில்லை நம்பவில்லை, இதனை இப்படித்தான் செய்ய வேண்டுமா எனக்கு நேரம் இல்லை: இப்படி எவ்வித குறுக்கு எண்ணங்களும் வந்து விடக் கூடாது. அப்படி வரும் குறுக்கு எண்ணங்களையே ஊழ்வினைகள் உருத்து வருகிறதாகக் கொள்க. இவ்வாறாக குறுக்கு எண்ணங்கள் அந்தக் குறிப்பிட்ட காலத்தில்நல்லது போலவும், உண்மையானது போலவும், நிலையானது போலவும் தோன்றும். ஏன் வலிவு உடையதாகக்கூடத் தோன்றும். இவைஅனைத்தும் வெறும் தோற்றமே. இதனை உணர்ந்து கொள்வது மட்டுமே ஆன்மீக வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும். இதற்கு திடமான மனமும், மிகுந்த சகிப்புத் தன்மையும் சுத்தமான, ஆழமான, உண்மையான குருபக்தியும் தேவை. சிறிய சோதனைகளில் சிதறி விடும் பக்தி பக்தியாகாது, ஆன்மீக வளர்ச்சிக்கு அடித்தளமே அசையாத நிலையில் செய்யப்படும் பூசைகள், பிரார்த்தனைகள், செய்கைகள் அனைத்திலும் பலவிதமான வேற்றுமைகள் காணப்படும்...பிரார்த்தனைகள் நிறைவேறாத நிலையில் வெறுப்புணர்ச்சிகளும், சமய சம்பந்தமான காழ்ப்புணர்ச்சிகளும், இது பெரிது. அது பெரிது. இதுதான் உண்மை, அதுதான் உண்மை என்று மாறுபட்ட பயனற்ற வெட்டிப் பேச்சுகள்-பூசல்கள் இவையே மலிந்திருக்கும். போலி ஆன்மீகமாக உருவெடுத்து மக்களைத் தவறான திசையில் இழுத்துச் செல்லும்.

கர்ம சக்தி ஒரு சிக்கலான கோலம் போன்றது. கர்ம சக்தி கோலத்தில் (சிக்கலாக) வந்தால் குரு கோட்டுக்குள் நுழைந்து வருவார். ‘எல்லாமாய் அல்லதுமாய் — இருந்தனை இருந்தபடி இருந்து காட்டி’ பக்தனுக்கு எது தேவையோ அதனை அவனையே செய்யச் சொல்வார்’ ‘மெய்வருத்தக் கூலி தரும்’ இது சத்தியமான உண்மை. அதாவது அவனவன் தானே அனுபவித்துத் தீர்க்க வேண்டும். இதற்கு குருவின் சொல்லைக் கேட்கவும், சொல்படி நடக்கவும் கற்றுக் கொள்ள வேண்டும். போலி குருமார்கள் மலிந்துள்ள இக்கலி காலத்தில் மக்களுக்கு பலவிதமான கருத்து வேறுபாடுகள் நிலவி வருகிறது. அதிகுழப்பமும் இந்நாளில் உண்டு. வெளியில் தெரிகிற பகட்டு, ஆடம்பரம், விளம்பரம் இவற்றுக்குள்ளேயும், விளம்பரமின்றி உள்ள பல இடங்களிலும் இருக்கும், குருமார்களை அடையாளம் கண்டு அவர்கள் சொற்படி நடப்பதே ஆன்மீக வளர்ச்சிக்கும், ஊழ்வினை கழியவும் வழி வகுக்கும்.

ஒவ்வொரு மகானும், குருவும் தான் கடந்து வந்த பாதையில் தன் பக்தனைநடத்தி வருவார்கள். வழிகள் வேறு வேறு. சேருமிடம் பக்தர்களைச் சேர்க்குமிடம் ஒன்றே. அதுவே ‘பூச்சிய’ நிலை, நல்ல கர்மாவும், தீயகர்மாவும் இல்லாத நிலை, இதுவே சாந்திலை, பரமானந்த நிலை என்று பல்வேறு பெயர்களில் மகான்கள் தாங்கள் அனுபவித்தவாறு கூறியுள்ளனர்.

பக்தன் தன் குரு சொல்படி நடந்து கடமைகளைச் செய்து வந்தால் பல பிறவிகளைக் கடந்து தான் குவித்து வைத்துள்ள மலை போன்ற கர்மா தீருவதைப் பொருத்து-பூச்சிய நிலையை அடையலாம். எண்ணம் சொல்-செயல் மூன்றும் தூய்மையாக இருந்து, தான் செய்யும் காரியங்களில் வரும் பலன் அனைத்தையும் முழுமையாகவும் சுத்தமாகவும் குருவுக்கு அர்ப்பணிக்க வேண்டும். இதற்கு குருவைத் தேடி அலைய வேண்டியது இல்லை, காலநேரம் வரும்போது, விட்ட குறை தொட்ட குறை கூடி வரும் போது குருவானவர் வலியவந்து ஆட்கொள்வார்.

கர்மா கழிய செலவிடும் பணம் நல்ல வழியில் சம்பாதித்ததாகவும், எந்தப் பிரதி பலனையும் எதிர்பார்க்காமலும், ஆடம்பரம் விளம்பரம் எதுவும் இல்லாமலும் இருந்து, காரியத்தின் பலன் முழுவதையும் குருவின் திருவடிக்குச் சமர்ப்பித்துவிட வேண்டும். அவர்

அதனை பக்தனிடம் பிச்சையாக ஏற்றுக் கொண்டு அருள் பிச்சையிடுவார். 'நான் எடுப்பதும் பிச்சை, நான் கொடுப்பதும் பிச்சை' என்பார் குரு. நூறு ஜென்மங்கள் எடுத்து அனுபவித்துக் கழிக்க வேண்டிய கர்மாக்களை ஒரு சிறிய 'தீபம்' ஏற்றி கழித்துவிட முடியும். என்பார் குரு. 'தீபம்' ஏற்றுதலில் காலம், இடம், பொருள், ஏவல், மந்திர, தந்திர சாஸ்த்திர சம்பிரதாயங்கள் மற்றும் பல நிலைகளிலும் கவனிக்க வேண்டிய உண்மைகள் பல உண்டு. எதில் பிழை நேர்ந்தாலும்பிழைதான். மொத்தமாக எல்லாம் போய்விடும். அதுமட்டுமல்ல மாறாக எதிர்வினை தோன்றும். குளிக்கப் போய் சேறு பூசிக் கொண்டது போல், செய்கின்ற வேள்விகள், பூசைகள், தர்மங்கள், ஓதுகிற மந்திரங்கள் இவைகளுக்கு தற்காலத்தில் பல இடத்தில் பலன் கிடைக்காது போவதற்கு காரணங்கள் உண்டு. பொருள் சுத்தமாக, காலநேரம் தகுதி, மந்திர சக்தியுடன் பிறரை வருத்தி ஈட்டாத பொருளைக் கொண்டு, காமகுரோத, ஆணவம் நீக்கி, விளம்பரம் ஏதும் இன்றி அன்பு, தியாகம், உழைப்பின் அடிப்படையில் அடக்கத்துடன் சோர்வு இன்றி உண்மை பக்தியுடன் குரு சொல்படிப் பூசைகளை செய்ய வேண்டும். அப்போது காரிய வெற்றி கிட்டும்.

கந்தர் சஷ்டிக்கும், ஐயப்பன் சபரிமலைக்கும் செல்லும் காலங்களில் விரதம் இருப்பதைக் காண்கிறோம். விரதம் இருப்பவர்கள் முகத்தில் சோர்வு தென்படக்கூடாது. நான் விரதம் இருக்கிறேன். பசிக்கிறது. ஆனால் சாப்பிடுவதில்லை. உடல் தளர்ச்சியாக உள்ளது என்று புலம்புவதும் வேறுவிதமான பகட்டு எதுவும் செய்யக்கூடாது. விரதம் இருப்பவர்களைப் பார்த்து கேலி பேசுவது கூடாது. ஆ உன்முகம் வாடி, உடம்பு தளர்ந்துள்ளதே, இதைக்குடி, அதைச் சாப்பிடு, விரதத்தை சீக்கிரம் முடி என்ற வெட்டிப் பேச்சுகள் எதுவும் பேசக்கூடாது. அவரவர்க்கு வாய்த்த குரு சொல்படி நடக்க வேண்டும் (ரூபமுள்ள குருவாகவும், அரூபமான நிலையிலும் குரு இருக்கக்கூடும்). இல்லையேல் விரதத்தினால் உண்டாகும் பலன் கிடைக்காது. விரத காலத்தில் தவறுகள் செய்தால், தகுந்த தண்டனை கிடைக்கும். அதாவது கொடிய கர்மாக்கள் - தீட்டுஉருவாகும்.

ஒரு பெண்ணை மணம் முடிக்க வரதட்சிணை கேட்டல்-கொடுத்தல் இதில் சம்பந்தப்பட்டவர்களின் குடும்பம் காலக்கிரமத்தில் அழியும். வரதட்சிணையை ஒரு சமூகமே ஆதரித்தால் அச்சமூகமும் அழியும். ஏராளமாக உதாரணம் கொடுக்கலாம். ஆனால் அப்படிச் செய்யத் தேவையில்லை என்று கருதி விடப்படுகிறது.

ஒரு குடும்பத்தில் மறைந்த பெரியவர்களுக்கு செய்ய வேண்டிய ஈமக்கடன்களை குறைவின்றிச் செய்தால் அப்பெரியவர் ஆத்மா சாந்தி பெறுவுதோடு அவர்கள் தெய்வமாக இருந்து தன்வழி வந்தோரைக் காப்பாற்றுவார்கள். அவர்கள் யாராவது ஜீவன் முக்தர்களாகவோ மகான்கள..கவோ இருந்து விட்டால், அவர்கள் வழங்கும் ஆசியில் அக்குடும்பம் பல வழியிலும், செழித்து புகழோடு ஓங்கி விளங்கும். உழைப்பு, தியாகம், ஆழ்ந்த பக்தி இவற்றின் அடிப்படையில் தங்களுக்கு கொடுக்கப்பட்ட அரிய,பெரிய, கடுமையான சோதனைகளில் வென்றவர்கள் நாம் வழிபடும் நாயன்மார்கள். ஆழ்வார்களும் அப்படியே. அவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகளை இன்று நாம் நினைத்துப் பார்க்கக்கூட முடியாது. இவர்கள் அனைவரும் தம் குருவழி நடந்தவர்கள். வினையை வென்றவர்கள். தியாகச் சுடர்கள்: தன் நிகரற்ற பக்திமான்கள் .கொண்ட கொள்கையில் உறுதியுள்ளவர்கள். ஆகவே, இறைவன் அவர்களுக்கு வீடு பேறு கொடுத்தது மட்டுமின்றி இவர்களைப் பின்பற்றி பக்திமான்கள் நடந்து வர இறைவன் எழுந்தருளியுள்ள திருத்தலங்களில் அவர்களை எழுந்தருளும்படி செய்து தெய்வபதவி கொடுத்தார். கர்ம வினையை வெல்ல முடியும். ஆனால் இது ஒரு அசாத்திய காரியம்தான். அதற்கு குருவருளும் திருவருளும் துணை நிற்கும், உயிர் இறை சக்தியுடன் ஒன்றி விடும் பரம சார்ந்த நிலைஎய அடையும். முயற்சியுடையார் இகழ்ச்சியுடையார் .

---

## திருவரங்கம் திருக்கோயிலும் திருநந்தவனமும்

*18-ஆம் பக்கத் தொடர்ச்சி....*

பூக்களை பூத்தொடுக்கும் அறையில் வைத்து விடுகின்றனர். அவர்களைத் தவிர வேறுயாரும் உள்ளே செல்லக்கூடாது. அந்த அறையில் பாசுரங்களைப் பாடிக் கொண்டே நின்று கொண்டு பூக்களைத் தொடுக்கின்றனர். மாலைகளைக் கட்டி முடித்தவுடன் பூக்குடலைகளில் வைத்து நேரம் தவறாமல் கோயிலில் சேர்ப்பித்து விடுகின்றனர். இதனைத் தொண்டாக நினைத்து செய்து வரும் அவர்களை போற்றாமல் இருக்க இயலாது. இங்கு வாழை, தென்னை, மா, பலா, மரங்களும் உண்டு. இதன் காய்களும் கோயிலுக்கு அனுப்புகின்றனர். நந்தவனத்திற்கு எதிரில் மதுரகவிசுவாமிகளின் சமாதிகோயில் உள்ளது. நந்தவனத்தில் பணியாற்றுபவர்களின் உணவிற்காக சோழமாதேவி என்ற ஊரில் நிலமும் உள்ளது. இறைவனுக்கு இந்த நந்தவனத்தொண்டு செய்த மதுரகவிசுவாமிகளை நினைத்தால் மனம் நெகிழ்கிறது.

இறைவனுக்கு மலரால் அர்ச்சிப்பதால் ஏற்படும் நன்மைகளை ஆகமங்கள் கூறுகின்றன. என்னென்ன பூக்களால் அர்ச்சனை செய்யப்பட வேண்டும் என்று 'புட்பவிதி' என்ற நூல் கூறுகிறது.

''எளிய நல தீபமிடல் மலர்கொய்தல் தளிதொழில் செய்வதுதான் தாசமார்க்கமே'' என்று திருமந்திரம் போற்றுகின்றது. எனவே கோயில்களுக்கு நன்மையளிப்பதுடன் சுற்று சூழலைப் பாதுகாக்கும் நந்தவனங்களைப் போற்றிப்பாதுகாக்கவேண்டியது நமது கடமையாகும்.

# திருநீலகண்டரும் துளசிதாசரும்

**கவிஞர் காசி அவர்கள்**
அருப்புக்கோட்டை

பெரியபுராணத்தில் வருகின்ற திருநீலகண்டர், தில்லையில் வாழ்ந்த சிவபக்தர். உத்திரப் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த துளசிதாசர், இராமபக்தர். திருநீலகண்டர் சிவனடியார்களுக்குத் திருவோடு கொடுத்துத்தொண்டு செய்த குயவர். இராம காதையை மக்களிடையே பாடலாலும், பிரச்சாரத்தாலும் எடுத்துரைத்தவர் துளசிதாசர். திருநீலகண்டர் தன் மனைவியின் தூண்டுதலாலே எப்பெண்ணையும் தொடுவதில்லை என்று சபதம் செய்து சிவத்தொண்டு புரிந்து வாழ்ந்தார். துளசிதாசர் தன்மனைவியின் கடுஞ்சீற்றத்தால் துறவை ஏற்று இராம பக்தியை மக்களிடையே பரப்பி வந்தார். இருவரும் பெருமைக்குரிய அடியார்களாவர்.

துளசிதாசர் இளம் வயதில் தாய் தந்தையரை இழந்து, சுவாமி நர அரியானந்தரிடம் காயத்திரி மந்திரத்தை முறைப்படி கற்றார். இராமகாதையையும் விளங்கக்கற்றார். பின்னர் காசியில் சுவாமி சேஷநாதரைக் குருவாக ஏற்று, துளசிதாசர் சாத்திரம் இதிகாசங்கள், வேதம் ஆகியவற்றைத் திறம்படக் கற்றுத் தேர்ந்தார். இராம காவியத்தை மக்களிடம் எடுத்துக்கூறி தொண்டு செய்து வந்தார். துளசிதாசருடைய ஆற்றலை அறிந்த பண்டித தீனபந்து பாடக் என்ற அறிஞர் தம் அழகிய மகளை துளசிதாசருக்குத் திருமணம் செய்து கொடுக்க விரும்பினார். இதனால் துளசிதாசருக்கும் இரத்தினாவளிக்கும் முறைப்படி திருமணம் நடைபெற்றது.

இரத்தினாவளியின் அழகில் சொக்கிப் போன துளசிதாசர் அவளை விட்டுப் பிரியாமல் 5 ஆண்டுகள் குடும்பம் நடத்தினார். ஒருநாள் இரத்தினாவளியின் சகோதரன் துளசிதாசரின் வீட்டிற்கு வந்தான். அப்போது துளசிதாசர் வீட்டில் இல்லை. தன் தந்தையின் வீட்டில் சில நாள் தங்கியிருக்க விரும்புவதாக இரத்தினாவளி தன் சகோதரனிடம் கூற, சகோதரனும் தன் சகோதரியை அழைத்துச்சென்றான். தன் மனைவி தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் சென்று விட்டதை அறிந்த துளசிதாசர் வேதனையடைந்தார். இரத்தினாவளியை விட்டுப் பிரியாமல் இருந்தே பழக்கப்பட்டுப் போனவர் துளசிதாசர். ஆகையால் உடனே அவர் மனைவியைக் காண மாமனார் வீட்டிற்குச் செல்ல எண்ணினார். நடு இரவில் யமுனை நதிக்கரையை அடைந்தார். நதியின் அக்கரையைக் கடக்க வழி தெரியாமல் ஒரு பிணத்தை மரக்கட்டை என்று கருதி, அதைப்பற்றிக் கொண்டு நீந்தி அக்கரை சேர்ந்தார். பின்னர்தான் தான் புணையாகப் பற்றி வந்தது பிணம் என்பதைத் தெரிந்து வருத்தமுற்றார். பின் மாமனார் வீட்டிற்கு வந்தார். வராந்தாவைக் கடந்தார். வாயிற் கதவு பூட்டப்பட்டிருந்தது. மனைவியைக் காண வேண்டுமென்று ஆசையால் பக்கத்தில் உள்ள சுவற்றில் தொங்கிய பாம்பைக் கயிறு என்று கருதி பற்றி ஏறி உட்புறம் குதித்தார்.


மனைவியின் அறைக்கு வந்தார் துளசிதாசர். அதைக் கண்டு திடுக்கிட்டு எழுந்தாள் இரத்தினாவளி. வந்தது தன் கணவர் என்பதை அறிந்து வேதனையடைந்தாள். துளசிதாசர் ஆசையோடு அருகில் சென்றார். தன் கணவரின் இழிவான செயலை எண்ணி அவரை முறைத்துப் பார்த்தவாறு, 'அழியும் இக்கட்டையின் மீது எத்துணை ஆசை இருக்கிறதோ, அவ்வளவு அன்பை நீங்கள் வழிபடும் இரகுநாதனிடம் செலுத்தினால் உலகத் துன்பத்திலிருந்து உங்களுக்கு விடுதலை கிடைக்கும்'' என்று கோபம் கொண்டவள் போல் கணவனை திட்டினாள். இதனைக் கேட்டதும் பேயறைந்தது போல் அப்படியே செயலற்று நின்றார் துளசிதாசர். நீ கூறியதே எனக்கு உரிய வழி என்று கூறியவாறு உடனே புறப்பட்டார் துளசிதாசர். சீற்றத்தோடு கூறிச் செல்லும் தன் கணவரை பின் தொடர்ந்து பற்றினாள் இரத்தினாவளி. ஆனால் மனைவியை உதறித் தள்ளிவிட்டு துறவறத்தை ஏற்றார் துளசிதாசர். பின்னர் வாழ்நாள் முழுவதும் இராமதாசராகத் தொண்டு செய்தார்.

துளசிதாசரைப் போலத் திருநீலகண்டரும் ஆசையைத் துறந்து சிவத்தொண்டு புரிந்தவராவர். மண்பாண்டம் செய்யும் தொழிலில் ஈடுபட்ட திருநீலகண்டர் அடியார்களுக்கு இலவசமாக திருவோடு தந்து சிறப்புச் செய்தார். அவருடைய மனைவியாரும் தன் கணவரோடு இனிது இல்லறம் நடத்தி வந்தார்.

ஒரு நாள் வெளியூர் சென்று வரும்போது ஒரு பரத்தையின் ஆடல் பாடலில் ஈடுபட்டுத் தொடர்பும் கொண்டார். அவர் வீட்டிற்கு வருவதற்கு முன்பே, அவருடைய செயல் மனைவிக்கும் தெரிந்து விட்டது. எனினும் பொறுமையுடன் வீட்டிற்கு வந்த கணவருக்கு வழக்கம்போல் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்தார் மனைவி. தன்னுடைய செயலுக்கு மன்னிப்பு வேண்டுமாறு மனைவியிடம் வேண்டினார் திருநீலகண்டர். உணவு அருந்தியபின் படுக்கையில் வேதனையோடு மனைவி அமர்ந்தாள். அப்போது திருநீலகண்டர் ஆசையுடன் தன் மனைவியை நெருங்கினார். கோபங்கொண்ட மனைவி

## வாரியாருக்குத் தாயார் உரைத்த அறிவுரை !

**ஒரு நாள் சின்னஞ்சிறுவனாக இருந்தபொழுது உடையை மடக்கிக் கொண்டு நிலத்தில் அமர்ந்தேன். என் தாயார் என்னைப் பார்த்து "நிலம் அழுக்காக இருப்பதனால் உடையை மடக்கிக்கொண்டு உட்காருகிறாய். சிறு குழந்தையாகிய நீ அழுக்குத் தரையில் அமரக் கூசுகிறாய். உள்ளத்திலே ஆசாபாசங்களான அழுக்குகள் இருந்தால் அந்த அழுக்கு உள்ளத்திலே இறைவன் இருக்கக் கூசுவான். ஆகவே நீ உள்ளம் தூயவனாக இருக்க வேண்டும்" என்று கூறினார்.**




பரபரப்புடன் எழுந்து நிற்க ஆசையுடன் பற்றினார் திருநீலகண்டர். அப்போதுமனைவி தன் கணவனை நோக்கி 'எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்' என்று கூறி விலகினாள். தன் மனைவியின் சொல்லைக் கேட்டுத் திடுக்கிட்டார் திருநீலகண்டர். உடனே மனைவியை நோக்கி' உன்னை மட்டுமல்ல எந்தப் பெண்ணையும் இனி தீண்டுவதில்லை. இது திருநீலகண்டர்மீது ஆணை' என்று கூறி விலகிச் சென்றார். அன்று முதல் தன் மனைவியிடம் உடல் உறவு கொள்ளாமல், வெளியிலுள்ளோர்க்குக் கணவனும் மனைவியுமாக வாழ்ந்து வந்தார்கள் அவ்விருவரும்.

திருநீலகண்டர் சிவபக்தர். துளசிதாசர் இராமபக்தர். இருவரும் தத்தம் மனைவியரிடம் தீராக் காதல் கொண்டவர்கள். மனைவியர்களின் மிக்க கோபத்தினால் ஆசையை விடுத்து வாழ்க்கையில்புதிய திருப்பத்தைக்கண்டவர்கள் இந்த இருவருமே எனினும் இரத்தினாவளி தன் கணவன் பிரிந்த பிறகு கண்ணீரோடு வாழ்க்கை நடத்தியதாகத் தெரிகிறது. ஆனால் இறைவனுடைய சோதனை முற்றும் வரை இணைந்து வாழ்ந்து தாம் மாறாத அன்பு கொண்டவர்கள் என்பதை உலகுக்கு அறிவித்தவர்கள் திருநீலகண்டரும் அவருடைய மனைவியாரும் ஆவர்.

# பன்னிரு ஆழ்வார்கள்

பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

## 4. திருமழிசையாழ்வார்

வேள்வி முதலிய நற்கருமங்களைச் செய்ய ஏற்ற இடம் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கும்படி தவமுனிவர்கள் பிரமனிடம் வேண்டினர். பிரமன் தருப்பைப் புல்லைச் சக்கரமாக்கி உருட்டிவிட்டான். அது நின்று, சுட்டிக்காட்டிய வடநாட்டுத் தலமே நைமிசாரண்யம் ஆகும். முனிவர்கள் தவவேள்விகள் இயற்றிய நைமிசாரண்யத்தில்தான் சூத புராணிகர் பதினெட்டுப் புராணங்களை உரைத்தார்.

அதேபோல் பிறிதொரு முறை பூமியில் நல்ல இடம் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப் பிரமனை முனிவர்கள் வேண்டினர். விச்வகர்மன் என்ற தேவசிற்பியைக் கொண்டு மாபெரும் துலாக்கோல் ஒன்று செய்வித்தான் பிரமன். அதன் ஒரு தட்டில் ஐம்பது கோடி யோசனை விஸ்தீர்ணமுள்ள பூமி முழுவதையும் வைத்தான். மற்றொரு தட்டில் திருமழிசை என்ற தொண்டைநாட்டுப் பதியை வைத்தார். பூமி முழுவதையும்விடத் திருமழிசை அதிகக் கனமுள்ளதாகத் திகழ்ந்தது.

'உலகும் மழிசையும் உள்ளுணர்ந்து தம்மிற்
புலவர் புகழ்க்கோலாற்றூக்க—உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது.''

என இந்த நிகழ்ச்சியைத் திருக்கச்சி நம்பிகள் உரைத்தார்.

பரிமதேவர் திருமழிசையை 'மஹீஸார சேத்தரம்' என்று புகழ்ந்தார். அங்கு முனிவர்கள் பலரும் வந்து தங்கித் தவமியற்றினர். வேள்விகள் புரிந்தும் உய்ந்தனர். அவர்களுள் பார்க்கவ முனிவரும் ஒருவர்.

அவர் இயற்றிய தவத்தைக் கலைக்க தேவர்கள் அழகு நங்கையர்கள் பலரையும் அனுப்பினர். இறுதியாக வந்த கனகாங்கி என்ற பெண்ணிடம் மையல் கொண்டார். பார்க்கவர் யோகம் விட்டுப் போகம் புரிந்திட கனகாங்கி அங்கங்கள் இல்லாத பிண்ட வடிவான குழந்தையொன்றை ஈன்றெடுத்தாள். திருமாலின் சுதர்ஸனச் சக்கரத்தின் அம்சமான அப்பிண்ட ரூபத்தைக் கண்டு கனகாங்கி வெறுப்புக் கொண்டாள். அதனைப் பிரப்பங் காட்டில் எறிந்து விட்டுத் தனதுலகம் சென்று விட்டாள். பார்க்கவ முனிவரும் மீண்டும் யோகநெறிக்குப் போய் விட்டார்.


பிரப்பம்புதரில் எறியப்பட்ட பிண்ட வடிவம் கைகால் முதலிய அங்கங்கள் பெற்று அழகிய ஆண் குழந்தையாகியது. திருமாலின் சக்ராம்சம் கொண்ட அக்குழந்தையே திருமழிசை ஆழ்வார். ஞானப்பசியால் அழுத அக்குழந்தைக்கு மழிசைப் பெருமான் தோன்றி காட்சி கொடுத்தருளினார். திருவாளன் என்ற வேளாளர் குலத்தோன்றல் பிரம்பறுக்க வந்த பொழுது அருட்குழந்தையைக் கண்டான். எடுத்துச் சென்று தன் மனைவியிடம் கொடுத்தான். அவளுக்குப் பால் பெருகிற்று. ஆயினும் அருட்குழந்தை பால் வேட்கை முதலிய இன்றிப் பகவத் குணச் சிந்தையில் எப்போதும் இலயித்திருந்தது.

புனிதக் குழந்தையின் புகழ் எங்கும் பரவிற்று. பலரும் காண வந்தனர். மக்கட் பேறு இல்லாமல் இருந்த தம்பதியர் அருட்குழந்தைக்கெனப் பசும்பாலைக் காய்ச்சி எடுத்து வந்து கொடுத்தனர். அவர்களின் அன்புக்கு இரங்கி குழந்தை அவர்கள் கொடுத்த பாலைப் பருகிற்று. தினசரி அவர்கள் அங்ஙனம் பாலளித்து வந்தனர். ஒருநாள் குழந்தை குடித்து எச்சமாய் (சேஷமாய்) வைத்திருந்த பாலை அத்தம்பதியர் பருகினர். அதன் பயனாய் அவர்களுக்கு ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தைக்குக் கணிகண்ணன் என்று பெயரிட்டு வளர்த்தனர். ஆழ்வாரின் தொண்டுக்காகவே கணிகண்ணனை அர்ப்பணித்தனர். கணிகண்ணனே திருமழிசைப் பிரானின் முக்கிய சீடராகவும், தொண்டராகவும் திகழ்ந்தார். ஆச்சார்ய சேவையால் அவர் பேரறிவு படைத்த அருட்கவியும் ஆனார்.

திருமழிசையார் ஏழு ஆண்டுக்காலம் பிரம்பறுக்கும் வேளாள தம்பதியரிடமே வளர்ந்து அனைத்தும் ஓதாமல் உணர்ந்தார். பிறகு, பரத்வம் அறிய முற்பட்டார். பல மதங்கள் பற்றிய சர்ச்சை புரிந்து இறுதியில் திருமால் நெறியே சிறந்ததெனத் தேர்ந்தார். சிவபெருமான் அளிக்க முன்வந்த வரங்களையும் மறுக்கும் அளவிற்குத் தீவிர திருமால்பக்தி கொண்டு விளங்கினார். முக்கட்பரமனே இவரது உறுதியைப் பாராட்டி 'பக்திஸாரர்' என்ற சிறப்புப் பெயர் கொடுத்தருளினார்.

சித்தர்கள் பலரும் திருமழிசையாழ்வாரின் மகிமையைக் கண்டு தண்டனிட்டனர்.

திருமழிசையாழ்வார் குகையொன்றில் யோகத்தில் அமர்ந்திருந்த பொழுது முதலாழ்வார்கள் மூவரும் அவ்வழியே வந்தனர். யோகி திருமழிசையாரின் பேரொளியைக் கண்டு வியந்தனர். முதலாழ்வார்கள் மூவரும் குகைக்குள் நுழைந்தனர். பரஸ்பரம் ஸேவித்து நால்வருமாக பகவத் குணங்கள் குறித்து அளவளாவி மகிழ்ந்தனர். நால்வருமாக பேயாழ்வாரின் அவதாரஸ்தலமாகிய திருமயிலாப்பூர் எழுந்தருளினர். அங்குச் சிலகாலம் யோகம் இயற்றினர்.



முதலாழ்வார்களுக்குப் பரமபத பெருமாளின் திருக்காட்சி

திருமழிசையாழ்வார் தனது சொந்த ஊரான திருமழிசையில் சில ஆண்டுகள் தங்கினார். அங்கும் அவர் திருமண் வேண்டிப் பல இடங்களில் குழிதோண்டிப்பார்த்தார். எங்கும் அகப்படாமல் கலங்கினார். அப்போது பெருமாள் அவர் கனவில்தோன்றி நல்ல திருமண் காஞ்சியை அடுத்த திருவெஃகாவில் கிடைக்கும் என உரைத்தார். அதன்படி ஆழ்வார் திருவெஃகா சென்று திருமண் கண்டு மகிழ்ந்தார். திருவெஃகாவிலும் சில ஆண்டுகள் தங்கியிருந்தார்.

திருவெஃகா திருக்கோயிலில் திருவலகிடும் பணியில் ஈடுபட்டிருந்த ஒரு கிழவி ஆழ்வாரின் அருளால் மாறாத இளமை எய்திப் பாங்கு பெற்றாள். அவளது பேரழகினைக் கண்டு மயங்கிய பல்லவ மன்னன் அவளையே மணந்தான். மன்னன் பருவ மாறுபாடுகளுக்கு உட்பட்டு முதுமை நெருங்கிவரக் கண்டான். தன் மனைவி ஆழ்வாரின் அருளால் மாறாதஇளமை பெற்றதுபோல் தானும் அடைய விரும்பினான். ஆழ்வாரின் சீடரான கணிகண்ணனை அழைத்தான். ஆழ்வாரிடம் கூறித் தனக்கும் மாறாத இளமை அளிக்க வேண்டுமென விண்ணப்பித்தான். உலகியலில் உழலும் மனிதர்களுக்கு ஆழ்வாரின் அருள்கிட்டாது என்றார் கணிகண்ணன். அப்படியானால் கணிகண்ணனே தன் தெய்வீகப் பாட்டால் அதனை அளிக்க இயலும் என்றான் மன்னன். நாராயணனைப் புகழும் தம் வாயால் நரனைப் பாட இயலாதென மறுத்தார் கணிகண்ணன். அதனால் வெகுண்ட மன்னன் கணிகண்ணன் உடனே தனது நகரத்தை விட்டு வெளியேற வேண்டுமென உத்தரவிட்டான்.

கணிகண்ணன் திருமழிசையாழ்வாரை அடைந்து நிகழ்ந்ததை உரைத்தான். 'பெருமானையும் அழைத்துக்கொண்டு நானும் உன்னுடன் நகரத்தைவிட்டு நீங்குவேன்' என்றார் ஆழ்வார்.

திருவெஃகா பெருமானை நோக்கி

'கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டா-
துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன்
நீயுமுன்றன்
பைநாகப் பாய்சுருட்டிக் கொள்''

என்று விண்ணப்பித்தார். ஆழ்வாரின் பாடலைக் கேட்டவுடன் வெஃகாவுடைய பெருமான் விரைந்து எழுந்து கணிகண்ணனுடனும், ஆழ்வாருடனும் நகரைவிட்டு நீங்கிவிட்டார்.

பகவான் நீங்கியதால் நகரமும் மற்றவையும் பொலிவிழந்து போயின. பல்லவன் கலக்கமுற்றான். தன் பரிவாரங்களுடன் அவர்களைத் தேடிப் பிடித்தான். தண்டனிட்டு, இறைவனை மீண்டும் எழுந்தருளப் பண்ணவேண்டுமென்றான். பரம காருணிகரான ஆழ்வார்

'கணிகண்ணன் போக்கொழிந்தான் காமரு
பூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டும்—
துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன்
நீயுமுன்றன்
பைநாகப்பாய்ப்படுத்துக் கொள்''.

எனப் பாடலைச் சற்று மாற்றிப் பாட பெருமானும் திருவெஃகா எழுந்தருளிக் கிடந் தான். இந்த நிகழ்ச்சியைக் குமரகுருபர சுவாமிகள் 'பைந்தமிழின் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டல்' என்று தமது மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழில் நினைவுபடுத்து கிறார்.

'வண்டமிழ் பயில்வோர் பின் திரிகின்றவன்' என அருணகிரிநாதரும் திருப்புகழில் இதனை உரைக்கிறார்.

அடியவர் சொல்படி செய்ததால் திரு வெஃகாப் பெருமானை 'சொன்னவண்ணம் செய்த பெருமாள்' என்றே அழைக்கலாயினர். வடமொழியில் 'யதோக்தகாரி' என்பர். அப் பெருமான் அடியார் இருவருடன் ஒருநாள் எழுந்தருளியிருந்த தலம் 'ஓரிரவு இருக்கை' எனப் பெயர் பெற்றது.

திருமழிசை ஆழ்வார் திருக்குடந்தைக் கிடந்த பெருமானாகிய ஆராவமுதனைச் சேவிக்கத் திருவுள்ளம் கொண்டார். குடந்தை செல்லும் வழியில் பெரும்புலியூர் என்ற கிராமத்தில் சில வேதியர்கள் ஒரு திண்ணையில் அமர்ந்து வேதம் ஓதிக்கொண் டிருந்தனர். திருமழிசை ஆழ்வாரைக் கண்ட வுடன், அவரது உயர்வினை உணராதவர் களாய் அவரது பிறப்பைக் கருதினர். அவர் காதில் விழும்வண்ணம் வேதமோதலாகாது எனக் கருதி வேதகோஷத்தை நிறுத்தினர். ஆழ்வார் தம் வழியே சென்று வேறொரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்தார்.

வேதியர்கள் மீண்டும் வேதம் ஓதத் தொடங்கினார்கள். ஆனால், அவர்களின் நினைவு ஆற்றல் குன்றி, மேலே ஓத முடியா மல் தடுமாறினர். அதன் காரணம் உயர்ந்த திருமாலடியாரை அவமதித்ததே எனவும் உணர்ந்தனர். ஆழ்வார் அமர்ந்த இடம் வந்து வணங்கினர். அவரும் கருப்பு நெல்லைக் கிள்ளிப் போட்டு அவர்கள் தொடர வேண்டிய வேதத் தொடர்களை குறிப்பாக உணர்த்தி னார். உடனே அவர்களது நினைவாற்றல் மீண்டது. பெரும்புலியூர் பெருமாளும் ஆழ் வார் செல்லும் திசையெல்லாம் திரும்பும் அதி சயத்தையும் கண்டனர். அதனைப் பெரும்புலி யூர் அடிகள் என்ற தீட்சிதரிடம் கூறினர். வேள்வியொன்று நிகழ்த்திக் கொண்டிருந்த தீட்சிதர் ஆழ்வாரை வணங்கி வரவேற்றுத் தமது யாகசாலையில் 'முதல் மரியாதைகள்' கொடுத்துப் போற்றினார்.

வேள்விச் சாலையில் இருந்த சில பொறாமைக்காரர்கள் ஆழ்வாருக்கு அளித்த முதல்மரியாதைகள் தகாதென்றனர். புலியூர் அடிகள் வேண்டியபடி ஆழ்வார் தமது திரு மேனியில் ஸ்ரீதேவி பூதேவி சமேதராய் வீற்றி ருந்த திருமாலின் திருக்கோலத்தைக் காட்டி யருளினார்.

oooooooooooooooooooooooooooooooooooo

## வைகுண்ட ஏகாதசி

**குண்டம்—வளைவு : எந்தப் பொருள் வளையுமோ அந்தப் பொருள் அழிந்துவிடும். யுக முடிவில் நிலம் வளைந்து நீரில் ஒடுங்கும். நெருப்பு வளைந்து காற்றில் ஒடுங்கும். காற்று வளைந்து வெளியில் ஒடுங்கும். இவ்வாறு ஒவ்வொன்றாக வளைந்து ஒடுங்கும் பொழுது திருமால் உறைகின்ற உலகம் ஒடுங்காது. அதனால் அவர் இருக்கிற உலகத்துக்கு வைகுண்டம் எனப் பெயர் உண்டாயிற்று. வை - இல்லை; குண்டம் - வளைவு. வளைந்து ஒடுங்காத உலகம் வைகுண்டம்; ஆதலால் திருமாலை வழிபடுகின்ற நாள் வைகுண்ட ஏகாதசி.**

—வாரியார் சுவாமிகள்


oooooooooooooooooooooooooooooooooooo

பிறகு திருக்குடந்தை சென்று ஆராவமு தனைச் சேவித்து மங்களாசாஸனம்' செய்தார் அதாவது வாழ்த்திப் பாடினார். திருமழிசை யாழ்வார் நூற்றுக்கும் மேற்பட்ட பிரபந்தங் களை இயற்றியிருந்தார். அவற்றைக் குடந் தைக் காவிரி வெள்ளத்தில் விட்டுவிட்டார். எனினும் நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் என்ற இரண்டு மட்டும் வெள்ளத்தை எதிர்த்து வந்து நின்றன.

திருமழிசையாழ்வார் குடந்தை, திரு வரங்கம், திருவெஃகா, திருக்கோட்டியூர் போன்ற பல தலங்களையும் பாடியுள்ளார். பல ஆண்டுகள் திருக்குடந்தையிலேயே தங்கி யிருந்த திருமழிசையாழ்வார் அத்திருத்தலத்தி லேயே திருநாடு எழுந்தருளினார்.

# தீபம்

**டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்**



உயிர்கள் யாவும் விரும்புவது ஒளி ஒன்றே யாகும். இருளை எந்த உயிர்களும் விரும்ப மாட்டா. இருளிலே துன்புற்று மரங்களில் ஒடுங்கிக் கிடந்த பறவைகள் கதிரவன் ஒளி வருகின்ற குறிப்பையறிந்து வைகறையில் சிறகையடித்துக் கொண்டு ஆரவாரஞ் செய்து மகிழ்வது கண்கூடு. கதிரவன் ஒளியைக் கொண்டு நிலமகள் முகமலர்வது போல் தாமரைகள் மலர்கின்றன. செடிகளும், கொடிகளும், மரங்களும் கண்விழித்துப் பார்ப்பது போல் அழகிய மலர்கள் மலர்கின்றன. மக்களும் மகிழ்கின்றார்கள். உலகிற்கு இன்றியமையாத பொருள் ஒளியொன்றேயாகும். துன்பத்தின் வடிவாகிய நரகத்தை இருள் என்று கூறுவது மரபு, வள்ளுவர் கூறுமாறு காண்க.

''அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்''.

ஒளியினால் நமக்குப் பெரிய இன்பம் உண்டாகின்றது. உலகில் ஒளியைத் தருகின்ற பொருள்கள் மூன்று என்க. கதிரவன், திங்கள் விளக்கு என்ற மூன்றினால் நாம் நன்மையடைகின்றோம். கதிரவனும், சந்திரனும் நமக்கு வேண்டும்போது, வேண்டிய இடங்களில் உதவுவதில்லை. விளக்கை வேண்டியபோதெல்லாம், வேண்டிய இடங்களில் எல்லாம் வேண்டியபடி பயன்படுத்திக் கொள்ளலாம். ஆதலின் ஒருவகைக்கு சந்திர சூரியரைவிட நமக்கு விளக்கு மிக்க பயன்படக் கூடியதாக இருக்கிறது; தவிர அண்மையில் நமக்கு உதவுகின்றது. அதனால் இறைவனை திருவிசைப்பா

'ஒளிவளர் விளக்கே! உலப்பிலா குன்றே'

என்று அழைக்கின்றது.

''சூழொளி விளக்கே''

என்று அழைக்கின்றார் மணிவாசகனார். விளக்கின்றி மனிதன் வாழ முடியாது.

அதனால்தான் பகலில் சூரியனுடைய ஒளி நிரம்பியிருக்கின்ற காலத்திலுங்கூட நாம் திருவிளக்கை வைத்து வழிபடுகின்றோம். வழிபாட்டுக்கு இன்றியமையாத அங்கமாக விளங்குவது தீபமாகும்.

பழைய காலம் முதல், இன்றுவரை திருவிளக்குப் பூஜை செய்வதும், மங்கல காலங்களில் விளக்கை ஏற்றுவதும், திருமண காலத்திலே, விளக்குகளை வைத்து, மணமக்கள் வலம் வருவதும், நம்நாட்டு வழக்கமாகும்.

வீமன் பலருக்கு இடுக்கண் புரிந்த பகனை மாய்த்து வேத்திரகீய நகருக்கு வந்தபோது அங்குள்ள அந்தணர்கள் நெய்விளக்கு ஏற்றி, வீமசேனனை வரவேற்று உபசரித்தனர் என வரும் பாரத வரலாற்றையும் அறிக.

''வாசமாமணி விளக்கெடுப்ப இவன்
வந்து தாமுறையு மனை புகுந்து''

இராமலிங்க அடிகள், மனமாகிய தோழியை நோக்கி 'தோழி! இது அருளாளர் வருகின்ற தருணம், கணக்கில்லாத விளக்குகளைஏற்றிடுவாய்; பசுநெய்விட்டுவிளக்குகளை ஏற்று; வேறு நெய்யானால் எம்பெருமான் திருமேனிக்கு மாசு நேர்ந்தாலும் நேரும். ''இது காலை நேரமாயிற்றே! இருள் இல்லையே! விளக்கு வேண்டுமா?' என்று வினவாதே. மங்கலமாக ஏற்ற வேண்டும்' என்று இனிய செஞ்சொல் மொழிகளால் பாடுகின்றார்.

''அருளாளர் வருகின்ற தருணமிது தோழி
ஆயிராமா யிரங்கோடி அணிவிளக்கேற் றிடுக
தெருளாய பசுநெய்யே விடுகமற்றை நெய்யேல்
திருமேனிக் கொருமாசு செய்தாலும் செய்யும்
இருளேது காலைவிளக் கேற்றிடவேண் டுவதோ
என்னாதே மங்கலமா யேற்றுதலாங் கண்டாய்
மருளேலங் கவர்மேனி விளக்கமதெண் கடந்த
மதி கதிர்செங் கனல்விரவி என்னிலுஞ் சாலாவே''.

ஆலயத்தில் விளக்கேற்றி இறைவனை வழிபடுவோர்க்கு மெய்ஞ்ஞானமுண்டாகும். 'விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்' என்கின்றார் அப்பரடிகள்.

அணைந்து போகுந் தருணத்தில், தன் வால்பட்டுத் தூண்டிக் கொண்ட புண்ணியத்தினால் எலி, பலிச்சக்கரவர்த்தியாகப் பிறந்தது என்ற வரலாற்றினாலும் விளக்கின் பெருமை விளங்குகின்றது.

இறைவனைத் திருவிளக்கில் ஆவாகனஞ் செய்து, வழிபடுகின்ற விதியும், நமது பழமையான சாத்திரங்களில் உண்டு. இறைவனை அருணகிரிநாதர்

''தீபமங்கல ஜோதி நமோநம''

என்று துதிக்கின்றார்.

''தீபவிளக்கங் காண எனக்குன்
சீதள பத்மபாதந் தருவாயே''

என்று சிதம்பரத் திருப்புகழின் உயர்ந்த கருத்தை உன்னுந்தோறும் உள்ளம் உருகுகின்றது.

''கோவாத முத்தமே குறையாத மதியமே
கோடாத மணி விளக்கே'

என்று அருட்பிரகாச வள்ளலார் அம்பிகையைத் துதிக்கின்றனர். ஆதலினால் தீபத்தை வழிபட்டு, உள்ளேயுள்ள ஆணவ இருளையோட்டி ஞானயொளியைப் பெருக்க அறிஞர்கள் முயல்க.

# இந்து சமயம்

பேராசிரியர் டாக்டர்
**ஜே. ஜி. கண்ணப்பன்**
சென்னை.

## தெய்வ மணம் கமழும் திருநாடு

நம் இந்துசமய பூமி பழம் பெருபூமி. தெய்வமணம் கமழுகின்ற திருநாடு. தெய்வம் உண்டு என்ற கொள்கையும், தெய்வத்திற்கு உரிய ஐந்தொழிலான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற கொள்கையும் நம் நாட்டுச் சமயங்களில் பொதிந்துள்ளன. சுருங்கக் கூறின் 'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது' என்ற உண்மை நெறியைப் போற்றி விளங்குவது நம் நாடு.

## தெய்வம்

தெய்வம் என்னும் பொருளில் 'தேவு' என்னும் சொல்லை ஆழ்வார்களும் நாயன்மார்களும் பலப்பல இடங்களில் ஆண்டுள்ளனர். தேவு என்னும் சொல் 'தேவு' என்ற உரிச்சொல்லடியாகப் பிறந்தே. தேவு-தேவை-தேவர், தெய்வம் என்று 'சொல்லாட்சிகள்' வழங்கி வருவன கண்கூடு.

'தெவுக் கொளற் பொருட்டே' (தொல்காப்பியம் சொல்லதிகாரம். சூத்திரம் 345) என்ற

நூற்பாவால், 'தெவு' என்பதற்கு கொள்ளுதல் பொருட்டு என்ற பொருள்கள் புலப்படக் கணலாம். இந்த உண்மையைத்தெரிந்த தமிழர்கள் கடவுளை மாயோனாகவும் (திருமால்) சேயோனாகவும் (முருகன்) வேந்தனாகவும் (இந்திரன்) வருணனாகவும் வழிபட்டு வந்தனர்.

இதனை,

'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே''
(தொல்காப்பியம், அகத்தணையியல், சூத்திரம்-5)

என்னும் நூற்பா தெளிவாக்குகிறது.

இவ்வாறு தெய்வத்தைத் தமிழ்நாட்டார் பலவாறு போற்றினார்கள். பலதிருநாமங்களால் வணங்கினார்கள். நாளடைவில் கடவுளர் பெயர்கள் ஆயிரக்கணக்காகப் பெருகின.

மாணிக்கவாசகர் இதனை:

'ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ''
(திருவாசகம், திருத்தெள்ளேணம்.)

என்று நம் திருவாசகத்தில் கூறுகின்றார்.

இறைவனை அன்பு, சிவம், மங்கலம், அறம் என்ற பல பொருள்கள் கொண்ட செம்பொருளாக முன்னோர் போற்றினர்.

திருமூலர் அன்பு என்ற பொருளில்

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே''
—(திருமந்திரம்)

என்று கூறுகின்றார். இதனால் அன்பு நெறியே சிவநெறி என்பது தெளிவு, மனித உயிர்கள் மட்டும் அல்லாமல் அனைத்து உயிர்களிடத்து அன்பு செலுத்த வேண்டும் என்னும் கருத்தில்,

'எவ்வுயிரும் பராபரன் சந்நிதிய தாகும்
இலங்கும்உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்'

என்று கூறியுள்ளமையும் அறியத்தக்கதாகும். இதுபற்றியே திருவள்ளுவரும்

'அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை''
—திருக்குறள்-315.

என்று அருளியுள்ளார்.

## உலகத் தோற்றம்

உயிரைப் பற்றிநிற்கும் அழுக்கினைப் போக்கி, உயிரை ஆட்கொள்ளவே கடவுள் உலகத்தைப் படைத்தார். உலகத் தோற்றம் பற்றிக் கூறுகையில்,

'எந்தக் கடவுள் நெருப்பு, நீர், மரம், செடி, கொடி அனைத்து உலகங்களிலும் கலந்து இருக்கிறானோ அந்தக் கடவுளுக்கு வணக்கம்'

என்று சுவேதாசுவதர உபநிடதம் கூறுகிறது.

இறைவன் ஆதியில் நெருப்பை உண்டாக்கினான். நெருப்பில் அனேக கோடி உயிர்களை வாழச் செய்தான். பிறகு நீரை உண்டாக்கினான். நீரில் பல உயிர்களை உண்டாக்கினான். பிறகு, மரம், செடி கொடிகளையும் பறவை விலங்குகளையும் படைத்தான். இறுதியில் மனிதர்களைப் படைத்தான்.



நாம் வாழும் இவ்வுலகு போல் பல உலகங்களை (அண்டங்களை)ப் படைத்து உயிர்களையும் வாழச் செய்துள்ளான் இறைவன். அண்டங்கள் பல விண்ணில் இயங்குவதை,

''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பரும் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன''
—திருவாசகம்: திருவண்டப் பகுதி

என்று மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார்.

## உலக இயல்பு

நில உலகில் இன்பமும் துன்பமும் கலந்தே என்றும் உள்ளது. அங்ஙனம் இருக்கும் உலக இயல்பினை அறிந்து மெய்யுணர்வு மிக்க சான்றோர் பலர் பண்பு குறையாமல் வாழ்ந்தனர்.

இதே கருத்தைக் கூறவந்த சங்ககாலப் புலவரான 'பக்குடுக்கை நன்கணியார்'

'இன்னா தம்மஇவ் வுலகம்
இனிய காண்கஇதன் இயல்புணர்ந் தோரே''
—புறநானூறு

என்று குறிப்பிட்டுள்ளமை உன்னி மகிழத்தக்கது. உலகில் அறமும் மறமும், இன்பமும், துன்பமும் குணமும் குற்றமும் கலந்திருக்கின்றன. ஒருவன் ஒரு செயலைச் செய்யும்போது துன்பம் ஏற்படுவது இயல்பு என்பதனையும் உலக இயல்பறிந்து நல்வினை ஆற்றினால் முடிவில் இன்பம் கிட்டும் என்பதனை.

'துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை''
—திருக்குறள் 669

என்று திருவள்ளுவர் கூறியுள்ளமையும்அறியத் தக்கது.

## மனிதப் பிறவி

''அரிது அரிது மானுடராதல் அரிது'
என்று ஔவையார் கூறியுள்ளார்.

மன்-நினைப்பவன்; மனம் உள்ளவன்-மனிதன். மனிதன் சிந்திக்கும் தன்மைஉடையவன். நன்று எதுதீதுஎதுஎன ஆராய்ந்துதெளிபவன். மனிதன் விலங்கினின்றும் வேறுபட்டு நிற்கச், சான்றாக அமைவது பகுத்தறிவு எனப்படும் ஆறாவது அறிவே. அறிவெனப்படுவது நன்றின்பால் உய்ப்பதே. கல்வி அறிவின் பயன் இறையுணர்வு கொள்வதே என்ற கருத்தில்;

''கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்'' (-குறள்-2)

என்று வான்புகழ் வள்ளுவரும் கூறியமை நினைக்கத்தக்கது. கடவுள் மனிதப் பிறவியைப் படைத்ததற்கான காரணமாக

'மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்கு காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும்அரன் பணிக்காக அன்றோ''
(சிவஞான சித்தியார்)

என்று சிவஞான சித்தியாரும் கூறியுள்ளதை உணர்ந்து போற்றுவோம். உடம்பின் பயன் பற்றி ஔவையாரும்.

'உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்'
'மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தக்கால்
ஈசனைக் காட்டும் உடம்பு''

என்று குறிப்பிட்டுள்ளமையை எண்ணி மகிழ்க.

## உயிர்களை நல்வினை செய்யவொட்டாது தடுப்பது பாசம் :

அரிய மானிடப் பிறவி எடுத்தும் நல்வினை செய்யத் தடையாக இருப்பது பாசமாகும். இந்தப் பாசம் மூவகைப்படும். அவை ஆணவம், கன்மம், மாயை எனப்படும்.

ஆணவம்—உயிர்கள் தோறும் செம்பில் களிம்பு போல் சேர்ந்திருப்பது. உயிர்களின் அறிவை மறைத்து அஞ்ஞானத்தைப் புகட்டுவது. இறைவனை உணர ஒட்டாமல் தடுப்பது.

கன்மம்—வினை. மனிதனின் செயல்களே கன்மம். பிறவிகளுக்குக் காரணமாக அமைவது.

மாயை—ஆன்மாவை மயங்கச் செய்வது. ஆசை வெறுப்பு முதலியன.

பாசத்தின் வயப்படாமலிருக்கும் ஆன்மா பக்குவமடைந்து பரமுக்தியை அடைந்து இறைவனோடு ஒன்றி வாழும். ஆனால் மற்ற ஆன்மாக்கள் மரணத்தின்பின் இருள்உலகு, தேவஉலகு அதற்கப்பால் பல உலகங்களுக்குச் சென்று வாழும்.

## மறுஉலகு — மறுபிறப்பு

வானுலகு, தேவுலகு, புத்தேள் உலகு என்பதனைக் குறளாசிரியர்.

''யான்எனது என்னும் செறுக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.''

—குறள்-346.

'கள்வார்க்குத்தள்ளும்உயிர்நிலை, கள்ளார்க்கு
தள்ளாது புத்தேள் உலகு.''

—குறள் 290

போன்றகுறட்பாக்களில் தெளிவுபடுத்துகிறார்.

மேலும் குறளாசிரியர் மறுபிறவி பற்றிச் சில குறட்பாக்களில் கூறியுள்ளார்.
அதுபற்றி,

'எழுபிறப்பும் தீயவை தீண்டா; பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்''.

—குறள்: 62

''பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு''

—குறள் : 358

என்று கூறியுள்ளமை அனைவரும் அறிந்து நம்பத்தக்கதாகும்.

## முத்தி வழிகள்

ஆன்மா பரிபக்குவ நிலை அடைந்து பர முக்தியை அடைந்து இறைவனோடு ஒன்றி வாழும் தகுதியைப் பெற நான்கு நெறிகள் உள்ளன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன.

சரியை—ஒழுங்கான நெறியில் நடத்தல், ஆசையை மறந்து பயன் கருதாத அறப்பணிகள் செய்தல்.

கிரியை—புலனடக்கம், பொறை, அருள், அறிவு வாய்மை, தவம், அன்பு என்பன கொண்டு கடவுளை வழிபடுதல்.

யோகம்—வெளித்தோற்றங்களைத் துறந்து உள்ளடக்கி இறைவனோடு ஒன்றி இறையின்பம் நுகர்தல். (யோகம் - சேர்க்கை)

ஞானம்—சச்சிதானந்த வடிவில் பரம்பொருளுடன் இரண்டறக் கலந்துசெய்யும் ஆராதனை

## மதம்—இந்து மதம்

சிற்றின்பம் உலக இன்பம். அழியத்தக்க இன்பம். பேரின்பம் அழியாத இன்பம். இப் பேரின்பத்தை மக்கள் 'நுகரப் பெரியோர்கள் இறைவன் அருளுடன்' வகுத்த வழியே மதமாகும். மதம், சமயம் என்பன ஒரு பொருளே தருவன.

'இந்து மதம்' என்ற சொற்றொடர் பற்றிச் சில கருத்துக்கள் நிலவுகின்றன: ஆரியர்கள் சிந்துநதிப் பகுதியில் வாழ்ந்த போது அவர்களைச்'சிந்துக்கள்' என்ற பாரசீகச் சொல்லால் கிரேக்கர்கள் அழைத்தனர் பிறகு, இந்துக்கள் என்றும் அவர்கள் வாழ்ந்த நாட்டை இந்தியா என்றும்கூறினர். இக்கருத்து நேரியதன்று என்று கூறுகின்றனர்.

மேலும் இந்துசமயம் என்ற ஒரு தனிச் சமயம் பழங்காலத்தில் இல்லை என்றும் சைவம், வைணவம், சுமார்த்தம் போன்ற சமயங்களின் கூட்டமைப்பே இந்து சமயம் என்று பிற்றை நாளில் வழங்கப்பட்டதென்றும் கூறுவாரும் உளர்.

## இந்து மதத்தின் பெருமைகள்

இந்துமதம், மற்ற மதங்களுக்கெல்லாம் காலத்தால் முந்தியது. பிறமதங்கள் கூறும் சிறந்த கொள்கைகள் இதில் உள. இது எந்த மதத்தையும் இழிவுபடுத்தாமல் அணைத்துச் செல்கிறது. வெறும் நம்பிக்கையுடன் நில்லாமல் மனதில் எழும் ஐயங்களை நீக்கி மெய்யறிவினைப் புகட்டுகிறது. தனிஉரிமையுடன் வாழச் செய்கிறது. இல்லறத்தாலும், துறவறத்தாலும் முத்தி பெற வழிகாட்டுகிறது. உலகியலுடன் இணைந்து செல்லும் நெறிகளைக் கொண்டு விளங்குகிறது. இவ்வுலகில் பிறந்த அனைவரும் வேறுபாடின்றி சமயநெறிகளைக் கையாண்டு முத்தி பெறவாய்ப்புக்கள் உள்ளன. மறு பிறவியில் நம்பிக்கை உண்டு எனக் கூறுகிறது. விஞ்ஞானத்தாலும் அறிய இயலாத கருத்தை மெய்ஞ்ஞானத்தால் விளக்கி உரைக்கிறது. விவேகானந்தர் போன்றோரிடம் பிற நாட்டினரும் சமயத்துறையில் சீடர்கள் ஆனார்கள். அறிவியல் துறையில் முன்னேறியுள்ள நாட்டினர் பலர் நம் நாட்டில் இன்றும் வந்து, மெய்யுணர்வுக் கொள்கைகளைக் கற்கிறார்கள்.

## வைணவம்

வேதகாலத்தில் சூரியனே விஷ்ணு என வழிபட்டனர். பின்னர் இராமாயண, மகாபாரதக் காலங்களில் இராமன், கிருஷ்ணன் ஆகியோர் விஷ்ணுவின் அவதாரங்களாக ஆயினர்; தமிழ் நாட்டில் அன்பு என்ற பொருள் கொண்ட சொல் 'மால்' என்பது மாயோனாக உருக்கொண்டு இன்று விஷ்ணு என வடிவு பெற்றது. இம்மதக் கொள்கைகளைத்தழைக்கச் நிறுவியவர் இராமானுசர் என்று கூறுகின்றனர். இச்சமயம் வடகலை, தென்கலை என இரு பிரிவுகளைக் கொண்டு இன்று விளங்குகிறது. வடகலை என்பது வேதசாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டது. தென்கலை என்பது தமிழில் உள்ள ஆழ்வார்களின் கொள்கைகளைக் கொண்டது. வடகலையும் தென்கலையும் ஒன்றைவிட ஒன்று சிறந்தது என்ற மாறுபட்ட கருத்தைக் கொண்டு இன்று தம்முள் பூசலிட்டு வருகின்றன. இப்பூசல் நீங்கி இறையருளைச் சிந்தித்தால் வைணவ சமயம் மறுமலர்ச்சி அடையும்.

## சைவம்

சிவனை ஆன்மாக்கள் அடையத் தூய்மை, அறிவு, அருள் ஆகிய உறுப்புக்களைக் கொண்டு பேரின்பத்தைத் தருவது சைவம் எனப்படும். இதில் பதி, பசு, பாசம் பற்றிப் பேசப்படுகின்றன.

'டாக்டர் யூ. ஜி. போப்' சைவசமயத்தைத் தமிழரின் பழைய சமயம் என்று கூறியுள்ளார். சிவவழிபாடு பண்டைத் தமிழருடையது என்று 'ரகோசின்' என்ற மேலைநாட்டுச் சமயஅறிஞர் கூறியுள்ளார். இமயம் முதல் குமரிவரை சிவ லிங்க வழிபாடு இருந்து வந்திருக்கிறது. சிவ பெருமானை முதன் முதலில் ஒரு மர நிழலில் பீடமும், கற்பிழம்பும் அமைத்துத் தமிழர் வழி பட்டனர். அதுதான் சிவலிங்கம் என்று தந்திர நூல் (ஆகமம்) கூறுகின்றது. ஆதியில் மக்கள் கூடுமிடம் மரத்தடிப்பக்கமாக இருந்தது. அதனை மன்றம், அம்பலம் என்பர். அம்பலம் என்ற சொல் இன்றும் மலையாளத்தில்கோயில் என்ற பொருளில் வழங்கப்பட்டு வருகிறது. சிதம்பரத்தில் தில்லைமரமும், நெல்லையில் மூங்கிலும் குற்றாலத்தில் குறும்பலாவும் தல மரங்களாக உள்ளன.

## சைவத்தின் பரந்த நோக்கம்

ஒவ்வொரு சமயத்திலும் அருள்புரியும் பரம்பொருள் ஒன்றே என்பது சைவசமயத்தின் கொள்கை,

'அறிவினால் மிக்க ஆறுவகைச் சமயம்
அவ்வவர்க்கு ஆங்கே ஆரருள் புரிந்து'

என்று தேவாரம் இவ்வுண்மையை நன்கு உணர்த்துகின்றது. அறிவு குறைந்தோர் புதிய சமயங்களை வகுத்து எங்கு பரப்பினும்குற்றம் இல்லை. அது எம்தலைவனாகிய சிவபிரா னுக்கு ஏற்புடையதே என்பதனை

'விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம்
செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற்கு
ஏற்றதாகும்.''

என்று அப்பர் பாடிய அருள்திறம் எண்ணி எண்ணி இன்புறத் தக்கதாகும். எனவே இவ் வுலகில் சைவமே மெய்ச் சமயம், மற்றைய பொய்ச் சமயம் என்று அது புகலவில்லை என்று தெள்ளிதின் உரைக்கின்றது என்று தெரிகிறது.

ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்ற பரந்த கொள்கை உடையது சைவம். ஆனால் பிற்றைநாளில் சைவ சமயக் கொள்கை உண ராத பிறர் ஆலயங்களில் பூசை செய்ததனா லும் நடைமுறை நிகழ்ச்சிகளைப் பார்த்த தாலும் கோயில்களிலும் சாதிப்பாகுபாடு ஏற் பட்டது. கோயிலுக்குள் சிலசாதியார் செல்லக் கூடாதென்றும், அங்ஙனம் சென்றாலும் இன்னார் இன்ன இடத்தில்தான்நிற்கவேண்டும் என்ற நிலையும் ஏற்பட்டது. சைவ சித்தாந் தத்தில் சமயத்துக்கும் சாதிக்கும் சம்பந்த மில்லை என்பதனை,

''சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமுங் கொண்டு என்செய்வீர்''

என்றும்

''ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவு ளாரே''

என்றும் கூறுகிறார் அப்பரடிகள்.

மாணிக்கவாசகரும்,

'சாதிகுலம் பிறப்பென்னும் சுழிபட்டுத்
தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லல் அறுத்து
ஆட்கொண்டு''

என்று தம் திருவாசகத்தில் உரைக்கின்றார்.

ஆதலால், கோத்திரமும் குலமும் பாராட்டி ஆண்டவன் அருளை அடைய முடியாதுஎன்பது தெளிவுபடுகிறதன்றோ? எந்தக் குலத்தில் பிறந்தாராயினும் பக்குவப்பட்ட ஆன்மாக்களே பரகதி அடைவர் என சைவசித்தாந்தம் சாற் றும் உண்மையினை உலகு விரைவில் அறிவ தாக. பிறசமயத்தைச் சேர்ந்த சாக்கிய நாய னார், புலையர் குலத்தில் பிறந்த நந்தனார் போன்றோர் இறையருளைப் பெற்றதாகப் பெரியபுராணம் பேசவில்லையா? இதனை உலகோர் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே சாதியினும் சீலமே சிறந்தது: குலத்தினும் குணமே உயர்ந்தது' என்ற உண்மையினைச் சைவம் கொண்டு இலங்குகின்றது என்பது தெளிவு.

சைவத்தின் பேருண்மை தெரிந்த புத்த மதத்தைச் சேர்ந்த சாக்கிய நாயனார், சாரி புத்தர் என்ற சாக்கிய முனிவர் ஆகியோரும் சமண சமயத்தைச் சேர்ந்த மகேந்திரவர்மப் பல்லவ அரசன் போன்றோரும் சைவசமயத்தில் சேர்ந்து அருள் பெற்றதாகப் பெரியபுராணம் கூறுகிறது.

## லிங்காய மதம்

லிங்காய மதம் கன்னட நாட்டில் பெரி தும் பரவியுள்ளது. முத்தியடைதல் என்ற கொள்கையில் சிறிது வேதாந்த நெறியைத் தழுவியுள்ளது. அச்சமயத்தாரின் நூல் 'வீர ஆகமம்' எனப்படும். எனவே அவர்கள் வீர சைவர் எனப்பட்டனர். சைவசித்தாந்தத்தி னின்றும் சிறிது வேறுபட்டது. சாதி உயர்வு தாழ்வு போற்றிய காலத்தில் இவர்களும் ஐயர் எனப்பட்டனர்.

## சுமார்த்த மதம்

சுமார்த்த மதத்தில் மூர்த்திகள் மூன்று எனவும் அவர்கள் பிரமன், விஷ்ணு, ருத்திரன் எனவும் கூறுவர். சுமார்த்தர்கள் ஸ்மிருதிகள்

கூறியவற்றையே ஆதரிப்பர். அதில் 'ஆகமம்' அல்லது 'தந்திரம்' பற்றிச் சிறப்பித்துக் கூறுவரால் 'ஓரளவு ஆகம நெறியையும் சுமார்த்தர்கள் போற்றுகின்றனர். நெருப்பு வாயிலாகவும் பிற இயற்கைப் பொருள் வாயிலாகவும் ஆசிரியர்கள் செய்த கடவுள் வழிபாடே சுமார்த்த நெறி என வழங்கப்பட்டது. இக் கொள்கை, முதன் முதலாகத் தோன்றிய ரிக்கு வேதத்தில் உண்டு என்பதும் ரிக்குவேதமே நாளடைவில் பரந்து விரிந்து நான்கு வேதங்களாயின என்பதும் சமயச்சான்றோர் கூற்றாகும். வருணாசிரமம் சமயத்தோடு நம் நாட்டில் பிறகு கலந்தது. இங்ஙனம் வருணாசிரமம் கலந்ததன் விளைவால் பிராமணனாய்ப் பிறந்தால் ஒழிய முத்தியடைய எவராலும் முடியாது என்ற கொள்கை நிலைபெற்றது. வருணம் வேரூன்றியது. பிறகு இம்மதம் 'பூருவ மீமாம்சை' ஆக விரிந்தது.

ஆன்மா என்பது மாயையின் வழியாகக் காணப்படும் பிரமத்தின் பிரதிபிம்பம் என்பது அவர்கள் கருத்து. பிரமத்தை உணர்ந்தவன் பிராமணன் என்பது அவர்கள் கொள்கை. அங்ஙனம் உள்ள பிராமணர்கள் யாதொன்றையும் வழிபட வேண்டியதில்லை என்பது சங்கரர் கொள்கை. பிராமணர்களிலும் அறியாமை உடைய சீவான்மாக்களையுடையோர் காமியப் பயன்கருதி பல தெய்வங்களை வழிபட வேண்டும் என்ற இருவழி கொள்கை சுமார்த்த வேதாந்த சமயத்தில் உள்ளன. அதாவது உயரிய ஆன்மா தெய்வங்களை வழிபட வேண்டாம். தாழ்ந்த ஆன்மாவே வழிபட வேண்டும் என்று கூறுகிறது. உருத்திரனும் சிவனும் ஒன்றென்பர் சுமார்த்த வேதாந்திகள். உருத்திரனை துறவிகள் வழிபடல் வேண்டும் என்றும் இல்லறத்தார் விஷ்ணுவை வழிபட்டுச் செல்வச் சிறப்போடு வாழ வேண்டும் என்றும் சுமார்த்த வேதாந்தம் கூறுகிறது. இக்கொள்கை சைவ சித்தாந்தத்திற்கு முரண்பட்டுக் காணப்படுகிறது. இதுபற்றி நடுநிலை பிறழாத சமய அறிஞர்கள் முத்தி நெறியினை நோக்கமாகக் கொண்டு ஆராய்ந்து அறிவார்களாக.

மனுஸ்மிருதியில் கோயில் பணியாற்றும் குருக்கள் சிராத்தம் செய்யக் கூடாதென்று கூறுகின்றது.

இவை போன்ற கொள்கைகளைக் கொண்ட பல சமயங்களின் கூட்டமைப்பே இந்துமதம் என்று பார்த்தோம். இனி ஆன்மா முத்திநெறி பெறுவதற்கான வழிபாடு முதலான நெறிமுறைகளைப் பற்றிக் கீழே காண்போம்.

## கோயில் (ஆலயம்)

அண்டங்களுக் கெல்லாம் அப்பாற்பட்டு எங்கும் நீக்கமற நிற்கின்ற சர்வ வல்லமையுள்ள கடவுளை நாம் எங்கு காண்பது? இப் பூவுலகத்திற்கு மட்டுமல்லாமல் எல்லா அண்டங்களுக்கும், சூரியன் சந்திரன் முதலிய



கோளங்களுக்கும் எல்லா அரசர்களுக்கும் தேவர்களுக்கும் அதிபதியாகிய ஆண்டவனை இலகுவில் கண்டு வணங்க ஆலயங்களைக் கட்டுவித்து அதில் அவரை எழுந்தருளச் செய்திருக்கிறார்கள் அறிஞர்கள். ஆ—ஆன்மாக்கள்; லயம்-ஈடுபட்டு நிற்கும் இடம் என்று சமய அறிஞர்கள் ஆலயம் என்ற சொற்கு விளக்கம் தந்துள்ளார்கள். கோ-இறைவன்; இல்-இருக்குமிடம் என்று கோயில் என்ற சொல்லுக்குப் பொருள் கூறுகின்றனர்.

ஆன்மாக்களின் மனது பிற இடங்களைப் பார்க்கிலும் சிறப்பாக ஆலயங்களில் ஈடுபடக் கூடிய முறையில் முறையாகப் பலவிதஅமைப்புகளுடன் கட்டப்பட்டுள்ளன. மனம் ஒன்றி மக்கள் பலரும் ஒன்றுகூடும் இடம் ஆலயமாக அன்றும் இன்றும் இருந்து வருவதை நாம் அறிவோம். ஆலயங்களைப் போல விசாலமான இடங்களும், வசதிகளும் தூய்மையும் பிற இடங்களில் கிடையா. இங்ஙனம் தூய்மை நிறைந்து மன ஒருமைப்பாட்டுக்கு உறுதுணையாகவும் அமைதி நிறைந்த சூழலை உடைய ஆலயத்தில் எல்லாம் வல்ல இறைவனை மனம் ஒன்றி வழிபட, நமக்குத் தகுதியறிந்து வேண்டுவன நல்குகின்றான் என்பது உண்மை.

## வழிபாடு

மனம் ஒன்றி பக்தி உண்டாகப் பாடுவதும் மன அமைதியுடன் ஆண்டவனின் அருட் குணங்களில் லயித்து இருப்பதும் வழிபாடு

எனச் சமயப் பெரியார்கள் சாற்றுகின்றனர். பாடும்போது பொருள் உணர்ந்து உயிர், உடல் மனம் ஒன்றப்பாடித் தன்னையும் உலகையும் மறந்தநிலையில் ஒருவித இன்பம் கிட்டித் திளைக்கிறோம். புரியாத மொழியில் பாடி, என்றும், ஒருவன் ஆண்டவனின் அருளைப் பெற முடியாது. அங்ஙனம் புரியாத மொழியில் பாடி ஆண்டவனின் அருளைப் பெறப் புகின் கானல் நீராகமுடியும் என்பது ஒருதலை. இசையில் ஈடுபட்டவன் ஈசன் என்பதை உணர்ந்து இசையுடன் பாடவேண்டும்.

ஆண் ஆனாலும் சரி பெண் ஆனாலும் சரி நாள்தோறும் காலையில் எழுந்து குளித்துத் தூய ஆடை உடுத்தி ஆண்டவனை நினைத்துத் தமக்கும் பிறருக்கும் கேட்கும் படிவாயார, மனமார, உளம் கசிய, உடல் நெகிழப் பாடி வணங்கல் நன்று. இதைக் குறித்தே மணிவாசகரும்

''பாடவேண்டும் நான்போற்றி நின்னையே
பாடி நைந்து உருகி நெக்குநெக்கு
ஆடவேண்டும் நான்போற்றி அம்பலத்து
ஆடும் நின்கழல் போது வாயினேன்
கூடவேண்டும் நான்போற்றி இப்புழுக்
கூடு நீக்கு, எனைப்போற்றி பொய்யெல்லாம்
வீடவேண்டும், நான்போற்றி வீடுதந்து
அருளு போற்றி நின்மெய்யர் மெய்யனே''

என்று அருளியுள்ளார். அவ்விதம் செய்யும் காலை மனம் லயித்துவிடுகிறது. பண்ணோடு ஒருவர் பாடிக்காட்டப் பலரும்கூடி அங்ஙனமே பாடுவதில் தனிச் சிறப்பு உள்ளது.

ஆண்டவனைப்பாடி அருள்பெற்ற வள்ளல்களின் பாட்டுக்களைப் பாடுவதில் பயன் உண்டு கடவுளைப் பற்றிப் பாடும் பாட்டுக்களைப் பக்திப் பாடல்கள் என்றும் தோத்திரப் பாடல்கள் என்றும் கூறுகிறோம். எனவே ஒவ்வொருநாளும் பலரும் சேர்ந்து இறைவனின் பெருமைகளையும் நம்முடைய சிறுமைகளையும் உணர்ந்து கூட்டுவழிபாடு நடாத்துதல் நலம் விளைவிக்கும்.

முற்றறிவும், பெருங்கருணையும் தன்னை உபகாரி என்று காட்டிக் கொள்ளாதவனுமாகிய ஆண்டவனை நாள்தோறும் காலையும் மாலையும் வழிபடல் வேண்டும். இங்ஙனம் வழிபட நாளடைவில் அவனது சிறந்த குணங்கள் நம்மிடம் பதிந்து மெய்ஞ்ஞானம் உண்டாகித் துன்பமில்லாத வாழ்க்கையை அடையலாம், இவ்வுண்மையினை

'நாமார்க்கும் குடியல்லோம், நமனையஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம், பிணியறியோம், பணிவோ
மல்லோம்,
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரன் சங்கவெண் குழையோர் காதில்
கோமார்க்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே''

என்று திருநாவுக்கரசர் கூறியுள்ளார்.



மணிவாசகரும்,

'தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி''

என்று பாடியுள்ளமை அறிந்து பின்பற்றத் தக்கது.

## சமயங்கள் சீர்கெடக் காரணம்

சமயத்தில் உறுதிப்பாடு இல்லாதவர்களாலும், புதுமை என்ற பெயரால் ஒவ்வாத கொள்கையுடையோராலும், மொழி, சாதி உயர்வு தாழ்வு கருதியோராலும் உள் வினைகள் பிறந்தன.

நாளடைவில் இந்துமத மக்கள் சமய ஞானம் இன்றிப் படித்துப் பட்டம் பெற்றனர். அதனால் சமயம் போற்றுவார் அற்றநிலையில் மங்கிய நிலையில் காணப்பட்டது. மதப் பற்றாளர்களும் சமயத்தின் பெயரால் போரிட்டுக் கொண்டனர். சமய அறிவு சிறிதும் இல்லாதார் தூற்றினர். இன்ன பிற காரணங்களால் கல்லா மாந்தர் பிற சமயம் புகத் தொடங்கினர்.

## இந்து சமய வளர்ச்சிக்குரிய பணிகள்

1. உலகாயத (நாத்திக) மதத்தினரும் கடவுள் கொள்கையுடன் வாழும்படி செய்ய வேண்டும்.

2. இறந்தவர்களைப் பிறப்பு, இறப்பு அற்ற கடவுளர்களாகக் கொள்வோருக்குத் தக்க அறிவு புகட்ட வேண்டும்.

3. பெயர் வேற்றுமை கொண்டு பூசலிடாமல் எல்லாப் பெயரும் பரம்பொருளையே சுட்டுகின்றது என்ற பொதுமை உணர்வினைக் கொள்ளுமாறு செய்ய வேண்டும்.

4, அஞ்ஞானம் அகன்றால் பிரமத்தை உணரமுடியும் என்பதனைக் கூறவேண்டும்.

5. ஆணவம், கன்மம், மாயை பற்றிச் சாதாரண மக்களும் உணருமாறு செய்ய வேண்டும்.

6. எல்லா மதங்களும் கூறும் ஆன்ம ஈடேற்றத்தை ஒருவழிப்படுத்த வேண்டும்.

7. முத்திக்குரிய மார்க்கங்களைத் தெளிவுபடுத்திக் காட்டவேண்டும்.

8. ஆலயம், திருவுருவம், வழிபாடு, விழாக்கள், சின்னங்கள், தீக்கைகள் முதலிய வற்றின் அவசியத்தை விஞ்ஞான ரீதியில் மெய்ப்பிக்க வேண்டும்.

9. ஏனையோர் கூறும் பழிப்புரைகளுக்கு தக்க அமைதி கூறவும். சொற்பொழிவு முதலானவற்றிற்கும் குழுக்கள் அமைக்க வேண்டும்

10. அர்ச்சகர் முதல் அறங்காவல் வரை தேவையான சமயப் பயிற்சி பெற்று இருத்தல் வேண்டும்.

11. ஒவ்வொரு மதத்திற்கும் மதநூல் இருப்பது போல இந்து சமயத்திற்கெனப் பொதுவான ஒரு நூல் தேவை.

12. மாறுபட்ட முறையில் கூறும்புராண இதிகாசக் கருத்துக்களை விளக்கவேண்டும்.

13. ஆலய வருவாய் கொண்டு அறப் பணிகளைத் தக்கவர்களுக்குச் செய்ய வேண்டும்.

14. மாநிலம், மாவட்டம், வட்டம் கிராமம் என்ற நிலைகளில் சமயக் கிளைகள் ஏற்படுத்தச் செயல்படல் நன்று.

15. பள்ளிப் பாடத்திட்டத்தில் சமயக் கல்வியைச் சேர்த்தல் நன்று.

16. இந்து மதத்தார்க்கான மாணவ இல்லங்கள் காப்பகங்கள் மருத்துவமனைகள் தொழிற்சாலைகள் முதலியன ஏற்படுத்தல் நலம் பயக்கும்.

17. வெளி ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து எளிமையுடன் சமயப் பணிகளைத் தொலைநோக்குடன் செய்தல் வேண்டும்.

18. பிறமொழி வல்லுநர்களைக் கொண்டு சமயக் கருத்துக்களை மொழியாக்கம் செய்தல் உடனடித் தேவை.

19. பிறநாடுகளில் சமயப் பிரச்சார நிலையங்கள் ஏற்படுத்தி நடத்துதல் நலம்.

20. பூசை, விழாக்கள் அவரவர் தாய் மொழியிலே புரியும்படி நடத்துதல் இன்றியமையாதது.



21. மொழி, இன ஆதிக்க உணர்வுக்கு முதலிடம் தராமல் யாவரும் முக்தி பெறத் தகுதி உடையவர்கள் என்ற உண்மையை உதட்டளவில், கூட்டத்தில் கூடிப் பேசியது உடன் நில்லாமல் மெய்வழிச் செயல்படல் வேண்டும்.

22. சிவாலயங்களில் தீக்கை பெற்றவர்களே பூசை செய்யலாம் என்ற கொள்கை சட்டமாக்கப்பட வேண்டும்.

23. வீட்டின்பம் பெற உதவுவது வருணமன்று, பக்தி நெறியே என்று அனைவரும் உணரச் செய்ய வேண்டும்.

24. ஆலயங்கள் அதனதன் விதிப்படி இயங்க வேண்டும்.

25. இன்றுள்ள ஆலயவழிபாடு, பூசை செய்வதற்குரியோர், அதற்கான மொழிபற்றிய உச்சநீதிமன்றத் தீர்ப்பு மாற்றி அமைத்தல் வேண்டும்.

## முடிவுரை

இதுவரை நம் நாட்டின் பெருமை, உலகத் தோற்றம், உலக இயல்பு மானுடப் பிறவி, உடல் உயிர்க்குள்ள தொடர்பு, முக்திக்குரிய வழிகள், மதம், இந்துமதம், அதன் உட்பிரிவுகள், சைவசமயத்தின் பொதுமைக்கருத்து ஆலயத்தின் பயன், வழிபாட்டுமுறை, இந்து மதம் மங்கக் காரணங்கள், இந்துமத வளர்ச்சிக் குரிய பணிகள் ஆகியவை பற்றி பார்த்தோம்.

முற்றும்.

# கண்ணப்ப நாயனார்

பேராசிரியை சுமதி குமாரசுவாமி

துணை இயக்குநர், செவிலியல், மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை-5.

பக்தியில் கண்ணப்பருக்கு ஒப்பான பக்தர் இல்லை என்று போற்றுகிறார் மாணிக்க வாசகப் பெருமான்.

''கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை
கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையுமாட்
கொண்டருளி
வண்ணப்பணித் தென்னை வாஎன்ற
வான்கருணை
சுண்ணப் பொன் நீற்றற்கே சென்றாதாய்க்
கோத்தும்பீ''

என்று பக்தியில் சிறந்தவராகக் கண்ணப்பரைப் போற்றுகிறார் மணிவாசகர். பட்டினத்தடிகளும் 'தொண்டு செய்து நாளாறில் கண் இடந்து அப்ப வல்லேன் அல்லேன்'' என்று கண்ணப்பரின் திருத்தொண்டைப் போற்றி உரைக்கின்றார். திருத்தொண்டர்கள் போற்றும் பெருந்தொண்டராக விளங்கும் கண்ணப்ப நாயனாரின் வரலாற்றை இக்கட்டுரையில் விரிவாகக் கண்டு மகிழ்ந்திடுவோம்.

நாவலர் புகழ்ந்து போற்றும்நல்வளம் பெருகி நின்ற பொத்தப்பி நாட்டின்கண், அதன் தலைநகரான உடுப்பூரில் வாழ்ந்திருந்த வேடுவர் தலைவனான நாகனுக்கும், அவன் மனைவி தத்தைக்கும் அவர்கள் செய்த தவம் காரணமாகத் தோன்றியவரே நாம் காணப் போகும் கண்ணப்பநாயனார்.

நீண்ட நெடுங்காலம் நாகன்-தத்தன் தம்பதியினருக்கு மக்கட் செல்வம் வாய்க்கவில்லை. இனி இவர்களுக்குக்குழந்தைப்பேறு வாய்ப்பது அரிது என்று பலரும் கூறி வந்த வேளையில் நாகன்-தத்தன் தம்பதியினர் சஷ்டி விரதம் இருந்து குறவர்குலம் போற்றும் குமரப் பெருமானை துதித்தனர். அவன் குடி கொண்ட ஆலயங்களுக்குக் காணிக்கைப் பொருளாக மயிலையும், சேவலையும்செலுத்தி வழிபட்டனர். 'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என்பது பழமொழி. சஷ்டி விரதம் இருந்து முருகப்பெருமானை வழிபட்டால் அரியதான பிள்ளைப் பேறும் எளிதாக வாய்க்கும் என்பது ஆன்றோர்கள் அனுபவ உரை. 'அகப்பை' என்பது அகமாகிய கருப்பையைக் குறிக்கும். நாதனும் தத்தையும் சஷ்டி விரதம் இருந்ததால், தத்தையின் அகப்(கருப்)பையில் தவக்குழந்தை ஒன்று பிறந்தது என்கிறார் சேக்கிழார் பெருமான்.

'பொருவருஞ் சிறப்பின் மிக்கார்
இவர்க்கினிப் புதல்வர்ப் பேறே
அரியதென் றெவரும் கூற
அதற்படு காத லாலே
முருகலர் அலங்கல் செவ்வேள்
முருகவேள் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும்
பராய்க்கடன் நெறியில் நிற்பார்''

''வாரணச் சேவ லோடும்
வரிமயிற் குலங்கள் விட்டுக்
தோரண மணிகள்தூக்கிச்
சுரும்பணி கதம்பம் நாற்றிப்
போரணி நெடுவே லோற்குப்
புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங் காடல் செய்து
பெருவிழா எடுத்த பின்றை''

என்று முருகப்பெருமானுக்கு நாகனும் தத்தையும் மேற்கொண்ட விரதச் சிறப்பை விரித்துரைக்கின்றார் சேக்கிழார் பெருமான்.

முருகப் பெருமான் அருளால் தத்தைக்கு அகப்பை வாய்த்து, பத்துத் திங்கள் கழிய, பாற்கடலிலிருந்து முழுமதி தோன்றுவதுபோல தத்தை ஒரு அழகிய குழந்தையை ஈன்று எடுக்கின்றாள். தேவர்கள் அக்குழந்தை பிறக்கும் போது தேவ துந்துபிகளை முழக்குவதோடு, கற்பக மலர்களையும் சொரிந்து போற்றுகிறார்கள். நாகனும் தத்தையும் செய்த புண்ணியமும், இவ்வுலகம் செய்த புண்ணியமும் காரணமாக அத்தவக் குழந்தை மயிலுடைக் கொற்ற வூர்தி அண்ணலார் அருளால் பிறந்தமையால், திண்ணெனக் கனமாக இருந்ததாம். ஆகவே பெற்றோர்கள் குழந்தைக்குத் 'திண்ணன்'. எனவே பெயரிட்டு அழகினுக்கு அழகு செய்யும் அணிகலன்கள் பல அணிவித்துப் போற்றி வளர்க்கிறார்கள்.

'அண்ணலைக் கையில் ஏந்தற் கருமையால்
உரிமைப்பேரும்
திண்ணனென் றியம்பும் என்ன திண்சிலை
வேடர் ஆர்த்தார்
புண்ணியப் பொருளாய் உள்ள பொருவில்சீர்
உருவி னானைக்
கண்ணினுக் கணியாத் தங்கள் கலன்பல
அணிந்தார் அன்றே'

புண்ணியப் பொருளாய் வந்த 'திண்ணன்' கண்ணினுக்கு அணியானவன் என்று போற்றுவ தோடு, அவருடைய குழந்தை விளையாட் டொன்றைக் கூறும் வகையில் எப்படிப்பட்ட ஒரு பெருஞ்செயலை அவர்பின்னாளில் ஆற்ற இருக்கிறார் என்பதையும் சேக்கிழார் பெரு மான் அகம் நெகிழ்ந்து வருணித்திருக்கிறார் கீழ்க்காணும் பாடலில்,

'பொருபுலிப் பார்வைப் பேழ்வாய்
முழையெனப் பொற்கைநீட்ட
பரிவுடைத் தந்தை கண்டு பைந்தழைக்
கைக்கொண் டோச்ச
இருசுடர்க் குறுகண் தீர்க்கும் எழில்வளர்
கண்ணீர் மல்கி
வருதுளி முத்தம் அத்தாய் வாய்முத்தம்
கொள்ள மாற்றி''

வேடர் தலைவனாகிய நாகனின் வீட்டு வாயிலில் ஒரு புலி கட்டிவைக்கப்பட்டிருக்க, குழந்தை திண்ணன் அச்சம் அறியாது அதனருகில் சென்று விளையாடுகிறான். விளை யாடுவதோடுஇராமல் குகை போல இருக்கும் புலியின் வாயிற்குள்ளும் தன் பொற்கரத்தை நீட்டுகின்றான். புலி கடித்து விட்டால் என்ன செய்வது எனப் பதற்றத்துடன் அங்கு ஓடி வந்த தந்தை நாகன், இனி திண்ணன் புலி யிடம் விளையாடக்கூடாது என்று அச்சுறுத் தும் வகையில் ஒரு சிறு தழையைக் கையில் கொண்டு அடிப்பதுபோல் பாவனை செய்ய, குழந்தை திண்ணன் அழுகின்றானாம். அழும் திண்ணன் கண்களில் முத்துபோல் கண்ணீர் துளிர்ப்பதைக் காட்டும் சேக்கிழார் பெருமான் அக்குழந்தையின் கண்கள் எத்தகைய தவம் செய்த கண்கள் தெரியுமா என்று வியந்திடும் வகையில், 'இரு சுடர்க் குறுகண் தீர்க்கும் எழில் வளர் கண் நீர்மல்கி' என்று இப்பாடலில் போற்றியிருப்பதைக் காணுகின்றோம். சிவ பெருமானார் திருக்கண்களாக விளங்கும் பேறு பெற்றவை சூரியனும், சந்திரனுமாகிய இரு சுடர்கள். அவைகளுக்கு ஏற்படப் போகும் துன்பத்தைத் தீர்க்கவென்றே உள்ள திண்ண னார் கண்களில் கண்ணீர் முத்துக்கள் போல திரண்டன; குழந்தையின் கண்ணீர் கண்ட தாய் தத்தை ஓடி வந்து பரிவுடன் குழந்தையை ஏந்தித் தன் வாய் முத்தம் தந்து, கண்ணீர் முத்துக்களை மாற்றினாள் என்று சேக்கிழார் வருணித்துள்ள நயம் போற்றி மகிழத்தக்க தாகும்.

குழந்தையாக இருந்த திண்ணனார் வளர்ந்து பன்னிரண்டு வயது பாலப் பருவம் அடைந்ததும் அவருக்கு வில்வித்தை கற்பிக்க ஏற்பாடு செய்தான் நாகன். வில் வித்தையில் முதன் முதலாக வில்லைக் கைபிடிக்கக் கற்றுத் தரப்படும். அம்முதல் சடங்கு நிகழ்வதைக் காண அத்தனை வேடர்களும் அளவற்ற பரிசுப் பொருட்களோடும் ஆனந்த மிகுதி யோடும் வந்து கூடினராம். இவ்விற்பிடித்தல் சடங்கு ஏழுநாள் நடை பெறுகிறது. விழா, விருந்து, நகர்வலம் என ஏழு நாட்களும் ஒரே கோலாகலமாகத் திகழ்கிறது. ஏழாம் நாள் நடுப்பகல் நேரத்தில் திண்ணனார்க்கு வில்லைக் கையில் பிடிக்கக் கற்பிக்கிறார்கள் வில்லாசிரி யர்கள்.

'வெங்கதிர் விசும்பின் உச்சி மேவிய பொழுதில்
எங்கும்
மங்கல வாழ்த்து மல்க, மருங்குபல் லியங்கள்
ஆர்ப்பத்
தங்கள்தொல் மரபின் விஞ்சைத்தனுத்
தொழில் வலவர்தம்பால்
பொங்கொளிக் கரும்போர் ஏற்றைப்
பொருசிலை பிடிப்பித்தார்கள்''

விரைவிலேயே வில்வித்தை முழுவதும் கற்றுத் தேர்ந்து விடுகிறார் திண்ணனார். 'முற்றக் கற்றனன் என்னையாளும் கான வர்க்கு அரிய சிங்கம்' என்று போற்றுகிறார் சேக்கிழார். வில்வித்தையுடன், மற்ற படைக் கருவிகளைக் கையாளவும் கற்றுக் கொள்ளும் திண்ணனாருக்குப் பதினாறு கலைகளும் நிரம்பி முழுமதியம் நிறைவதைப்போல, பதினாறு வயது நடைபெறுகின்றது.

'வண்ணவெஞ் சிலையும் மற்றப் படைகளும்
மலரக் கற்றுக்
கண்ணகல் சாயல் பொங்கக் கலைவளர்
திங்களே போல்
எண்ணிரண் டாண்டின் செவ்வி எய்தினார்
எல்லை இல்லாப்
புண்ணியம் தோன்றி மேன்மேல் வளர்வதன்
பொலிவு போல்வார்'

திருஞானசம்பந்தர் இவ்வுலகில் சிறந்தது பதினாறு வயதில்தான். 'புண்ணிய பதினா றாண்டு பேர் பெறும் புகலி வேந்தர்' என்பர் சேக்கிழார் பெருமான். அவரைப் போலவே பதினாறு வயதில் திண்ணனார் பேர் பெறப் போவதைப் போற்றிடும் வகையால், 'எண்ணி ரண்டாண்டின் செவ்வி எய்தினார்' என்று சேக்கிழார் போற்றிக் கூறியிருக்கக் காண்கிறோம். வேடுவர் தலைவனான நாகனும் தனக்கு மூப்பு வந்துற்றமையால் தன் மகனை அரசனாக்க உளம் கொண்டு அதனை மற்ற வேடுவர்களுக்கு அறிவித்து அவர்தம் இசைவினைப் பெறுகின்றான். தேவராட்டியை வரவழைத்து காட்டுத் தெய்வங்களுக்குப் பூசை செய்து, திண்ணனுக்கு வேடுவர்குலத் தலைமை வழங்கி அகம்மகிழ்கின்றான் நாகன்.

குன்றொத்த திண்ணன் தோளிரண்டை யும் இறுகக் கட்டி அணைத்துக் கொண்ட நாகன், திண்ணனை செழும்புலித்தோல் இருக் கையில் அமர வைத்து ஆசி கூறுகின்றான்.

''நம்முடைய குலமறவர் சுற்றத் தாரை
நான்கொண்டு பரிந்ததன்மேல் நலமே
செய்து
தெம்முனை யில்அயற்புலங்கள் கவர்ந்து
கொண்ட
திண்சிலையின் வளமொழியாச் சிறப்பின்
வாழ்வாய்
வெம்முனையின் வேட்டைகளும் உனக்கு
வாய்க்கும்
விரைந்துநீ தாழாதே வேட்டை யாட
இம்முரண்வெஞ் சிலைவேடர் தங்க ளோடும்
எழுகஎன விடைகொடுத்தான்
இயல்பின்நின்றான்'

தந்தையின் ஆணையைத் தலைமேல்ஏற்று சிந்தை பரங்கொள்ள நின்ற திண்ணனாரும்



முதல்வேட்டைக்குப் புறப்படுகிறார். வேட்டை
நாய்களுடன் சில வேடுவர் முன்னோட,
பார்வை விலங்குகளுடன் சில வேடுவர் பின்
தொடர, தாரை தப்பட்டை முதலானவற்றை
முழக்கி சில வேடுவர் உடன் வர, நாணன்,
காடன் ஆகிய தன் இணைபிரியா நண்பர்
களும் உடன் வர, வேட்டைக்குத் திண்ணனார்
புறப்பட்டுச் செல்கின்றார். காட்டுப்பன்றி
ஒன்று சிவபெருமானைக் காட்டும் பன்றிபோல
திண்ணனார் எதிர்ப்படுகின்றது. அப்பன்றியை
துரத்திக்கொண்டு செல்லும் திண்ணனார் அப்
பன்றியை நெருங்கியதும் தம் கைவாளால்
குத்திக் கொல்கிறார். அப்பன்றியை விரட்டிப்
பலகாத தூரம் ஓடிவந்த படியால் நாணனுக்
கும் காடனுக்கும் பசிதாகம் உண்டாகிறது.
'இப்பன்றியைத் தழலில் காய்ச்சித் தின்று
தண்ணீர் குடிப்போம்.' என்று அவர்கள் கூறு
கின்றனர். தண்ணீர் எங்கே கிடைக்கும் என்று
திண்ணனார் வினவ, அருகில் உள்ளது பொன்
முகலி ஆறு எனக் கைகாட்டுகின்றனர். திண்ண
னார் பொன்முகலி ஆற்றின்கரையில் உயர்ந்து
நிற்கும் காளத்தி மலையைக் கண்டதும் உடற்
புளகாங்கிதம் உறுகிறார். உடன் குன்றின்
உச்சிக்குப் போகவேண்டும் என்றும்கூறுகிறார்.
நண்ணனும் 'மலைக்குச் சென்றால் நல்ல
காட்சியே கிடைக்கும். அத்திருக்காளத்தி
மலைமீதுதான் குடுமித் தேவர் இருக்கிறார்,
அவரைக் கும்பிடலாம்' என்று கூறுகின்றான்.
குடுமித் தேவர் பெயரைக் கேட்டவுடனே
மேலும் ஆர்வம் பொங்கிடும் திண்ணனார் .
"தேவர் அங்குள்ளாரா? வா உடன் போவோம்'
என்று கூறி மலைக்கு விரைந்து செல்கிறார்.

பொன்முகலியாற்றின் கரையில் ஓரிடத்
தில் நெருப்பு உண்டாக்கிக் காடன் பன்றியைக்
காய்ச்ச, திண்ணனார் நாணனை அழைத்துக்
கொண்டு காளத்தி மலைமேலிருக்கும் குடுமி
நாதரைக் காணும் ஆவலில் ஏறிச்செல்கிறார்.
அது உச்சிநேரம் ஆதலால் தேவர்களும் வந்து
தேவ துந்துபியை முழக்கி மானிடர் கண்
களுக்குத் தென்படாமல் குடுமித் தேவரை வழி
பட்டுக் கொண்டு இருக்கின்றனர். புண்ணியம்
செய்திருக்கும் திண்ணனார் காதுகளுக்கு அத்
தேவ துந்துபிகளின் முழக்கம் கேட்கிறது;
அம்முழக்கம் கேட்டதும், திண்ணனாரின் பக்தி
யுணர்வு மேலும் ஓங்கித் தழைத்திட என்பும்
கரையும் வண்ணம் காதல் பொங்கிட மலை
மேல் ஓடி ஏறுகிறார். அவர் ஓடி ஏறும்போதே
அவரைப் பிடித்திருக்கும் மாயையின் பிடிப்புக்
கள் யாவும் நீங்கிப் போய், குடுமித் தேவரைக்
கண்டதும் பக்திப் பரவசமாய் அன்புருவம்
ஆகி விடுகிறார் திண்ணனார் என்று வருணிக்
கிறார் சேக்கிழார் பெருமான்.

''திங்கள் சேர் சடையார் தம்மைச்
சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு
நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட்
டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில்
அன்புருவம் ஆனார்''

''மாகமார் திருக்காளத்தி மலைஎழு
கொழுந்தாய் உள்ள
ஏகநா யகரைக் கண்டார்
எழுந்தபே ருவகை அன்பின்
வேகமா வதுமேற் செல்ல
மிக்கதோர் விரைவி னோடும்
மோகமாய் ஓடிச் சென்றார் .
தழுவினார் மோந்து நின்றார்''.

'பொருப்பினில் வந்தவன்செய்யும் பூசனைக்கு முன்பென்மேல்
அருப்புறுமென் மலர்முன்னை அவைநீக்கும் ஆதரவால்
விருப்புறும்அன் பெனும்வெள்ளக்கால் பெருகிற் றெனவீழ்ந்த
செருப்படிஅவ் விளம்பருவச் சேயடியிற் சிறப்புடைத்தால்''

'உருகியஅன் பொழிவின்றி நிறைந்தஅவன் உருவென்னும்
பெருகியகொள் கலமுகத்தில் பிறங்கியினி தொழுகுதலால்
ஒருமுனிவன் செவிஉமிழும் உயர்கங்கை முதல் தீர்த்த
பொருபுனலின் எனக்கதன் வாயுமிழும் புனல்புனிதம்''

''இம்மலைவந் தெனையடைந்த கானவன்தன் இயல்பாலே
மெய்ம்மலரும் அன்புமேல் விரிந்தனபோல் விழுதலால்
செம்மலர்மேல் அயனொடுமால் முதல் தேவர் வந்துபுனை
எம்மலரும் அவன்தலையால் இடுமலர்போல் எனக்கொவ்வா''

''வெய்யகனற் பதங்கொள்ள வெந்துளதோ எனும்அன்பால்
நையுமனத் தினிமையினில் நையமிக மென்றிடலால்
செய்யுமறை வேள்வியோர் முன்புதரும் திருந்தவியில்
எய்யும்வரிச் சிலையவன்தான் இட்டஊன் எனக்கினிய''

'மன்பெருமா மறைமொழிகள் மாமுனிவர் மகிழ்ந்துரைக்கும்
இன்பமொழித் தோத்திரங்கள் மந்திரங்கள் யாவையினும்
முன்பிருந்து மற்றவன் தன் முகமலர அகநெகிழ
அன்பில்நினைந் தெனையல்லால் அறிவுறா மொழி நல்ல''

இவ்வாறு திண்ணனார் பக்திச் சிறப்பைப் பாங்குற எடுத்துப் பகர்ந்திடும் இறைவர் ''நாளை எம்பூசனை முடித்து ஒளிந்திருந்து பார். எல்லாம் உமக்கு விளங்கும்' என்று சிவகோசரியாருக்கு அறிவுறுத்தி மறைந்துவிடுகிறார். இறைவர் கட்டளையின்படியே சிவகோசரியாரும் பொன்முகலி ஆற்றில் நீராடி, இறைவருக்குத் திருமஞ்சனமும், திருவலங்காரமும், பூசனையும் முறையாக முடித்து, இறைவரால் போற்றிப் புகழப்பட்ட அன்புருவான பக்தரைக் காணும் ஆர்வம் மேலிட மறைந்திருக்கின்றார். முனிவர் வருவதற்கு முன்பாக இறைவருக்கு அமுது கொண்டு வரும்பொருட்டு வேட்டைக்குப் புறப்பட்டிருந்த திண்ணனாரும் முன் நாட்களில் போலவே வேட்டையாடி ஊன் அமுதைப் பதப்படுத்தித் தேக்கிலையில் ஏந்திக் கொண்டு, பொன்முகலி நீரைத் திருவாயிலும் காட்டுமலர்களைத் தம் தலையிலும் தாங்கியவராய் காளத்திநாதருக்குப் பூசனை செய்ய விரைந்து வருகிறார்.

''மாறில்ஊன் அமுதும் நல்ல மஞ்சனப் புனலும்சென்னி
ஏறுநாண் மலரும் வெவ்வே றியல்பினில் அமைத்துக்கொண்டு
தேறுவார்க் கமுத மான செல்வனார் திருக்காளத்தி
ஆறுசேர் சடையார் தம்மை அணுகவந் தணையா நின்றார்''

இறைவருக்கு அமுதுபடைக்கக் காலம் தாழ்த்தி விட்டேனே என்றுமிக விரைவாக வந்த திண்ணனாருக்கு வழியில் தென்பட்ட சகுனங்கள் யாவும் தீயனவாக இருக்க, மனங் கலங்கியவாறு இறைவரை நோக்கி மேலும் விரைந்து வந்தார். அவர் மனம் கலங்கியதற்கு ஏற்பவே சிவபெருமானும் தம் வலது கண்ணில் இரத்தம் பெருக வீற்றிருந்தார். அக் காட்சியைக் கண்ட காயம்பட்ட குழந்தையைக் காணும் பெற்றதாய் எப்படிப் பதைபதைத்துத் துடிப்பாளோ அப்படிப் பதைபதைத்துப் பூமியில் சாய்ந்துவிடுகிறார் திண்ணனார். வாயில் நிரப்பியிருந்த பொன்முகலி நீர் சிந்திப்போக, கையில் வைத்திருந்த வில்லும் ஊன் அமுதும் தரையில் விழ, தலையில் தாங்கியிருந்த மலர்களும் சிதறிவிழ மனம்பதறிப் பூமியில் விழுந்தார் திண்ணனார் என்று சேக்கிழார் பெருமான் அவர்தம் துயரத்தை வருணிக்கிறார்.

'அண்ணலார் திருக்கா ளத்தி அடிகளார் முனிவ னார்க்குத்
திண்ணனார் பரிவு காட்டத் திருநய னத்தில் ஒன்று
துண்ணென உதிரம் பாய இருந்தனர் தூரத்தே அவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு வல்விரைந் தோடி வந்தார்'

'வந்தவர் குருதி கண்டார்; மயங்கினார்; வாயில் நன்னீர்
சிந்திடக் கையில் ஊனுஞ் சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமம் குஞ்சிநின் றலைந்து சோரப்
பைந்தழை அலங்கல் மார்பர் நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார்'

தரையில் விழுந்த திண்ணனார் மிக வேகமாக எழுந்து ஓடிப்போய் இறைவர் கண்ணிலிருந்து பெருகும் குருதியைத் துடைக்கிறார். ஆனால் குருதியோ நிற்காமல் பெருகி வழிந்துவர, இறைவர்க்கு ஊறு செய்தவர் யார் என்பதாகக்கோபித்து வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டு நாலாபுறமும் ஓடித் தேடிப் பார்க்கிறார். ஆனால் அருகில் ஒருவரும் தென்படவில்லை. நல்லவேளை! ஒளிந்திருக்கும் சிவகோசரியாரும் திண்ணனார் கண்களுக்குத் தென்படாதலால் தப்பித்தார். ஏமாற்றத்துடன் திரும்பவும் ஓடிவந்து திண்ணனார் இறைவருடைய திருப்பாதத்தில் வந்து விழுந்து கட்டிக் கொண்டு, கண்ணீர் பெருக்குகிறார்; 'இறைவா! என்ன உமக்கு நேர்ந்தது? யார் உமக்கு இத்தகைய ஊறு செய்தார். 'காட்டில் இறைவர் தனித்திருக்கிறாரே! விலங்கு

களாலோ, அயல் மனிதர்களாலோ துன்பம் நேரிட்டால் என்ன செய்வேன் என்று நான் கலங்கியிருந்ததற்கு ஏற்பவே உமக்கு இத்தகைய துன்பம் நேர்ந்து விட்டதே? இப்போது நான் என்ன செய்வேன்? என்ன செய்வேன்!' என்று கதறியவராய் இறைவர் கண்ணில் தம் இருகைகளை வைத்துப் பெருகும் குருதிப் புனலைத் தடுக்க முயல்கிறார் திண்ணனார். ஆனால் பெருகும் குருதியோ சிறிதும் குறைய வில்லை. 'நல்ல மூலிகைகள் இக்காட்டில் இருக்கும். அதைக் கொண்டு வந்து பிழிந்தால் கண்ணில் குருதி பெருகுவது நின்றுவிடும்' என்பதாக நினைத்து மூலிகைகள் பறித்து வர ஓடுகிறார் திண்ணனார். வாயு வேகத்தை விடவும் மனோ வேகம்வேகமானது அல்லவா? மனோவேகத்தில் ஓடி மருந்துச் செடிகளுடன் திரும்பவும் வருகிறார் திண்ணனார். 'மனத்தினும் கடிது வந்து அம் மருந்துகள் பிழிந்து வார்த்தார்'' என்கிறார் சேக்கிழார் பெருமான். மூலிகைச் சாறு பிழிந்தும் முதல்வரான இறைவர் கொண்ட துன்பம் தீராத திண்ணனார் பழுதுபட்ட கண்ணிற்குப் பழுதில்லாத தம் கண்ணை அப்பினால் துன்பம் தீரும் என்று தெளிகிறார்; மகிழ்கிறார். அம்பினால் தம் வலக்கண்ணை நொடியில் தோண்டி எடுத்து இறைவர் வலக்கண்ணுடன் வைத்துப் பொருத்துகிறார். திண்ணனார் எண்ணம் போலவே இறைவர் கண்ணிலிருந்து பொங்கும் குருதி நின்றுபோக 'நான் அறிவோடுதான் செயல்பட்டிருக்கிறேன்' என்பதாகக் கூறி, இறைவர் துன்பம் தீர்ந்த மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாடுகிறார் திண்ணனார். திண்ணனார் கண் அப்பிய செயலையும் களிப்பினையும் சேக்கிழார் பெருமான் வருணிக்கும் பாடல்கள் இவையாகும்:—

''இதற்கினி என்கண் அம்பால் இடந்தப்பின் எந்தையார் கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவும் அடுக்கும் என்று
மதர்த்தெழும் உள்ளத் தோடு மகிழ்ந்து முன் இருந்துதங்கண்
முதற்சர மடுத்து வாங்கி முதல்வர்தங் கண்ணில் அப்ப''

'நின்றசெங் குருதி கண்டார், நிலத்தினின் றேறப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்து தோள்கள் கொட்டினார்; கூத்தும் ஆடி
நன்றுநான் செய்த இந்தமதி எனநகையும் தோன்ற
ஒன்றிய களிப்பி னாலே உன்மத்தர் போல மிக்கார்''.


திண்ணனார் ஒரு கண் அப்பிய அளவில் தம் சோதனையை முடித்தாரா இறைவர் என்றால் இல்லை. ஒருகண் அப்பிய அற்புதச் செயலைக் கண்டே சிவகோசரியார் திண்ணனாரின் அன்பின் பெருக்கைக் கண்டு உளம் நடுங்கிக் கைகூப்பிய ஆனந்தப் பரவச நிலையில் இருக்க, அவர் இன்னும் வியக்கும் வகையில், தம் மற்றொரு கண்ணில் குருதி வழிய விடுகிறார் சோதித்து ஆட்கொள்ளும் வள்ளலாகிய எம்பிரான். வேடர்கள் அளப்பிலாத தவம் காரணமாக அக்குலத்தில் பிறந்தாலும் பக்தியில் யாவரையும் வெற்றி கொண்ட வள்ளலாகிய திண்ணனார் இறைவர் இடக்கண்ணில் குருதி வரக் காண்கிறார். கண்டதும் 'ஆ'? இது என்ன சோதனை இறைவா!' என்பதாக அலறுபவர், மறுகணமே மகிழ்ச்சியடைந்தவராய் 'மருந்து கண்ட பிறகு எதற்கு நான் மயங்குவேன் இறைவா'? எனது இன்னொரு கண்ணை இடந்து அப்பி, உம் துயரம் தீர்ப்பேன்' என்று கூறி மற்றொரு கண்ணைத் தோண்ட முற்படுகிறார் திண்ணனார்; இடக்கண்ணைத்தோண்டிய பிறகு இரு கண்களும் அற்ற நிலையில் இறைவர் இடக்கண்ணிருக்கும் இடத்தில் கண்ணை அப்புவதில் இடர்ப்பாடு, நேருமே என்று முன்னெச்சரிக்கையோடு கண்ணிருக்கும் இடத்தை அடையாளம் செய்துகொள்ளும் வகையில், எம்பிரானார் இடக்கண் இருக்கும் இடத்தில் தம் இடக்காலை ஊன்றிக் கொண்ட வராக திண்ணனார் அம்பு கொண்டு தம் இடக்கண்ணைத்தோண்ட முற்பட அவருடைய அளப்பரும் பக்திவீரத்தை மெச்சிடும் இறைவர் 'கண்ணப்பா! நில்' 'கண்ணப்பா நில்' 'கண்ணப்பா நில்' என்று மூன்று முறை குரல் கொடுத்த வண்ணம், மறைந்து நிற்கும் சிவகோசரியாரும், இடக்கண்ணையும் இடந்து அப்ப துணிந்து நிற்கும் திண்ணனாரும் காணக் காட்சி தருவதோடு தம் திருக்கரம் கொண்டும் கண்ணப்பர் கரம் பிடித்துத் தடுத்து நிறுத்துகிறார்.

ஒப்பரும் இக் காட்சியை நம் சேக்கிழார் பெருமான் வடித்துக் காட்டும் பாடல்கள் இவை:—

'கண்ணுதல் கண்ணில் தங்கண்
இடந்தப்பிற் காணும் நேர்பா
டெண்ணுவார் தம்பி ரான்தன்
திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி
உண்ணிறை விருப்பி னோடும்
ஒருதனிப் பகழிகொண்டு
திண்ணனார் கண்ணில்ஊன்றத்
தரித்திலர் தேவ தேவர்'

''செங்கண்வெள் விடையின் பாகர்
திண்ணனார் தம்மை யாண்ட
அங்கணர் திருக்கா ளத்தி
அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண்முன் இடக்கும் கையைத்
தடுக்கமூன் றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்கு
'கண்ணப்ப நிற்க வென்றே''

ஆம்[ திண்ணனாராய் இருந்தவருக்கு இறைவர் இட்ட திருநாமம் தான் கண்ணப்பர் என்பது. கண்ணப்பர் இடக்கண்ணும் இடந்து அப்ப முற்பட்ட பக்தி வீரத்தைக் கண்டு சிவகோசரியார் கண்ணுற்று வியப்புற்றதைப் போலவே நான்முகன் உள்ளிட்ட தேவர்கள் யாவரும் கண்ணுற்று வியப்புற்று பூமாரி பொழிந்து கண்ணப்பர் திருச்செயலைப் போற்றுகின்றனர்; மாமறைகளும் 'ஆர்ப்பரித்தன என்று வருணிக்கிறார் சேக்கிழார் பெருமான்.



## சமய குரவர்தம் பெருமை

**ஞானப்பால் கொடுத்து இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றவர் ஞானசம்பந்தர்.**
**சூலை நோய் கொடுத்து இறைவரால் ஆட்கொள்ளப் பெற்றவர் திருநாவுக்கரசர்.**
**ஓலை காட்டி இறைவரால் ஆட்கொள்ளப் பெற்றவர் சுந்தரர்.**
**திருத்தாள் சூடி இறைவரால் ஆட்கொள்ளப் பெற்றவர் மாணிக்கவாசகர்.**

'கானவர் பெருமா னார்தங் கண்ணிடந் தப்பும் போதும்
ஊனமு துகந்த ஐயர் உற்றுமுன் பிடிக்கும் போதும்
ஞானமா முனிவர் கண்டார்; நான்முகன் முதலா வுள்ள
வானவர் வளர்பூ மாரி பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப''

கண்ணப்பருக்கு முன், சிவபெருமானுக்குத் தம் கண் அப்பிப் பூசனை செய்த ஒரு புண்ணிய பக்தர் இருக்கிறார். அவர்தாம் பாற்கடல் துயிலும் திருமால்; கண்அப்பிய திருமாலுக்குத் தம் வலப்பாகத்தை யளித்து சங்கரநாராயண ராகப் பெருமை கொண்டவரான சிவ பெருமான், திருமாலை விடவும் தம்மேல் பக்தி செய்து தம் ஒரு கண்ணை அப்பி, மறு கண்ணையும் அப்ப முனைந்த கண்ணப்பரின் மாறிலா பக்தியைக் கண்டு மகிழ்ந்து போன இறைவர் தாம் 'எம் வலப்பக்கத்தில் நிற் பாயாக' எனக் கண்ணப்பருக்குக் கட்டளை யிட்டருளுகிறார். கண்ணப்பருக்குக் கிடைத்த இப்பேறு வேறு யாருக்குக் கிட்டும்? என்ப தாகப்போற்றுகின்றார் சேக்கிழார் பெருமான்.

'பேறினி இதன்மேல் உண்டோ! பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண் இடந்தப்ப உதவும் கையை
ஏறுயர்த் தவர்தங் கையால் பிடித்துக்கொண்டு என்
மாறிலாய் நிற்க என்று மன்னுபேர் அருள் புரிந்தார்''.

இத்தகைய கண்ணப்ப நாயனாரின் புகழைப் பேசாத நூல் ஒன்றும் நூல் அல்ல; கண்ணப்பரின் பக்திச் சிறப்பைப் போற்றிக் கூறாத நாவொன்றும் நாவல்ல. எல்லா நூல் களும், எல்லா பக்தரும் போற்றும் சிறப்பினா லேயே கண்ணப்பரைக் 'கலை மலிந்த சீர் நம்பி கண்ணப்பர்க்கு அடியேன்' என்றுபோற்றி உள்ளார் சுந்தரமூர்த்தி நாயனார். அத்தகைய கண்ணப்பரின் வரலாற்றைப் பன்முறையும் படித்து மகிழ்ந்து, கண்ணப்பர் கண்ணுதலார் பால் காட்டிய பக்தியில் ஆயிரத்தில் ஓர்பங்கா வது நாமும் அனுதினம் காட்டி, இறையருளைப் பெற்று உயர்ந்திட முயல்வோமாக.

[7-ஆம் பக்கத் தொடர்ச்சி]

தீர்த்தாயே! கவலைப் படாதே வேலை செய்கிறேன்' எனக் கூறி வைகைக் கரையில் சென்று வந்தியாள் என்று பெயர் கொடுத்து வேலை செய்யலானார். மண்ணை வெட்டுவார், தலை மேல் வைப்பார், அதிகமென்று கொட்டுவார். குறைத்துக் கொண்டு போவார். இப்படி ஓரிரு கூடைகள் மண் சுமந்ததால் கை கன்றிப்போக, தலையில் வடு ஏற்பட, காலில் ரத்தம் கட்டிக் கொள்ள, ஓய்வெடுத்துக் கொள்ள எண்ணி ஒரு மரத்தடியை அடைந்தார். மீனாட்சி அம்மையை ஏமாற்றிக் கங்கையை காண வந்தவர் இப்போது இருவரும் ஏமாறும்படியாக காரியம் செய்துவிட்டார். அவரது உடலை வேறொரு பெண் தீண்டிக் கொண்டேயிருந்தாள்.

'தருமேவு மலை மகளும் சலமகளும் அறியாமல்
திருமேனிமுழுது நிலமகள் தீண்டித்
திளைப்பெய்த
குருமேவு மதிமுடியைக் கூடையணை மேற்
கிடத்தி
வருமேருவளை யார்தாம் வடிவுணர்ந்து
துயில்கின்றார்'

எழுந்து ஆடுவார், பாடுவார். சிறிது நேரம் கழித்து மிக இளைத்தவர் போல் கிழவியிடம் வந்து பிட்டு வாங்கிச் சாப்பிடுவார், மண், பெண், பொன் முதலானவற்றில் ஆசை நல்கியவர்கள் ஞானக்கண் கொண்டு காண வேண்டிய திருவிளையாட்டை ஊனக் கண்ணுள்ள உலகத்தவரும் காணுமாறு செய்தார்.

வந்தியின் பங்கு அடைபடாதிருந்தது கண்டு, அரசனது ஆட்கள் 'வந்தியின் ஆள் யார்!' என விசாரித்து, அந்தக் கூலியாளைக் கண்டு 'எல்லாப் பங்குகளும் அடைப்பட்டுள்ளன. உன் பங்கு அடைக்கவில்லையே? ஏன்' என்று கேட்க, பதில் சொல்லாது இறுமாப்புடன் இருந்தார். 'பித்தனோ? பேய் பிடித்த உன் மத்தனோ! வந்தியை ஏமாற்ற வந்த எத்தனோ! இந்திரசாலம் காட்டும் சித்தனோ!' எனப் பேசிக் கொண்டனர்.

'பித்தனோ இவன்தான் என்பர்; அல்லது
பேய்க்கோட்பட்ட
மத்தனோ இவன்தான் என்பார்; வந்தியை
அலைப்பான் வந்த
எத்தனோ இவன்தான் என்பார் இந்திரசாலம்
காட்டும்
சித்தனோ இவன்தான் என்பார் ஆரென்று
தெளியோ மென்பார்''

'மன்மதனும் ஆசை கொள்ளக் கூடிய அழகனாக உள்ளான். இவன் வந்திக்குக் கூலியாளாக வந்தது எப்படி!' என்பார். 'தாய் தந்தையற்ற அனாதை போலும்! வேலை செய்ததே இல்லை போலும்! அது மேனி வாடியதிலிருந்தே தெரியவில்லையா' என்பார்.

'கரும்பனும் விரும்ப நின்ற கட்டழகுடை
யானென்பார்
அரும்பெறல் இவன்தான் வந்திக்கு ஆட்செய்த
தேவனோ என்பார்
இரும் பெருங்குரவர் அற்ற தமியனோ என்பார்
வேலை
புரிந்தவன் அல்லன் என்பார் அது மேனி
புகலுமென்பார்''

கூலியை வாங்கிக் கொண்டான். வேலைக் கணக்கிலும் பதிந்து கொண்டான். வேலையும் செய்யமாட்டேன் என்கிறான். நல்ல வார்த்தை சொன்னாலும் கேட்கவில்லை. ஏதாவது சொன்னால் பாறையில் அடித்த முளை மாதிரி நிற்கிறான். அரசனிடம் சொல்லுவோம் வாருங்கள்' என்று போனார்.

'கூலியும் கொண்டான் வேலைக் கணக்கிலும்
குறிக்கச் சொன்னான்
வேலையும் செய்யான் இன் சொல் விளம்பினும்
கேளான்; கல்லின்
பாலறை முளையே யாகிப் பராமுகம் பண்ணி
நின்றான்
ஏல நாம் இதனை வேந்தர்க்கு உணர்த்துவோம்
என்னப் போனார்'

அரசனிடம் சென்று 'அரசே! மன்மதனையும் வெல்லக்கூடிய ஒருவன் வந்தியின் ஆளென்று வந்து பதிந்து கொண்டான். அரசகுமாரன் மாதிரி ஆடிப்பாடுகிறானே தவிர வேலை செய்ய வேண்டுமென்று மனத்திலும் நினைக்கவில்லை. அவனை அடிக்கலாம் என்று பார்த்தோம். அவனது அழகுகுன்றி விடுமே என அடிக்க அஞ்சி இங்கு வந்தோம் என்றனர். அது கேட்டு கோபமடைந்த அரசன், வைகைக் கரையை அடைந்து பார்த்தபோது, எல்லோருடைய பங்கும் அடைபட, வந்தியின் பங்கு அடைபடாமலிருந்ததுடன், அடைக்கப்பட்ட அடுத்த கரையையும் உடைத்துக் கொண்டிருந்தது. 'எங்கே அந்த வந்தியின் ஆள்!' எனக் கேட்க, அரசனுடைய ஆட்கள், கூலியாளைக் கொண்டு வந்து அரசன் முன் நிறுத்தினார். கூலியாளாக வந்தது யார் என்று அறியாத பாண்டியன், பொன் பிரம்பெடுத்து, கூலியாளின் முதுகில் வீசி அடித்த காலத்தில் ஒரு கூடை மண்ணை எடுத்து உடைப்பில் கொட்டி மறைந்தான் கூலியாளாக வந்த பெரியோன்.

'கண்டனன் கனன்று வேந்தன் கையிற் பொற்
பிரம்பு வாங்கி
அண்டமும் அளவிலாத உயிர்களும் ஆகமாகக்
கொண்டவன் முதுகில் வீசிப் புடைத்தனன்
கூடையோடு
மண்தனை உடைப்பில் கொட்டி மறைந்தனன்
நிறைந்த சோதி''

கூலியாளின் முதுகில் பட்ட அடி பாண்டியன் முதுகில் பட்டது. ராணிகள் உடம்பிலும் ராஜ குமாரர்கள் உடம்பிலும் பட்டது. பாற்கடலில் பள்ளி கொண்ட நாராயணனின் முதுகில் அடி விழத் திடுக்கிட்டு அப்பெருமான் எழுந்தான். தேவர்களும் மற்றவர்களும் உடம்பில் பட்ட தழும்பு என்ன என்று அறியாது மயங்கினர். அந்த நேரத்தில் வந்திக்கு இறைவன் முக்தியளித்தனர். இறைவன் அசரீரியாக, ''பாண்டியா! உன் பொருளெல்லாம் தரும வழியில் ஈட்டப்பட்டன. புனிதமான அப் பொருளை வாதவூரான் எனக்கும் என்னைச் சேர்ந்தவருக்கும் அளித்தான். அதையறியாது அவ்வுத்தமனைத் துன்புறுத்தினாய். காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கித் தந்து அவற்றைத் திரும்ப அழைத்துக் கொண்டோம். மீண்டும் வாதவூரனைத் துன்புறுத்தியதைத் தாங்காது வைகையில் 'வெள்ளம் வரச்செய்தோம். வந்திக்கு கூலியாளாக வந்து, மண்

போட்டுக் கரையை உயரச் செய்து அவளுக்கு முக்தியளித்தோம். இவ்வளவும் வாதவூரானுக் காகவே நிகழ்ந்தது' எனக் கூறினார். மன்னன் வாதவூரரிடம் மன்னிப்புப் பெற்றான். வாத வூரர் தில்லையடைந்தார்.

ஆலவாயப்பனின் கோயிலையடைந்த மன்னன் 'இறைவனே! அருச்சுனன் பாசு பதாத்திரம் வாங்கின அன்று சிவபெருமா னென்று அறியாமல் உம்மையடித்தான். சாக் கிய நாயனார் உள்ளன்புடன் கல்லால் அடித் தார். அந்தத் திருமேனியில் பாவியான நான் அடித்த பிரம்பும் பட்டதே.

'அடையாளம் படவொருவன்அடித்த
கொடுஞ்சிலைத் தழும்பும்

தொடையாக ஒரு தொண்டன் கொடுத்
தெறிந்த கல்லும்போல்

கடையானேன் வெகுண்டடித்த கைப் பிரம்பும்
உலகமெல்லாம்

உடையானே பொறுத்ததோ உன்னருமைத்
திருமேனி'

உன் முதுகில் பட்ட அடி என் முதுகிலும் பட்டதே. நானும்உன் திருமேனி ஆனேனோ! உன்னருளால் எனக்கு நீதியே உருவான ஒரு பெரியோன் மந்திரியாயிருந்ததை அறியாமற் போனேனே! தாயில்லா நீ,எங்கள் ஊர்ப்பிட்டு வாணிச்சியைத்தாயாகக் கொண்டாயோ!சிறுத் தொண்டரிடம் பிள்ளைக் கறியும், திண்ண னான வேடனிடம் ஊன் கறியும் பெற்ற நீ எங்கள் ஊர் பிட்டு வாணிச்சியிடம் பிட்டு வாங்கித் தின்று, என்றும் அடியார்க்கு எளிய வன் என்பதைக் காட்டினாயோ! நரிகளைப் பரியாக்கிக் கொண்டு வந்த உனக்கு நான் கொடுத்த வெள்ளைத் துணியை ஏற்றாயே! நீ யார் என்று அறியாது, குதிரைகளின் மீதுள்ள ஆசையால் இறுமாப்பு அடைந்திருந்தேனே! பிரமன் உன்திருமுடி தேடிச் சென்றான். திருமால் உன் திருவடி தேடிச் சென்றான். மண் சுமக்கும் கூலியாளர்களாக அவர்கள் வந்திருந்தால் உன் அடிமுடி கண்டுஆனந்தப் பட்டிருக்கலாமே! எனக்குக் கிடைத்த பேறு அவர்களுக்குக் கிடைக்கவில்லையே.

'விண் சுமக்கும் புள்ளாய் விலங்காய்க் கழன்று
மனம்

புண் சுமக்கும் சூழ்ச்சி வலியுடைய புத்தேளிர்

மண்சுமக்கும் மள்ளராய் வந்திலரே வந்தக்கால்

பண் சுமக்கும் சொல்லிபங்கன் பாதமுடி
காண்பாரே''

என்றெல்லாம் உருகிக் கண்ணீர் விட்டு வணங்கி னான். சின்னாட்கள் சென்று தன் மகனான கூன் பாண்டியனுக்கு முடி சூட்டி வைத்துச் சிவ பெருமான் திருவடியடைந்தான் பாண்டியன்.

வாதவூரர் தில்லையை அடைந்து புத்தரை வாதில் வென்றார். பின்னர் இலங்கை அரச னது ஊமைப் பெண்ணைச் சிவசம்பந்தமான சில கேள்விகள் கேட்க, அந்தப் பெண் பதில் சொல்லித் தனது ஊமைத் தன்மை நீங்கப் பெற்றாள். அந்த வினா விடைகள் திருவாசகத் தில் 'திருச்சாழல்' என்ற தலைப்பில் சேர்க்கப் பெற்றுள்ளன. வாதவூரர் பாடிய பாடல்களை ஒரு அந்தணர் எழுதிக் கொண்டே வந்தார். திருவாசகம் முடிந்த பின் 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று கூற, மணி வாசகர் 'திருக்கோவையார்' என்று நூலைப் பாடினார். அவற்றையும் எழுதி முடித்த அந்தணர் நூலின் முடிவில் 'அழகிய திருச் சிற்றம்பலமுடையான் கையெழுத்து' என எழுதி மறைந்தார். இறைவனே தனது நூலை எழுதினார் என்பது கண்ட மணிவாசகர் உருகி னார். திருவாசகத்திற்குப் பொருள் கேட்டவ ரிடம் தில்லைக் கூத்தனான ஸ்ரீசிவகாமிவல்லி சமேத நடராஜப்பெருமானையே பொருளாகக் காட்டி, அப்பெருமானின் திருவடிகளில் கரைந்து கலந்தார்.

''திருவாசகத்திற்கு உருகாதவர் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது பழமொழி. மேனாட்டிலிருந்து வந்த டாக்டர் போப் என்ப வர் திருவாசகத்தை படித்து உருகி அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். தமிழ் மீதுள்ள அன்பினால் இங்கு 'ஒரு தமிழ் மாண வன் உறங்குகிறான் 'எனத் தனது கல்லறையில் எழுதுமாறு கூறினார். திருவாசகம் உலக நூல். திருவாசகம் பாடிய மாணிக்க வாசகர் பிறந்த நாட்டிலே பிறந்த நாமெல்லாம் பாக்கிய சாலிகள். தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் திருவாசகத்தைப் படிப்பதுஒரு உரிமை,கடமை. கிடைத்தற்கரிய பெரும் பேறு, அப்பேற்றை யடைய அருளுமாறு இறைவனை வணங்கு வோம்.

வாதவூரர், தென்னவன் பிரமராயன், மாணிக்கவாசகருக்குப் பரஞ்சோதி ஒரு பெயர் இட்டார். வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே என இறைவனை அழுது அழுது உருகி அவனையடைந்ததால் 'அழுதடி அடைந்தஅன்பன்' என்பது பரஞ்சோதி சூட்டிய திருநாமம்.

''எழுதரு மறைகள் தேறா இறைவனை
எல்லில் கங்குல்

பொழுதறு காலத்தென்றும் பூசனை விடாது
செய்து

தொழுதகை தலைமேலேற துரும்பு கண்ணீருள்
மூழ்கி

அழுதடியடைந்த அன்பன் அடியவர்க்குஅடிமை
செய்வாம்''.

[தொடரும்]

# கரூர் ஆநிலையப்பர் ஆலயம்

ஈரோடு த. விசுவநாதன்

**இறைவன் : ஆநிலையப்பர்**

**இறைவி : கருணை நாயகி**

இக் கரூர், கொடுமுடியிலிருந்து திருச்சி செல்லும் சாலையில் 26 கி. மீ. தொலைவில் உள்ளது. இரயிலடி உண்டு. இதுவும் கொங்குநாட்டுத் திருத்தலங்களில் ஒன்றாகும். இப்பெருமானின் திருநாமம் 'ஆநிலையப்பர்' என்பதாகும். ஆம்; கருவூரிலே தோன்றுகின்ற உயிரினங்கள் நிலைபெற வைக்கின்ற அப்பன்- இந்தப் பிறப்பிலே தோன்றிய நம் வாழ்வு உடல்நலம் நிலைபெற தந்தை பொறுப்பேற்கிறார். அதுபோலப்பிறவித்தாறும் தொடர்ந்து வந்து உயிருக்கு உதவி, மீண்டுமோர் கருவூரில பிறக்காமல் நம்மை ஆட்கொள்ளும் பெருமான் எனவே 'ஆநிலையப்பர்' என்றனர். ஆ என்றால் உயிரைக் குறிக்கும். இத்திருவூரிலே தோன்றிய பெருமகனார்தாம் கருவூர்த் தேவர் என்னும் திருவிசைப்பா பாடியருளிய ஆசிரியர். இவர் தஞ்சை இராசராசன் என்ற மாமன்னனுக்குச் சைவம் தழைக்க உறுதுணையாய் இருந்து தஞ்சைப் பெருவுடையார்த் திருமேனியை தஞ்சை இராசராசேசுவரத்தில்நிறுவி குடமுழுக்கு நடாத்திய பெருமகனார் ஆவார். அவர் தோன்றிய ஊர் இக் கரூர்.

## திருத்தொண்டர் திருமுடி

இக்கரூர் சோழப் பேரரசர்களின் துணைத் தலைநகரங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. சோழ மாமன்னர்களுள் ஒருவராய்த் திகழ்ந்தவர் புகழ்ச் சோழர் ஆவார். அவர் 63 நாயன்மார்களில் ஒருவர். இவர் ஒரு சமயம் கருவூரிலே வந்து தங்கி சிற்றரசர்களின் திரையைப் பெற்றார். அதிலே அதிகன் என்ற சிற்றரசன் தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான். அவன் திரை தரவில்லை என்ற செய்தியை புகழ்ச் சோழர் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். மன்னர் தகடூரை நோக்கிப் படையெடுக்க ஆணை பிறப்பித்தார். படை சென்றது; வென்று வந்தது. மாமன்னன் புகழ்ச் சோழருக்குக் காணிக்கையாக, எதிரிகளைப் பந்தாடிய வீரர்களின் தலைகளைக் கொணர்ந்தனர் படைத் தலைவர்கள். அத் தலைகளில் ஒரு தலை சடாமுடியோடும் திருநீறோடும் இருந்ததனைக் கண்டார் புகழ்ச்சோழர், கண்டதும் துடிதுடித்தார்.

என் ஆட்சியில் ஒரு திருத்தொண்டர் தலைபோவதா? அதுவும் அத்திருத்தொண்டர் திருத்தலை எனக்குக் காணிக்கையா? எதிரி நாட்டுப் படையில் என்ன காரணத்தாலோ அவர் சேர்ந்திருக்கலாம். என் உணர்வுகளை என் மனவோட்டத்தை உணரவில்லையே படையினர். ஆட்சியே போனாலும் பரவாயில்லை. ஆண்டவனின் திருத்தொண்டர் தலைகாக்க வைத்திருக்க வேண்டுமென வேதனைப்பட்டார். அமைச்சர் மற்றும் தளபதிகளை அழைத்து ஆநிலையப்பர் திருக்கோயில் திருமுன் தீ வளர்க்கச் சொல்லி ஆணை பிறப்பித்தார்.

நீர் தாங்கும் சடைமுடியார் திருத்தொண்டர் திருமுடியை கனக மணித்தட்டிலே வைத்தெடுத்து 'தார்தாங்கும் திருமுடியார் வாழ்வதனை வாங்க, நான் பார்தாங்க வந்தேனோ பழி தாங்குவேன்' என்று சிந்தை நொந்து பழியோடு வாழ்வதினும் பழிதுடைக்க முடிவெடுத்து அத்திருமுடியிருந்த கனக மணித் தட்டதனைக் கரத்தெடுத்து தீயை வலம்வந்து தீயிலே இறங்கினார். தீத்தெய்வம் கைதொழுது ஏத்த வானவர்கள் பூ மழை பொழிய ஆநிலையப்பர் விடையின் மீதுகாட்சி கொடுத்து புகழ்ச் சோழருக்கு அருள் செய்த திருத்தலம் இக்கரூர். இப்புகழ்மிக்க புகழ்ச் சோழர் வாழ்வில் ஒரு நாள்: இவ்வூரிலே சிவகாமி ஆண்டார் என்ற சிவபக்தர் வாழ்ந்தார். நாள்தோறும் முன்னவனாரின் பூசைக்குரிய திருமலர்களைக் கொய்து அவனை அலங்கரித்து அவன் அழகைக் கண்டு களித்தார். எப்போதும் போல அன்றும் அதிகாலை எழுந்து நீராடி, பெருமானுக்குரிய நாண்மலர் கொய்து குடலையை நிரப்பி ஆலயத்தை நோக்கி வந்து கொண்டு இருந்தார். அன்று அட்டமி நாள். பட்டத்து யானை நீராட்டி அலங்கரிக்கப்பட்டு அரண்மனையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. யானை திடீரென மதங்கொண்டு பாகர்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டுத் தறிகெட்டு ஓடியது. தெருவிலே மலர்க் கூடையோடு இறைவன் திருநாமத்தைச் சொல்லிக் கொண்டு சென்று கொண்டிருந்த சிவகாமி ஆண்டாரைக் கீழே தள்ளி அவரது பூக்குடலையைப் பிடுங்கிஎறிந்து காலிலே போட்டு மிதித்தது. தான் விழுந்ததனைப் பெரிதுபடுத்தாத அத்தொண்டர், பெருமான் பூசைக்குரிய மலர்கள் பாழ்பட்டதே எனக் கதறி அழுதார். சேக்கிழார் பாடல்;

''ஆறும் மதியும் அணியும் சடை மேல்
ஏறும் மலரைக் கரி சிந்தியதே
வேணுள் நினைவார் புரம் வெந்தளியச்
சீறும் சிலையாய் சிவதா! சிவதா!''

என ஓலமீட்டார்.

## வீரத் திருத் தொண்டர்

அவலக் குரலைக் கேட்டார் ஒரு சிவபக்தர். சிவகாமி ஆண்டாரிடம் நடந்தவற்றைக் கேட்டார். சிவகாமி ஆண்டாரின் மலர்த் தொண்டிற்கு முட்டுவித்த பட்டத்து யானையைக் குறித்துச் சினம் கொண்டார். மழுவாளை

எடுத்துக் கொண்டு ஓடினார். யானையைக் கண்டார்-அது பட்டத்து யானை-மாமன்னரின் மரியாதைக்குரியது-போற்றுதற்குரியது என்பதனை மறந்தார். மன்னனின் தண்டனையையும் மறந்தார். திருத்தொண்டிற்கு அது செய்த இடையூறே தலை நின்றது. கையிலிருந்த மழுவாளைக் கொண்டு பட்டத்து யானையின் துதிக்கையை, மலர்க் குடலையைப் பறித்துக் கீழே எறிந்த அந்தத் துதிக்கையை வெட்டி வீழ்த்தினார் கதறி வீழ்ந்து இறந்தது பட்டத்து யானை. பாகரும் பாதுகாவலரும் தொண்டரை எதிர்த்தனர். அவர்களையும் வெட்டி வீழ்த்தினார். அத் திருத்தொண்டர். அவர்தான் எறிபத்தர்என்ற வீரத்திருமகனார். மற்றவர்கள் ஓடிச்சென்று மன்னவரிடம்செய்தி சொன்னார்கள். பகைவர்கள் யாரோ இப்பழி செய்தனர் என்று பதைப்போடு படைகள் சூழ சம்பவம் நடந்த இடத்தை நோக்கி வந்தார். மாமன்னர் புகழ்ச் சோழர்.

## எறிபத்தரும் காந்தியமும்

பட்டத்து யானையை வெட்டி வீழ்த்திய எறிபத்தர் ஓடி ஒளியவில்லை. செயல் செய்தார். அதற்குரிய பலனிலிருந்து தப்ப நினைத்திருந்தால் எங்கோ சென்றுமறைந்திருக்கலாம். ஆனால் எறிபத்தர் பலனுக்குப் பயப்படாமல் காத்திருந்தார். பட்டத்து யானையை வெட்டி வீழ்த்தினால் என்ன நடக்கும் என்பதனை அறிந்து அதற்குரிய தண்டனையைக் கண்டு அஞ்சாது அங்கேயே காத்திருந்தார்.

*1942*-ல் நடைபெற்ற புரட்சியைப் பற்றி காந்தியார் கூறினார். தண்டவாளத்தைப் பிடுங்கு; நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. தண்டவாளத்தை அப்புறப்படுத்தி விட்டு அங்கேயே கொடியோடு காத்திரு; கிடைக்கும் தண்டனையை எதிர்நோக்கி நில். கோழையைப் போல் ஓடி ஒளியாதே என்றார். அண்ணலின் போராட்டத் தத்துவத்தை ஏழாம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் செயல்படுத்தினார் எறிபத்தர்.

புகழ்ச்சோழர் செய்தி யறிந்து எறிபத்தரிடம், 'அன்பரே மலர்த் தொண்டிற்கு இடையூறு செய்த பட்டத்து யானையையும் பாகனையும் பாதுகாவலரையும் வெட்டி வீழ்த்தியது சரி. அதற்குரிய உரிமையாளரான நானும் தண்டனைக்குரியவனே. மக்கள் செய்த பிழைக்கு மன்னவனே பொறுப்பு. மன்னவன் கூடமை, தன்னால், தன் பரிசனத்தால் ஊனமிகு படைத்திறத்தால், கள்வரால், பிற உயிர்கள் தம்மால் ஆன பயம் தீர்ப்பான் அல்லனோ அரசன். என் படைத்திறத்தால் ஏற்பட்ட பிழைக்கு நானே பொறுப்பு. தங்களது புனித வாளால் என்னை வெட்டுவது தகாது. எனவே இந்த என் உடைவாளால் வெட்டுமென'த் தம் 'உடைவாளை உருவி நாயனாரிடம் கொடுத்தார்.

எறிபத்தர் புகழ்ச் சோழரின் அன்பு உள்ளம் கண்டு துடித்தார். இத்தகைய பெரு தொண்டருக்கு ஊறு செய்தேனே என வருந்தி உடைவாளால் தன்னை வெட்டிக் கொள்ள முயன்றார். புகழ்ச் சோழர் எறிபத்தரின் கையைப் பிடித்துத் தடுத்தார். அப்போது வானில் 'உங்கள் திருத்தொண்டின் சிறப்பை ஊரறிய உணர்த்த நாமே செய்தோம்' என அறிவித்து பட்டத்து யானையையும் பாதுகாவலரையும், பாகரையும் உயிர்ப்பித்தார் பெருமான். எறிபத்தர், புகழ்சோழர், சிவகாமி ஆண்டார் ஆகிய மூவரும் ஆநிலையப்பரை வழிபாடு செய்தனர். அளவிலா மகிழ்ச்சியோடு சிவகாமியாண்டார் தம் மலர் தொண்டைச் செய்து வந்தார். இந்த மலர்த் தொண்டைக் குறிப்பால் ஞானசம்பந்தர் தம் திருப்பாடலில் 'தொண்டரெல்லாம் மலர் தூவி ஏத்த' என்று சிறப்பித்துப் பாடினார்.

## நஞ்சுண்ட பெருமான்

தொண்டர்கள் எல்லாம் நாள் மலர் கொண்டு பெருமானைப் போற்றி வழிபாடு செய்கின்றனர். இந்தப் பெருமான் எது கொடுத்தாலும் ஏற்பானா? என்ற வினா எழுவது இயற்கை. ஆனால் பெருமான் மலரை மட்டுமா ஏற்கின்றார். தேவர்களும் அசுரர்களும் மேருமலையையே மத்தாகவும் ஆதி சேடனையே கயிறாகவும் கொண்டு திருப்பாற் கடலை கடைந்தனர். அப்போது அமிழ்தம் வந்தது. அனைவரும் ஏற்றனர். ஆனால் ஆலகாலவிடம் வந்தது. யாரும் ஏற்காது தேவாதி தேவர்கள் எல்லாம் எழுந்தோடினர்.

திருமால் அவ்விட வேகம் தாங்காது கருத்த மேனியானார். அவ்விடத்தை ஏற்று உண்டு விழுங்காது கண்டத்திலே நிறுத்தினான் நம்பெருமான். அந்த நஞ்சுண்ட பெருமான் எங்கே உள்ளான் தெரியுமா? அவன் உயிருக்குயிராய் நம்மோடும் உள்ளான். நஞ்சுண்ட பெருமான் அதனால் கசப்பரோ என்று எண்ண வேண்டாம். 'கரும்பினில் கட்டி போல்வார் கடவூர் வீரட்டனாரே' என்பார் அப்பரடிகள். அப்படி கற்கண்டாய் இனிப்பார். அந்த கற்கண்டுப் பெருமான் கருவூர் ஆநிலை ஆலயத்திருக்கும் தேவர் பிரான். அப்பிரான் நமக்கு அருள் செய்ய அன்போடு காத்திருக்கிறார். அவர் அருளை நாடி நம் அன்பை அளிப்போம் என்று பாடுகிறார் திருஞானசம்பந்தர்.

சம்பந்தர் (பதிகம் 1)

'தொண்டர் எலாம் மலர் தூவி ஏத்த நம்

கண்டலாருயிர் ஆய தன்மையர்

கண்டனார் கருவூருள் ஆ நிலை

அண்டனார் அருள் ஈயும் அன்பரே''

கந்தபுராணம் கூறும் தத்துவப் பொருளையும் பின்வருமாறு ஆன்றோர்கள் தெளிவுபடுத்துகின்றனர்.

| | | |
|---|---|---|
| சூரபன்மன் | — | ஆணவமலம் |
| சிங்கமுகன் | — | கன்ம மலம் |
| தாரகன் | — | மாயாமலம் |
| வேல் | — | ஞானம் |

ஞானபண்டிதன் ஆகிய முருகன், ஞானமாகிய வேலால் மும்மலங்களைக் கொன்று, ஆன்மாக்களாகிய நம்மை பந்தங்களிலிருந்து விடுவிக்கிறார் என்பதே கந்தபுராணம் உணர்த்தும் நுண்பொருளாகும். இன்னும் கந்தபுராணத்தில் வரும் கிரௌஞ்சகிரி என்பது பிறவித் தளையை உணர்த்துகிறது. மும்மலங்களில் உழலுவார் பிறவியாகிய தளையிலிருந்து விடுபடுவது இயலாது; நம் அறிவை மயக்கி, ஆசாபாசங்களில் ஆழ்த்தி பிறவித் தளையில் மாயைகட்டுப்படுத்துவது போலவே, கிரௌஞ்சகிரி விடுபடும் வழி இன்னதென அறியாமல் தேவர்களை மயக்கியது. ஆனால் முருகப்பெருமானின் ஞானவேல் கிரௌஞ்ச கிரியைத் துளைத்து தேவர்களை மீட்டதைக் கந்த புராணத்தில் காண்கிறோம். அதைப் போலவே முருகரை வழிபட்டால் நம்மை மயக்கும் கிரௌஞ்சகிரியாகிய பிறவி மயக்கம் தீர்ந்து, முருகரின் திருவடிப் பேற்றை அடையலாம் என்பதையும் கந்தபுராணம் மிக நுட்பமாக உணர்த்துகின்றது.

'முடியாப் பிறவிக் கடலில் புகார் முழுதும்
கெடுக்கும்
மிடியாம் படியில் விதனப் படார் வெற்றிவேல்
பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமான் அவுணர் குலம்
அடங்கப்
பொடியாக்கிய பெருமான் திருநாமம்
புகல்பவரே''

என்று கந்தர் அலங்காரத்தில் அருணகிரிநாதரும் கிரௌஞ்சகிரி பொடிபட்டதைப் போல் முருகரை வணங்கும் அடியார்களின் பிறவித் தளையும் பொடியாம் என்று உணர்த்தியிருப்பதைக் காண்க.

''திருப்போரூர் சந்நிதி முறை'' பாடிய சிதம்பர சுவாமிகளும் முருகரின் திருவடியாகிய தோணியைப் பற்றிக் கொண்டால் பிறவியாகிய கடலை எளிதாக நீந்திக் கடந்து விடலாம் என்று கூறியுள்ள பாடல் இங்கு நினைந்து மகிழத்தக்கது.

'மயிலும் அயிலும் கொண்டு வன்பகை
தணிக்கலாம்
மலரடி தோணிகொண்டுன்
மாறாத பவசலதி ஏழும் கடக்கலாம்
வானாடு தொழ வாழலாம்
வெயிலொளியும் நிகரலவெனப் புகல மெய்ஞ்
ஞான
மிக்கவொளி பெற்றுய்யலாம்
வீடகத்து உலையா திருந்து அமுதருந்தலாம்
மிருதுகள் சிறை கடியலாம்.
குயிலனைய மொழியார் முகத்தினுக்
கொப்பெனமுன்
கூறாத பெருமையுறமை
கொடிய கயநோய் அகன்று எப்பொழுதும்
ஒல்காத
குலிசமென வடிவு பெறலாம்

அயிலை முளரிக் கரம்கொண்ட சேவகனுடன்
அம்புலி ஆட வாவே!
அருமறையின் ஒளிநிலவு சமரபுரி முருகனுடன்
அம்புலி ஆட வாவே!'

என்ற இந்தப் பாடல் முருகப் பெருமான் அடியார்க்கு அருளும் நலங்களை எல்லாம் ஒருசேர தொகுத்துக் கூறுகின்றது.

கந்தர்சஷ்டிப் பெருவிழாவின்போது விரதம் இருந்தால் இகபர நலங்கள் யாவற்றையும் ஒருங்கே பெற்று உய்யலாம் என்பது திண்ணம். கந்தர் சஷ்டி விரதம் இருந்த நாகன் தத்தை வேடுவர் தம்பதியருக்கு மூவுலகும் போற்றத் தக்க கண்ணப்ப நாயனார் மகனாகப் பிறந்தருளினார் என்பதைப் பெரியபுராணம் காட்டுகிறது. கந்தர்சஷ்டி விரதம் இருந்து முருகரை வழிபட்ட முசுகுந்த சக்கரவர்த்தி மூவுலகும் வெற்றி கண்டு சிறப்பினைப் பெற்றார் என்பதைக் கந்த புராணம் கூறுகிறது.

கந்தக் கடவுள் தமிழ்க் கடவுள்; முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் அருட் கடவுள்; ஏதுபிழை செய்தாலும் தீது புரியாத கருணைக் கடவுள். அத்தகு அன்புருவான அருட்கடவுளை யாவரும் போற்றி வணங்கி இகபர நலங்கள் யாவும் பெற்று இனிதே வாழ்ந்திடுவோமாக.

''ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீர் அடியார் எல்லாம்''

''மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
'திருக்கைவேல் போற்றி போற்றி'

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை. சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் ந. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002